விலை ரூபா 20 | பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 30 | கதிர் 186 | வள்ளுவர் ஆண்டு 2046 | வைகாசி 18, திங்கட்கிழமை 01.06.2015

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

ஏழைகள் பணத்தைக் கூட விடவில்லை கடந்த அரசு

பக். 20

# போதைப் பாவனையை வடக்கில் திட்டமிட்டே அறிமுகம் செய்தார்கள்

## வடமாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 01
எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி ஒரு காலத்தில் அரசுகளையே ஆட்டிப் படைத்து வந்துள்ளனர். அப்போதிருந்த அரசுகளால், வெளிநாட்டு உதவியைப் பெற்று பெரும் செலவுடன்தான் அவர்களை அழிக்க முடிந்தது. தமிழ் இளைஞர்கள் இனியும் ஒன்று சேரக் கூடாது. ஒருமித்துச் செயற்படக் கூடாது. கல்வியில் சிறந்து விளங்கக்கூடாது. சுதந்திர எண்ணங்கள் அவர்கள் மனதில் எழக் கூடாது. விடுதலை வெறி அவர்களுள் கொழுந்து விட்டு எழக் கூடாது. அவர்களை நடைப் பிணங்களாக்க வேண்டும் என்ற எண்ணம், சில அதிகார பீட அலுவலர்களிடமும், அரசியல்வாத அமைச்சர்களிடமும் எழுந்தது. வடக்கு - கிழக்கு இளைஞர்கள் பலரை அழித்து ஒழித்து விட்டோம். ஆனால் அவர்கள் மீண்டும் எழமாட்டார்கள் பக்.29



மேலும் படங்கள் 5, 6ஆம் பக்கங்களில்

## வற்றாப்பளை அம்மனுக்கு வருடாந்த பொங்கல் இன்று

முல்லைத்தீவு, ஜூன் 1
வரலாற்றுப் பிரசித்திமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் இன்று (முதலாம் திகதி திங்கட்கிழமை) சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ளன.
அனைத்து ஏற்பாடுகளும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொங்கல் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். குறிப்பாகக் கோவிலுக்கு வருகை தரவுள்ள பக்தர்களின் நன்மை கருதி இ.போ.சபையினராலும் தனியார் போக்குவரத்து சங்கத்தினராலும் விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆலயச் சூழலில் குடிதண்ணீர் மற்றும் இதர தேவைகளுக்கான நீர் விநியோகமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஆலயச் சூழலின் துப்பரவுப் பணிகளைக் கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் மேற்கொண்டனர். ஆலயச் சூழலுக்கான சுகாதார மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு பக்.29

## மிக்-27 போர் விமான மர்மங்கள் விரிகின்றன

### பணம் பரிமாறப்பட்ட இரகசிய வங்கிக் கணக்கு கண்டறியப்பட்டது

கொழும்பு, ஜூன் 1
விமானப்படைக்கு மிக் - 27 போர் விமானங்களைக் கொள்வனவு செய்த போது, பணப் பரிமாற்றம் செய்யப்பட்ட இரகசிய வங்கிக் கணக்கு ஒன்றின் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
மஹிந்த ஆட்சிக் காலத்தில், மிக் போர் விமானங்களைக் கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க ஆகியோருக்குத் தொடர்புகள் உள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றன.
மிக் போர் விமானக் கொள்வனவு, அரசுகளுக்கு இடையிலான பரிமாற்றம் என்றே ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால், லண்டன் முகவரியைக் கொண்ட பெல்லிமிஸ்ஸ ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கே கொடுப்பனவைச் செலுத்த வேண்டும் என்று உடன்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்தது.
சில வாரங்களுக்கு முன்னர் வரை பிரிட்டனில் இத்தகைய ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனம் இல்லை என்று இன்ரபோல் அறிவித்திருந்தது.
தற்போது இந்த நிறுவனத்தின் பெயரில் பிரிட்டனின் வேர்ஜின் தீவுகளில், இரகசிய வங்கிக் கணக்கு ஒன்று இருப்பது தெரிய வந்திருக்கிறது. 2006 ஜூலை 26ஆம் திகதி மிக் போர் விமானக் பக்.29

# அரசியல் கைதிகள் 278 பேர் விடுதலையாகும் சாத்தியம்

## இந்த வாரம் பேச்சு என்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஜூன் 1
சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுள் 278 பேர் விரைவில் விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் அதற்குரிய பேச்சுகள் இந்த வாரத்தில் இடம்பெறும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
காரணமின்றிப் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. அத்துடன், மக்களும் பல வருடங்களாக போராடிவருகின்றார்கள். இதன் பிரதிபலனாக அவர்களை விடுவிப்பது குறித்த பக்.29

நாட்டின் தலைவிதி இனிமேல் மக்களின் கைகளில்

பக். 15

மாணவர்களின் எதிர்காலம் கருத்தில் கொள்ளப்படுமா?

பக். 14

# சம்பூரில் மீளக்குடியமர்ந்தோர் பொலிஸாரால் வெளியேற்றம்

## அதனால் அங்கு மீண்டும் பதற்றம்

திருகோணமலை, ஜூன் 1
சம்பூரில் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர்ந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். இதனால் அங்கு மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்டிருந்த காணிகளை மக்களிடம் மீளக் கையளிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபாலவின் தலைமையிலான தேசிய அரசு உறுதிமொழி வழங்கியிருந்தது. அதன் அடிப்படையில் சம்பூரில் முதலீட்டு வர்த்தக வலயக் காணிகள் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி மைத்திரிபால மீளப் பெற்றார். பக்.29

# மாணவி கொலையை கண்டித்துத் தீர்மானம்

## வலி. கிழக்கு பிரதேச சபையில் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 1
வக்கிரமான கொலையாளிகளால் புங்குடுதீவு பாடசாலை மாணவி கொடூரமாகக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து வலி. கிழக்குப் பிரதேச சபை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது
சபையின் விசேட கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை தவிசாளர் கே.துரைசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. தொடக்கத்தில் புங்குடுதீவு பாடசாலை மாணவி காட்டுமிராண்டித்தனமான முறையில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்குக் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது.
"இந்தக் கூட்டு வன்புணர்வு கொலை மிலேச்சத்தனமானது கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இந்தக் கொலையை நடத்தியவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.
எமது சமுதாயத்தில் இப்படிப்பட்ட மிருகத்தனமான பாலியல் வன்புணர்வுக் கொலைகள் தொடர இடமளிக்கக் கூடாது. இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடக்காதிருக்க சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.
சபையில் கொண்டுவரப்பட்ட இந்தக் கண்டனத் தீர்மானம் உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (உ-17)

## தேர்தல் அறிக்கை தயாரிக்க ஐ.தே.கவால் 8 பேர் நியமனம்

கொழும்பு, ஜூன் 1
பொதுத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குரிய வியூகங்களை வகுக்கும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தல் அறிக்கையைத் தயாரிப்பதற்கும் எட்டு பேரடங்கிய குழுவொன்றை அமைத்துள்ளது.
அமைச்சர்களான கபீர் ஹாசீம், கயந்த கருணாதிலக்க, ரஞ்சித் மத்தும பண்டார, பி.ஹரிசன், அகிலவிராஜ் காரியவசம், தலதா அத்துகோரள, ரோஸி சேனநாயக்க மற்றும் பிரதமர் அலுவலக பிரதானி சாகல ரத்னாயக்க பக்.29

## வாக்காளராக நீங்கள் இணைந்துவிட்டீர்களா?

### இன்று அதற்கான தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 1
இன்று ஜூன் முதலாம் திகதி வாக்காளர் தினம். அதனை முன்னிட்டு, இன்னமும் வாக்காளர்களாக இணையாதவர்களை உடனடியாக வாக்காளர்களாக இணையுமாறு கோரி யாழ். மாவட்ட தேர்தல் செயலகம் வாகனம் மூலம் ஒலி பெருக்கி ஊடாக அறிவித்து வருகின்றது.
இந்த அறிவிப்பு யாழ்.குடாநாடு முழுவதும் செய்யப்படுகிறது. பக்.29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டம் உதயன் ஏற்பாட்டில் நேற்று சிறப்புற நடந்தது




யாழ்ப்பாணம், ஜூன் 01
உதயனின் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டமும், பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் வழங்கும் திட்டமும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் பங்கேற்புடன் நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில், உதயன் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்கேற்று வெற்றியைப் பெற்றுக் கொண்ட 150 வெற்றியாளர்கள் பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர். கடந்த காலங்களில் பாதிப்புகளை எதிர்நோக்கிய 50 பேருக்கு உதயனின் நலனோம்புத் திட்டத்தினூடாக உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.
உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு, உதயன் பத்திரிகை பிகாஸ் நிறுவனத்தின் முதன்மை அனுசரணையுடனும் ரில்கோ உயர் விடுதி உள்ளிட்ட ஏனைய தனியார் நிறுவனங்களின் அனுசரணையுடனும் மாபெரும் பரிசுப் போட்டியை மார்ச் ஏப்ரல் மாதங்களில் நடத்தியிருந்தது. அதன் பரிசளிப்பு விழா நேற்று இடம்பெற்றது. உதயன் குழுமத் தலைவரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கியிருந்தார். பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சரும், முன்னாள் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டிருந்தார். அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை பொறுப்பு உறுப்பினர் இ.ஆனோல்ட், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான, த.சித்தார்த்தன், அ.பரஞ்சோதி, எம்.கே. சிவாஜிலிங்கம், பா.கஜதீபன் ஆகியோரும், வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாக ரஞ்சினி ஐங்கரனும் கலந்து கொண்டிருந்தனர். அனுசரணை வழங்கிய நிறுவனப் பிரதிநிதிகளும் பங்கேற்று விழாவைச் சிறப்பித் திருந்தனர்.
நிகழ்வில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவி கள் நடனம் வழங்கியிருந்ததுடன், சட்டத்தரணியும் மனித உரிமை ஆர்வலருமான க.சுகாஸ் தலைமையில் பட்டிமன்றமும் நிகழ்வில் இடம்பெற்றது (உ–5)

## வேறு திசை நோக்கி தமிழர்களை இழுத்துவிட சில சக்திகள் முயற்சி

### அது தொடர்பில் விழிப்பு நிலை அவசியம் என்கிறார் ஆனோல்ட்



யாழ்ப்பாணம், ஜூன் 1
எமது தமிழர் சமூகத்தை வேறொரு திசையில் நோக்கி இழுத்துச் செல்ல சில சக்திகள் முயன்று கொண்டிருக்கின்றன. அவை தொடர்பில் விழிப்பாக இருந்து எமது உரிமை நோக்கிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறு அறைகூவல் விடுத்திருக்கிறார் வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆனோல்ட்.
உதயன் ஊடக நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் கொண்டாட்ட நிகழ்வு உதயன் ஊடக நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஈ.சரவணபவன் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரியில் நேற்றைய தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
உதயன் பத்திரிகை கடந்த 30 ஆண்டு காலமாக உண்மைகளை உலகுக்கு எடுத்துச் செல்லும் உன்னத பணியை மேற்கொண்டு வருகின்றது. இதனால் அன்றிருந்த அரசுகளாலும் அவற்றோடு ஒட்டியிருந்த குழுக்களாலும் பல தடவைகள் தாக்கப்பட்டு துன்பப்பட்டுள்ளது. ஆனாலும் உண்மைகளை அவர்கள் உரத்துக் கூறியமையால் பல கொடூரங்கள் அவர்கள் மீது நிகழ்த்தப்பட்டு இருக்கின்றன. அவர்களில் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். அவர்களுடைய அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. ஆனால் அவர்கள் தடைகளைத் தாண்டி 30ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கின்றனர்.
இப்போது எமது மக்களின் துன்பத்துக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இருக்கின்றது. நல்லதொரு அரசியல் சூழலில் சுதந்திரமான காற்றை சுவாசிக்க முடிகின்றது. இந்த நிலையில் வடமாகாண அமைச்சர்கள் முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களுக்கு பல கடமைகள் உள்ளன. நல்லதொரு சமூகத்தை உருவாக்க நாங்கள் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.
இத்தகைய விளையாட்டு நிகழ்வுகள்தான் மக்களை ஒன்றிணைத்து அணி திரள வைக்கும் நல்லதொரு இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும். இன மத சாதிகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்கும் ஆற்றலை விளையாட்டுக் கொண்டிருக்கிறது. அதனை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
அதேவேளை, எம் மீது சுமைகளைச் சுமத்தி எம்மை வேறொரு திசையில் இழுத்துச்செல்ல சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன. அதற்காக சில நடவடிக்கைகளை அவர்கள் கட்டவிழ்த்து விடுகின்றனர். அத்தகைய சக்திகளிடம் நாம் விழிப்பாக இருக்க வேண்டும். எங்களுடைய உரிமை என்ன பயணம் என்ன நாங்கள் இழந்தவை என்ன கொடுத்தவை என்ன என்பவற்றை எமது மனதிலிருத்தி செயலாற்றவேண்டும் – என்றார் (உ–10)

## நாம் மக்களையே நம்புகிறோம் மக்கள் உதயனை நம்புகின்றனர்

### அதுவே உதயனின் வெற்றி என்கிறார் அதன் குழுமத் தலைவர்



யாழ்ப்பாணம், ஜூன் 1
நாம் மக்களையே நம்புகின்றோம் மக்கள் உதயனை நம்புகிறார்கள். அதுவே உதயனின் வெற்றி என்று தெரிவித்தார் உதயன் குழுமத் தலைவரும், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்.
உதயனின் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் மாபெரும் பரிசளிப்பு விழா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார் ஈ.சரவணபவன். தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
உதயன் ஒரு ஊடக நிறுவனம் என்ற எல்லையைக் கடந்து, பல முனைகளிலும் மக்கள் சேவையை முன்னெடுப்பதன் வெளிப்பாடாகவே இன்றைய நிகழ்வைக் கருதுகின்றேன். இரும்புவேலிகளைத் தகர்த்தும் – நெருப்பு வயல்களைக் கடந்தும், உண்மைகளைத் தேடிச் சேகரித்து மக்கள் முன்வைப்பது எமது நாட்டில் எவ்வளவு தூரம் உயிர் விலைகொடுத்து ஆற்றவேண்டிய பணி என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தப் பணியில் பல்வேறு இழப்புக்களை உதயன் சந்தித்த போதும், தனது பணியைத் தொய்வின்றி உதயன் மேற்கொண்டது.
பொழியப்படும் வான் குண்டுகள் மத்தியிலும் – வந்து விழுந்து உயிர் குடிக்கும் எறிகணைகள் மத்தியிலும்தான் உதயனின் பிறப்பு நிகழ்ந்தது. அது வளர்ந்து வந்த பாதையும்கூட மலர் தூவப்பட்ட நந்தவனம் அல்ல. கழுத்தை நெரிக்கும் காட்டேரிகளும் – காலைக் கௌவும் பாம்புகளும் – தடுக்கி இழுத்து விழுத்தும் படுகுழிகளும் உதயனின் பாதையெங்கும் பரப்பப்பட்டிருந்தன.
எங்கள் கண்கள், இராணுவ வேலியையும் கடந்து விரிந்தன. எங்கள் கைகள் பட்ட காயங்களையும் பொருட்படுத்தாமல் உண்மைகளைப் பொறுக்கி எடுப்பதில் உத்வேகத்துடன் உணர்வுபூர்வமாகப் பணியாற்றினோம். சேறுகளையும் – சகதிகளையும் – முட்புதர்களையும் தாண்டி எங்கள் கால்கள் மக்களுக்கான ஊடகப்பாதையில் பயணித்தன.
இதனாலேயே, மூன்றாவது தசாப்த காலத்திலும் உதயன் எந்தவொரு தீய சக்தியாலும் அழித்துவிட முடியாத வகையில் நிமிர்ந்து நிற்கின்றது. உதயனின் சாதனை – வளர்ச்சியை எந்தவொருவரும் தனித்து உரிமை கொண்டாட முடியாது. அது அனைவரினதும் பங்களிப்பினாலேயே சாத்தியமானது.
போர்க் காலத்தில், மக்களை ஒரு இருள் கவசத்துக்குள் வைத்து அரசும் அதனுடன் இணைந்துள்ள கூட்டமும் திக்குமுக்காட முனைந்த வேளையில் அதைப் பிளந்து மக்களுக்கு உண்மைச் செய்திகளை வழங்கினோம். இன்றைய நவீன வசதிகள் எதுவும் இல்லாதபோதிலும்கூட இராணுவத்தினருக்கும் – இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் – ஒட்டுக் குழுக்களுக்கும் கண்களில் மண்ணைத் தூவி விட்டு எமது செய்தியாளர்கள் துணிவுடனும் – அர்ப்பணிப்புடனும் உண்மைகளை வெளிக்கொண்டு வந்தனர்.
போர் முடிவுக்கு வந்த பின்பும்கூட நாம் பலமுனைகளில் இலக்கு வைக்கப்பட்டோம். போர்க் காலத்தில் எம் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதிகளுக்கு எவ்விதத்திலும் குறைந்துவிடாத நெருக்கடிகளை இந்தக் காலப்பகுதியிலும் நாம் எதிர்கொண்டோம். ஆனால் உதயன் குழுமம், இழப்புக்களாலும் – துன்பங்களாலும் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டு எங்கள் பணியில் குலைந்துவிடாத உறுதியுடன் முன்சென்றோம்.
மக்கள் மட்டுமே உலக வரலாற்றின் உந்து சக்தி என்ற தத்துவத்தை திடமாக நம்புகின்றோம். மக்களுடன் மக்களாக நின்று, அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்டு மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் பணியில் நாம் எம்மையும் இணைத்துக்கொண்டுள்ளோம். நாம் மக்களை நம்புகின்றோம். மக்கள் எங்களை நம்புகின்றார்கள். இதுவே எமது வெற்றியினதும் – வளர்ச்சியினதும் அடித்தளம் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை – என்றார். (உ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்புக்கு பெரும் நெருக்கடியாம்

### வடக்கில் புலிகள் இயக்கம் தலைதூக்குகிறது என கவலை வெளியிடுகிறார் கம்மன்பில

கொழும்பு, ஜூன் 1

நாட்டின் தேசிய பாதுகாப்பு இன்று பெரும் நெருக்கடிகளை சந்தித்துள்ளது. இதனை சுட்டிக்காட்டும் போது எம் மீது இனவாதிகள் என்ற முத்திரை குத்தப்படுவதாக தெரிவிக்கும் மஹிந்த அணியின் முக்கியஸ்தரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான உதய கம்மன்பில பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் மைத்திரியுடன் இருப்போர் மஹிந்தவுடன் இணைவார்கள் என்றும் தெரிவித்தார்.



இது தொடர்பாக உதயகம்மன்பில தெரிவித்துள்ளதாவது:–

நாட்டின் தேசிய பாதுகாப்பு பெரும் நெருக்கடிகளை சந்தித்துள்ளது. மீண்டும் புலிகள் தலைதூக்குகின்றனர். ஆர்ப்பாட்டங்கள் என்ற பெயரில் வடக்கில் மீண்டும் புலிகள் இயக்கம் தலைதூக்குகின்றது. புலம்பெயர் புலி ஆதரவாளர்களினதும் கை ஓங்குகின்றது. இவ்வாறானதோர் சூழ்நிலையில் போரை முடித்து பயங்கரவாதத்தை ஒழித்த தலைவரென்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பாக அக்கறை செலுத்துகின்றார். மக்கள் மத்தியில் பேசுகின்றார். இதனை இனவாதம் பேசுவதாக முத்திரை குத்தி அரசியல் லாபம் பெற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அணியினர் முயற்சிக்கின்றனர்.– என்றார். (ந)

## வாசுதேவவின் ஆவியே தற்போது நடமாடுகின்றது

### விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 1

1994ஆம் ஆண்டில் வாசுதேவ நாணயக்கார இறந்து விட்டதாகவும், தற்போது அவரது ஆவியே நடமாடி வருவதாகவும் புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே விக்ரமபாகு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1994ஆம் ஆண்டு வரையில் இடதுசாரி கொள்கைகளுக்காக குரல் கொடுத்து வந்த வாசுதேவ, அதன் பின்னர் சுயலாப அரசியலில் ஈடுபடுகின்றார் என்றும் விக்கிரமபாகு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டுமென தேசிய நிறைவேற்றுப் பேரவையில் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

வாசுதேவ நாணயக்காரவும், விக்ரபாகு கருணாரட்னவும் ஒரே கட்சியில் இணைந்திருந்து இடதுசாரி கொள்கைகளுக்காக நீண்ட காலம் குரல் கொடுத்து வந்தவர்களாவர்.(ந)

## பாதுகாப்புப் படையினர் அரசியல் செய்யத் தடை

### எதிர்காலத்தில் வரும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 1

எதிர்காலத்தில் பாதுகாப்புப் படையினருக்கு அரசியல் தடை செய்யப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மெதிரிகிரியவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இதன் பிறகு வரும் காலங்களில் முப்படை, பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினருக்கு அரசியல் தடை செய்யப்படும். சட்டத்தை செயற்படுத்தி அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு மாத்திரமே அவர்களுக்கு உள்ளது.

எமது நாட்டு இராணுவம் ஒழுக்கசீரான இராணுவம் என்பதை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இனிவரும் காலங்களில் சகல பாடசாலைகளினும் மாணவர் படையணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.– என்றார். (ந)

## அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படக்கூடாது

### இலங்கைக்கு அழுத்திக் கூறுகின்றது இந்தியா

மீனவர் பிரச்சினையில் அமைதியை சீர்குலைக்கும் வகையில் இலங்கை அரசு செயல்படக் கூடாது என இந்தியா தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இந்தியா – இலங்கை இடையிலான மீனவர் பிரச்சனை இரு நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் சார்ந்தது என்று சுட்டிக்காட்டினார்.

மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டிய பிரச்சினையில் மீனவர்கள் கொந்தளிக்கும் வகையில் இலங்கை அரசு நடந்து கொள்ளக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழக மீனவர்கள் ஆண்டிற்கு 65 நாள்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று இந்தியா விடுத்த கோரிக்கையை அண்மையில் இலங்கை அரசு நிராகரித்தது.

65 நாள்கள் அல்ல 65 மணிநேரம் கூட தமிழக மீனவர்களை தங்களது கடற்பரப்பில் அனுமதிக்க முடியாது என்றும் இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர கூறியதையே இந்தியா மறைமுகமாக கண்டித்துள்ளது. (ந)

## காணி வேண்டி மலையகத்தில் ஆர்ப்பாட்டம்



ஹற்றன், ஜூன் 1

பொருளாதாரத்தின் முதுகெலும்பான மலையக சமூகத்தினருக்கு 20 பேர்ச் காணியுடன் சொந்த வீடு வேண்டும் என கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுப் பிற்பகல் ஹற்றனில் இடம்பெற்றது.

காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு அமைப்பு, தேசிய சமாதான பேரவை ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மலையக மக்கள் சுதந்திரமாக குடியிருப்பதற்கு 20 பேர்ச் காணியும் காணி உரித்துடன் விவசாய நடவடிக்கைகளுக்காக 2 ஏக்கர் காணியும் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்த போராட்டம் இடம்பெற்றதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

200 வருட வாழ்க்கையில் எப்போது காணி, நிரந்தர காணி உரிமையுடன் வாழ்வது? அரசே பொறுப்பு கூறு, சுய தொழிலை மேற்கொள்வதற்கு ஒரு குடும்பத்திற்கு 2 ஏக்கர் காணி வழங்கு, நச்சுத்தன்மை இல்லாத விவசாயத்தை உற்பத்தி செய்வோம், தாய்மார்கள் வெளிநாடு செல்வதை தவிர்ப்போம் என் பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணி ஹற்றன் டிக்கோயா நகர சபையில் ஆரம்பிக்கபட்டு, ஹற்றன் ப்ஸ் நிலையம் வரை சென்று மீண்டும் நகரசபைக்கு வந்தடைந்ததும் அங்கு ஹற்றன் நகரசபை மண்டபத்தில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது. (ந)

## ரமழானை முன்னிட்டு பேரீச்சம்பழம்

ரமழான் பண்டிகையை முன்னிட்டு 15 மெற்றிக் தொன் பேரீச்சம் பழங்களை ஐக்கிய அரபு இராச்சியம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

முஸ்லிம் விவகார மற்றும் தபால் சேவைகள் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீமிடம் பேரீச்சம்பழத் தொகையை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் ஐக்கிய அரபு இராச்சிய தூதரகத்தில் நடைபெற்றது.

அடுத்த வருடம் இதை விட அதிக தொகையான பேரீச்சம்பழங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக இலங்கைக்கான ஐக்கிய அரபுராச்சிய உயர் ஸ்தானிகர் அப்துல் ஹமீட் ஏ.கே.அல். முல்லா தெரிவித்தார்.

தற்போதைய அரசு முஸ்லிம் சமய விவகாரம் – கலாசாரத்திற்கான அமைச்சை நிறுவியுள்ளமை சிறப்பான செயல் என்றும் எதிர்காலத்தில் இருநாடுகளின் ராஜதந்திர உறவுகளை வளர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய மற்றும் கலாசார திணைக்கள பணிப்பாளர் எம்.எச்.எம் ஷாமில் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ந)

## அரசியல் நகர்வைத் தடுக்க பொய் பரப்புரையில் அரசு

### மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



**என் மீது பலர் பலவகையான பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எனது அரசியல் நகர்வுகளை தடுக்க முற்படுகின்றனர்.**

கொழும்பு, ஜூன் 1

தனது அரசியல் நகர்வை தடுப்பதற்காக தற்போதைய அரசாங்கம் பல்வேறு பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தான் பெருந்தெருக்கள் துறை அமைச்சராகவும் பதவி வகித்த காலத்தில், வீதி அபிவிருத்திக்கென்று வங்கி ஒன்றிலிருந்து பெற்ற 55 பில்லியன் ரூபாவில் 28 பில்லியன் ரூபாவை வேறு ஒரு அமைச்சுக்கு மாற்றியதாக ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியிருந்தார்.

தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து குறுகிய கால கடனாக பெறப்பட்ட குறித்த 28 பில்லியன் ரூபா, வீதி புனரமைப்பு தேவைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டது. நீண்டகால கடனாகவே 55 பில்லியன் ரூபா பெறப்பட்டது. அது இன்னும் அபிவிருத்திகளுக்காக பயன்படுத்தப்படவில்லை.

எனவே என்மீது பலர் பலவகையான பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எனது அரசியல் நகர்வுகளை தடுக்க முற்படுகின்றனர். – என்று தெரிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிங்கப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டுள்ள இலங்கை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதி தலைமை அதிகாரி அட்மிரல் சன் ஜியங்ஹோவை சந்தித்துள்ளார். இச்சந்திப்பில் இரு நாடுகளின் பாதுகாப்பு ஒத்துழைப்பு விவகாரங்கள் உள்ளிட்ட விடயங்கள் பற்றி பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ற)*

# ஞானசாரரையும் விஞ்சிவிட்டார் மஹிந்த ராஜபக்ஷ

## கடுமையாக சாடுகின்றார் சிறிதுங்க ஜயசூரிய

கொழும்பு, ஜூன் 1

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த காவி அணியாத பிக்குவாகி விட்டமையால் ஞானசார தேரரையும் விஞ்சிவிட்டார் என ஐக்கிய சோசலிஷ கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

வித்தியாவின் கொலையானது சிறுபான்மையினரை சில அரசியல்வாதிகள் இன்னும் அடிமைகளாகவே நடத்த முயற்சித்து வருகின்றனர் என்பதையே எடுத்துக் காட்டுகிறது எனவும் தெரிவித்தார்.

வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்ற வித்தியாவுக்கான மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:–

புங்குடுதீவு மாணவி வித்தியா கொடூரமாக கொலை செய்யப்பட்டமையால் நாட்டின் அனைத்து இன மக்களும் மனம் நொந்து போயுள்ளனர்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இதனை அரசியலாக்கி விட்டது மட்டுமல்லாமல் இனவாதத்தையும் தோற்றுவிக்க முயற்சித்து வருகின்றார். வித்தியாவுக்கு நேர்ந்த கொடூரத்தினை சகித்துக் கொள்ள முடியாத காரணத்தால் யாழ். மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதாலேயே யாழில் கலவரம் உண்டானது.

இதனை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய காவி அணியாத பிக்குவுமான மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் தேவைக்காக மீண்டும் ஆயுத குழுக்கள் உருவாகப் போகிறன என்று தெரிவித்துள்ளார்.

இப்போது அவர் விஹாரைகளையே தனது வசிப்பிடமாக்கிக் கொண்டுள்ளார். அதனால் வெள்ளைச் சாரம் அணிந்த துறவியாகவும் இனவாதத்தை கட்டவிழ்த்து விடுவதில் மஹிந்த ஞானசார தேரரையும் விஞ்சி விட்டார்.

இது போன்று தான் 2009 ஆம் ஆண்டு யாழ்.மக்களின் நினைவேந்தலுக்கு மஹிந்த தடை விதித்தார். அது முற்றிலும் தவறான செயற்பாடாகும். வீரர்கள் உருவாவது மக்கள் மனங்களில் மட்டுமேயாகும். மாறாக நாட்டின் ஜனாதிபதி பரிந்துரை செய்கின்றவரை வீரனாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேவேளை வடக்கின் இனவாதம் பற்றி பேசுகின்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, தெற்கில் அவரின் ஆதரவு கூட்டணிகள் கட்டவிழ்த்து விடும் இனவாதம் பற்றி ஒரு போதும் பேசுவதில்லை.

அத்துடன் வித்தியாவின் கொலை சம்பவத்தை அரசியலாக்கும் மஹிந்த போன்ற இனவாத அரசியல்வாதிகளின் நோக்கம் சிறுபான்மை இனங்களை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருப்பது என்பதையே காண்பிக்கிறது.

எவ்வாறாயினும் அரசு வடக்கு, தெற்கின் நல்லிணக்கத்துடன் முன் செல்லும் முயற்சியை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் மஹிந்த போன்ற இனவாத தரப்புக்களுக்கு இனி ஒருபோதும் தேர் தலில் போட்டியிட ஜனாதிபதி இடமளிக்கக்கூடாது.– என்றார். (ற)

# காவத்தை நகரில் ஜே.வி.பி. துண்டுப்பிரசுர விநியோகம்

## கொலைக் குற்றவாளிகளை கைது செய்யக் கோரி

கொழும்பு, ஜூன் 1

மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்றுக் காவத்தை நகரில் ஊர்வலமாக சென்று வர்த்தக நிலையங்கள் மற்றும் இரத்தினபுரி காவத்தை நகருக்கு வந்த பொது மக்களிடம் துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தனர்.

காவத்தை கொட்டகெத்தன பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக நீதியான விசாரணைகள் இடம்பெறவில்லை என்றும் காவத்தை கொட்டகெத்தன கொலை சம்பவங்களின் பின்னணியில் உள்ளவர்களை உடனடியாக கைது செய்து உண்மை சம்பவங்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கொட்டகெத்தன மக்களுக்கு நீதியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கோரியும் இந்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அதில் ஜே.வி.பியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் புஸ்பகுமார மற்றும் ஜே.வி.பி. நிவித்திகலை தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் உட்பட ஜே.வி.பி உறுப்பினர்கள் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

காவத்தை மற்றும் அதன் அண்மித்த பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டுள்ளதால் நகருக்கு வரும் பொது மக்கள் மற்றும் தனியார் வகுப்பு மாணவர்களின் வரவு வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது. அத்தோடு காவத்தை நகரில் வழமைப்போல் இடம்பெற்று வரும் தமிழ் மற்றும் சிங்கள தனியார் வகுப்புகளும் நேற்று மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

காவத்தை நகரை சுற்றி பொலிசார் மற்றும் விசேட பாதுகாப்பு அதிரடிப் படையினர் தொடர்ந்து பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)

# தேனிலவில் தொலைந்த மணமகன்!

கொழும்பு, ஜூன் 1

தேனிலவுக்காக சென்ற ஜோடியில், மணமகன் நள்ளிரவு 12 மணியுடன் காணாமல் போன சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்தோட்ட பிரதேசத்தில் உள்ள விடுதியில் தேனிலவை கழிப்பதற்கு சென்றிருந்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மணமகனான தெல்தோட்ட ரெலிமங்கொடயில் வசிக்கும் 33 வயதான ஜி.தர்மசேன என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். இவர் இராணுவத்தில் 10 வருடங்கள் பணியாற்றியவர் என்று கூறப்படுகின்றது. இவர், முல்கம பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதான யுவதியை கடந்த 29ஆம் திகதி கரம்பிடித்துள்ளார்.

திருமண வைபவத்தின் பின்னர் தேனிலவுக்காக தெல்தோட்டையில் உள்ள ஹோட்டலொன்றுக்கு சென்றுள்ளனர். அறையை விட்டு நள்ளிரவு வேளையில் வெளியேறிய மணமகன் விடிய விடிய வரவேயில்லை. விடியும் வரை காத்திருந்த மணமகள் இது தொடர்பில் கலஹா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார், பொலிஸ் நாயை பயன்படுத்தி காணாமல் போனநபரை தேடும் நடவடிக்கையை முடுக்கிவிட்டபோதிலும் அவர் தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# புகைத்தல் மற்றும் மது ஒழித்தல் வாரம் மட்டக்களப்பில் விழிப்புணர்வு பேரணி

மட்டக்களப்பு, ஜூன் 1

சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினம் நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் ஜுன் 10ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படுகின்றது.

அதையொட்டி இலங்கையில் மதுபாவனை அதிகமாகவுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் கீழ் நேற்று மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் கிழக்கு மற்றும் இருதயபுரம் மத்தி ஆகிய வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி உத்தியோகத்தர்களினால் விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்பட்டது.




இப்பேரணி நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. தவராசா தலைமையில் இருதயபுரம் கிழக்கு வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகளுடன் இணைந்து பிரதேச செயலாளரினால் மட்டக்களப்பு எல்லை வீதி வைரவர் ஆலய முன்றலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆலய முன்றலில் இருந்து பிரதான எல்லை வீதி ஊடாக மாமாங்கம் ஆலயம் வரை சென்று பேரணி நிறைவுற்றது.

இதனை தொடர்ந்து இருதயபுரம் மத்திய வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும்பயனாளிகள் இணைந்து நடத்திய பேரணி, மட்டக்களப்பு ஊறணி சரஸ்வதி வித்தியாலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி இருதயபுரம் மத்திய வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி பேரணி இடம்பெற்றது.

புகைத்தலற்ற, மதுபானமற்ற வளமான புதியதோர் சமுதாயத்தை உருவாக்குவோம், சிகரட் மூலம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லும் பணத்தை நமது நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவோம், புகைத்தல் அற்ற குடும்பங்களை உருவாக்குவோம், ஒழுக்க நெறி நிறைந்த சுபீட்சமான கிராமத்தை கட்டி எழுப்புவோம் போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும் பேரணியில் கலந்து கொண்டோர் தாங்கியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மது பாவனையினை ஒழித்து மாவட்டத்தின் வறுமை நிலையினை இல்லாமல் செய்யும் வகையிலான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளும் இதன்போது முன்னெடுக்கப்பட்டன. சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு கொடிவாரமும் கடைப்பிடிக்கப்பட்டதுடன் கொடிகளும் அதிதிகளுக்கு அணிவிக்கப்பட்டன. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டம்



உதயன் குழுமத்தால் நடத்தப்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் இறுதிப் போட்டிக்கான பரிசில் பெறுவோர்,
இரண்டரை லட்சம் ரூபாவை முதலாம் பரிசாக எஸ். விமலா வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடமிருந்தும், ஒன்றரை லட்சம் ரூபாவை இரண்டாம் பரிசாக எஸ். பிரசன்னா 'பிகாஸ்' நிறுவனத்தின் இணைப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும், மூன்றாம் பரிசாக ஒரு லட்சம் ரூபாவை இ.ஜனார்த்தனன் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடமிருந்து இருந்து பெற்றுக் கொள்வதை காணலாம்.





இறுதிப்போட்டியில் ஆறுதல் பரிசுக்கான ரூபா 5 ஆயிரத்தை உதயன் பிரதம ஆசிரியர் வ.ம.கானமயில்நாதனிடம் இருந்து முறையே மு.கவிப்பிரகாஸ், சி.அச்சுதன், இ.சுஜிந்தன், ப.முரளிதரன், அழகுதுரை ஆகியோரும், திருமதி ஈ.சரவணபவனிடமிருந்து மெ.மல்லிகா, க.கலாநிதி, க.சிவயோகசுந்தரம், பி.தனுஜா, ஜெ.ருசான் ஆகியோரும் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.





உதயன் குழுமத்தின் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் போது நலநோம்பு திட்டத்தில் வாழ்வாதார உதவியாக பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களை வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், உதயனின் பிரதம ஆசிரியர் வ.ம.கானமயில்நாதன், நாடாமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், திருமதி சரவணபவன் ஆகியோரும் வழங்குவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டம்









உதயன் குழுமத்தால் நடத்தப்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் விசேட பரிசுக் கூப்பன் 10 ஆயிரம் ரூபாவை வெற்றியாளர்களுக்கு வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், த.சித்தார்த்தன், எம்.சிவாஜிலிங்கம், அ.பரஞ்சோதி ஆகியோர் வழங்குவதையும், இளஞ்சட்டத்தரணி சுகாஸ், வாழ்வாதார உதவியாக பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சேலை வழங்குவதையும், தினம் ஒரு பரிசுக் கூப்பனுக்கான 2 ஆயிரத்து 500 ரூபா பரிசிலை ரில்கோ, பிகாஸ் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் வழங்கி வைப்பதையும் மற்றும் கொண்டாட்டத்தின் போது குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கான பரிசில்களை வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் வழங்குவதையும், கொண்டாட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்தையும் காணலாம்.



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கவை வலுப்படுத்தும் முயற்சியே நடக்கிறது

*முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்*



கொழும்பு, ஜூன் 1
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தான் பிளவுபடுத்தவில்லை எனவும் கட்சியை வலுப்படுத்தும் நடவடிக்கையையே தான் மேற் கொண்டு வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தவே நான் வெளியில் இறங்கி பேசி வருகிறேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவு படுத்தினேன் என்று என்மீது குற்றம் சுமத்திப் பயனில்லை.

அம்மாவிடம் இருந்து மகள் கட்சியை உடைத்து கொண்டு சென்ற போது நான் கட்சியிலேயே இருந்தேன். மகன் கட்சியை உடைத்துக் கொண்டு சென்ற நேரத்திலும் நான் கட்சியிலேயே இருந்தேன். பொதுச் செயலாளர் சென்ற நேரத்திலும் நான் கட்சியிலேயே இருந்தேன். கட்சியை பிளவு படுத்தியது நானல்ல. – என்று அவர் கூறியுள்ளார்.

கலாவெவ 500 ஏக்கர் பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கட்சியை நான் பிளவுப்படுத்த முயற்சிப்பதாக சிலர் என் மீது குற்றம் சுமத்துகின்றனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பது டாலி வீதியில் 301 ஆம் இலக்கத்தில் இருந்த கட்டிடம் அல்ல. அறிவிப்புப் பலகையல்ல. சின்னம் அல்ல. 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாங்கள் சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் கைச்சின்னத்தில் போட்டியிடவில்லை. 1991 ஆம் ஆண்டே இறுதியாக கைச்சின்னத்தில் போட்டியிட்டோம். இந்த வரலாறு மறந்து போய்விட்டது. மக்களுக்கும் மறந்து விட்டது. நாமும் மறந்து விட்டோம். அரசியல்வாதிகளும் மறந்து விட்டனர். தற்போது சிறிலங்கா, சிறிலங்கா என்று வாயில் வந்தது போல் சத்தமிடுகின்றனர்.

நாட்டின் பஞ்ச மகா சக்திகள் எங்கே. மக்களின் இதயங்களிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாளுகிறது. கொள்கைகளிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாளுகிறது.– என்று தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்த மீண்டும் வேண்டாம்




முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதை எதிர்த்து அனுராதபுரம் பஸ் நிலையத்திற்கு எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. 'மஹிந்தவினர் மீண்டும் வேண்டாம்' என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை நாம் பிரஜைகள் மற்றும் வீதியின் எதிர்ப்பு ஆகிய சிவில் அமைப்புகளின் ஒன்றியம் ஒழுங்கு செய்திருந்தன.

நல்லாட்சி நடைபெற்று வரும் சூழலில் முன்னாள் ஜனாதிபதி விகாரை மற்றும் கோயில்களுக்கு சென்று மக்களை ஏமாற்றி, மக்களின் மனதில் மாற்றங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக நாம் பிரஜைகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ற)

# முன்னாள் அமைச்சர்களில் 7 பேர் ஐ.தே.கவில் போட்டி

*வேட்புமனு கோரியுள்ளனர் எனத் தகவல்*

கொழும்பு, ஜூன் 1
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 7 முன்னாள் அமைச்சர்கள் எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து போட்டியிட உள்ளனர் என்று தெரிய வருகிறது.

தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களைக் கோரி ஐக்கிய தேசியக் கட்சியிடம் விண்ணப்பித்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு வேட்புமனுவை வழங்குவதில்லை என கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று தெரிய வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியிடம் வேட்புமனு கோரி விண்ணப்பித்துள்ள முன்னாள் அமைச்சர்கள் கொழும்பு, மாத்தறை, கண்டி, அம்பாறை, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் எனக் கூறப்படுகிறது. (ற)

# தேசிய அரசுக்கு ஆதரவு இல்லை

*முன்னாள் அமைச்சர் சுசில் தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன் 1
தேசிய அரசை எதிர்ப்பதாக முன்னாள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் இணைத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமொன்று அமைப்பதே எமது நோக்கமாகும்.– என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–


நான் ஏனையவர்களைப் போன்று கட்சியைக் காட்டிக் கொடுக்கமாட்டேன்.

கட்சியைக்காட்டிக் கொடுத்து ஐக்கிய தேசியக் கட்சியிடம் சென்று பதவி பெற்றுக்கொள்ளமாட்டேன். விரும்பியவர்கள் அவ்வாறு சென்று பதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் நாம் அன்றிலிருந்து பாதுகாத்து வந்த கட்சியைக் காட்டிக் கொடுக்கப் போவதில்லை. – என்று தெரிவித்துள்ளார்.

வரகாபொல பிரதேசத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார். (ற)

# பலம்மிக்க தேசமாக நாம் நிற்க வேண்டும்

*பிரதமர் ரணில் அழைப்பு*



கொழும்பு, ஜூன் 1
நாங்கள் பலமிக்க தேசமாக எழுந்து நிற்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய விகாரையில் நேற்று முன்தினம் மாலை அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரைச் சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சந்திப்பில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமாயின் அனைத்து தரப்பினரையும் சமாதானத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என அஸ்கிரிய மகா நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறை தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்த்துக் கொண்டு நாட்டைப் புதிய பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என அஸ்கிரிய மகாநாயக்க தேரர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மஹிந்தவை விசாரிக்க மீண்டும் அழைப்பாணை

**அனுப்பப்படும் என லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழு ஆணையாளர் திட்டவட்டம்**

கொழும்பு, ஜூன் 1
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவின் விசாரணைக்கு அழைக்கும் அறிவித்தல் மீண்டும் அனுப்பப்படவுள்ளது என்று ஆணைக்குழுவின் ஆணையாளர் தில்ருக்சி டயஸ்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் மீதான விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷவை லஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்தபோது நாடாளுமன்றத்தில் பெரும் எதிர்ப்புக்காட்டப்பட்டது. அதன்காரணமாக அந்த விசாரணை கைவிடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைப்பாடு குறித்து கருத்துரைத்துள்ள தில்ருக்சி, நாட்டின் அனைத்து மக்களும் சட்டத்தின்முன் சமமானவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

பணக்காரர்களையும் அதிகாரம் கொண்டவர்களையும் விசாரணை செய்யமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தால், சட்டத்தின் முன் ஏழைகளை மாத்திரமா விசாரணை செய்யமுடியும் என்று தில்ருக்சி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமது ஆணைக்குழுவுக்கு வருகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் தம்மால் எவரையும் விசாரணை செய்ய முடியும் என்று தில்ருக்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விடயத்தில் நாடாளுமன்ற சபாநாயகர் ஒருவருக்கு அரசாங்க சேவையாளர் ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்யமுடியாது என்றும் தில்ருக்சி குறிப்பிட்டுள்ளார். (ற)

# மஹிந்தவுடைய விஹாரை அரசியல் அருவருப்பானது

*அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 1
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விகாரை அரசியலை கண்டிப்பதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல தொகுதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் அனைவருக்கும் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. என்னிடம் இருக்கும் கருத்து ஏனையோரிடம் இருப்பதில்லை. முன்னாள் ஜனாதிபதி முன்னெடுத்து வரும் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் கிராமங்களுக்கு சென்று மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் சந்திப்பதை நிறுத்தும் அவசியம் எமக்கில்லை.– என்று அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

அது ஜனநாயகம், விகாரைகளுக்கு சென்று அங்கு மக்களை வரவழைத்து அரசியல் செய்வதே அவர் செய்யும் தவறான செயல். விகாரைகளில் அரசியல் செய்வதை எம்மால் அங்கீகரிக்க முடியாது.

இதுவரையில் நான் விகாரைகளில் அரசியல் செய்ததில்லை. விகாரைகளுக்கு செல்லும் மக்கள் சாது சாது என்று கூறுவார்கள். ஆனால் தற்போது வாழ்க வாழ்க என்று கோஷம் போடும் நிலைமை விகாரைகளில் உருவாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாத்திரமல்ல பௌத்த கலாசாரமும் அழிந்து போகும். புத்தி தெளிவு ஏற்பட்டு அவர் இந்தச் செயலை நிறுத்தி விடுவார் என நான் எண்ணுகிறேன்.

முன்னாள் ஜனாதிபதி மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கைகளை அருவருக்கத்தக்கதாக கருதி நான் கண்டிக்கின்றேன்.– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் கூடும். பணியாளர்கள் வெளியூர் செல்ல நேரிடும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**இடபம்:** திட்டமிட்டுச் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் உயரும். மனைவி வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். அரசு பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**மிதுனம்:** சமூகத்தில் கௌரவம் மிக்கவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், கணவரின் கருத்துக்கு மதிப்பளிப்பர். மாணவர்கள் பெற்றோரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவர்.

**கடகம்:** ஆன்மிக சிந்தனை மேலோங்கும். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் வருமானத்தைப் பெருக்குவீர்கள். மின்சார உபகரணங்களைக் கவனமாக கையாளவும்.

**சிங்கம்:** சாதுரியமாகப் பேசி எதையும் சாதிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டு. நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும்.

**கன்னி:** உறவினரின் எதிர்ப்புக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். முக்கிய செலவுக்காக கடன் வாங்க நேரிடும். மனைவியின் செயல்பாடு நிம்மதி அளிக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டு.

**துலாம்:** சமயோசிதமாகச் செயல்பட்டு தடைகளை முறியடிப்பீர்கள். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழிலில் இலாபம் கூடும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**விருச்சிகம்:** வெளிவட்டார தொடர்பால் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்பச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். உடல்நலனில் அக்கறை உண்டாகும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி பெறுவர்.

**தனுசு:** உற்சாகமாக இருப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் விரிவாக்க முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உறவினர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். பெண்கள் எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்கப் பெறுவீர்.

**மகரம்:** இனிய பேச்சால் மற்றவர்களைக் கவருவீர்கள். தொழில், வியாபாரத்தில் சாதனை படைப்பீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சியில் வெற்றி உண்டாகும். பெண்கள் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்திட திட்டமிடுவர்.

**கும்பம்:** சுறுசுறுப்பாக இருப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். உடல்நிலையில் கவனம் வேண்டும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். செலவுகள் கூடும்.

**மீனம்:** தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு கடனுதவி கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். பெண்கள் அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச வேண்டாம்.

## பூனைக்குப் பிறந்த நாய்க் குட்டி



புலிக்கு பிறந்தது பூனையாகுமா? என்று நம்மூரில் ஒரு பழமொழி உண்டு. ஆனால் சீனாவில் பூனை ஒன்று நாய்க் குட்டியை பிரசவித்து அறிவியல் உலகத்தையே ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது.

சீனாவின் சுசோவ் மாகாணத்தின் குய் யுவான் மாவட்டத்தைச் சேர்ந்த ஜியா வெய்னுவான் என்பவர், நியுநியு என்ற அமெரிக்க குட்டைமுடி இனத்தைச் சேர்ந்த பூனை ஒன்றை வளர்த்து வருகிறார். இந்தப் பூனை சமீபத்தில் 4 குட்டிகளை ஈன்றது.

இதில் ஒரு குட்டி சிகுவாகுவா இனத்தைச் சேர்ந்த நாய்க் குட்டி ஆகும். நியுநியு பூனை, நாய்க்குட்டியை பிரசவித்ததில் உள்ள மர்மத்தை அறிய முடியாமல் அனைவரும் குழம்பிப்போய் உள்ளனர். பொதுவாக நாயும், பூனையும் இணை சேராது என அறிவியல் உலகம் கூறி வரும் நிலையில், இந்தச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்திருக்கக்கூடும் என விளக்குமாறு விஞ்ஞானிகளுக்கு ஜியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திரைக்கு வரமுதல் இணையத்துக்கு வந்த மாஸ்





வெங்கட் பிரபுவின் இயக்கத்தில் சூர்யா நடிப்பில் கடந்த வெள்ளிக்கிழமை உலகமெங்கும் வெளியாகியிருக்கும் மாஸ் என்கிற மாசிலாமணி திரைப்படம் இணையத் தளங்களில் திருட்டுத்தனமாக வெளியிடப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள் ளது.

மாஸ் என்கிற மாசிலாமணி திரைப்படம் கடந்த வெள்ளிக்கிழமைதான் இந்தியாவில் வெளி யாகியது. இருப்பினும், வெளிநாடுகளில் இந்தப் படம் வியாழக் கிழமை திரையிடப்பட்டது. இந்த லையில், முழுப் படத் தையும் திரையரங்கில் இருந்து திருட்டுத்தனமாக பதிவு செய்து இணையத் தளத்தில் உலாவ விட்டுள் ளனர்.

திரைப்படம் இந்தியாவில் வெளியாவதற்கு முன்பாகவே இணையத் தளத்தில் திருட்டுத்தனமாக வெளி வந்துள்ளது. குறித்து மாஸ் படக்குழுவினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதையடுத்து, அந்த இணைய தளங்களை முடக்குவதற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## எல்லாவற்றையும் குழப்புகின்றார் விஷால்

தென்னிந்திய நடிகர் சங்கத்துக்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக நடிகர் விஷால் தவறான கருத்துக்களை தெரிவித்து வருவதாக ஆர்.சரத்குமார் கூறியுள்ளார்.

இது தொடர்பாக நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டடம் கட்டுவது தொடர்பாக சங்கத்தின் செயற்குழு, பொதுக் குழுவில் முடிவெடுத்தபடி ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

இது தொடர்பாக விஷால் மற்றும் சிலரை சிறப்பு செயற் குழுவுக்கு வரவழைத்து விளக்கமளிக்கப்பட்டது. கட்டடப் பணிகள் தொடங்கப்படாததற்கு காரணம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குதான் என்பது விஷாலுக்கு தெரியும். சங்கக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று எங்களைப் போலவே ஆர்வமுடன் இருக்கும் விஷாலின் எண்ணத்தை வரவேற்கிறேன்.

த்லைவரை எதிர்க்கவில்லை. ஆனால் சங்கக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று விஷால் அடிக்கடி கூறி வருகிறார். நடிகர் சங்கத்தில் ஏதோ ஒரு பிரச்சினை இருப்பது போல, அவ்வப்போது பேட்டி கொடுத்துக்கொண்டு, உண்மைக்கு மாறாக விஷால் பேசி வருவது வேதனை அளிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

நீதிபதி அவனைப் பார்த்து இப்பொழுது நீ நல்ல பாடம் கற்றுக் கொண்டிருப்பாய். குடிப்பது கெட்ட பழக்கம் என்று உனக்குப் புரிந்து இருக்கும். நீ மட்டும் குடிக்காமல் இருந்திருந்தால் உன் மாமியாரின் மீது கோபம் கொண்டிருக்க மாட்டாய். குடிக்காமல் இருந்திருந்தால் உன் மாமியாரைச் சுட்டிருக்க மாட்டாய் என்று அடுக்கிக் கொண்டே சென்றார்.

குறுக்கிட்ட அவன், நீதிபதி அவர்களே! நான் நல்ல பாடம் கற்றுக் கொண்டேன். இனி நான் குடிக்கவே மாட்டேன். குடித்ததனால் என் குறி தவறி விட்டது --என்றான்.


## இப்படியொரு காதலா?

தைவான் பத்திரிகைகளில் கடந்த 27 ஆம் திகதி, வாலிபர் ஒருவர் காரில் செல்லும் போது லொறி மோதிய விபத்தில் சாவடைந்த செய்தி வெளியானது. இறந்த வாலிபரின் பெயர் செங் ஜெங் குயாங் (வயது–26). இதே இடத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன் அவரது காதலி ஜெங்ஷான் யுன் (வயது–22). இதே போன்ற விபத்தில் இறந்து உள்ளார்.

காதலன் மே 26 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு விபத்தில் சாவடைந்து உள்ளார். அதேபோல் ஒருவாரத்திற்கு முன் அதே நேரத்தில் காதலியும் சாவடைந்துள்ளார்.

காதலி இறந்த துக்கத்தில் காதலன் வேண்டும் என்றே விபத்தை உருவாக்கி அதில் சாவடைந்துள்ளார். இந்த விபத்திற்குப் பிறகு அவரது காரை சோதனையிட்ட போது காரில் 3 துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து இருந்தது தெரியவந்து உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்தன்கேணி பெரியவளவு

# ஸ்ரீ மகா கணபதி பிள்ளையார் கோயில்

## தேர்ச் சிறப்பிதழ்-01.06.2015



### சந்தியில் வீற்றிருக்கும் விநாயகர்

இலங்காபுரி என்னும் ஈழமணித்திரு நாட்டில் யாழ்ப்பாண தீவகற்பத்தின் மேற்கு வடபாலமைந்த வலிகாமம் மேற்குப் பதியிலே சித்தர்கள் அவதரித்த சித்தங்கேணி என்னும் கிராமத்தில் நாற்சந்தியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெரு மானுடன் இன்று தேர்ப்பவனி வருகின்றார்.

இலங்கையில் சிறப்புப் பெற்ற விநாயக ஆலயங்களில் இவ் ஆலயமும் ஒன்றாகும். அத்துடன் இலங்கையிலே முதன் முதலாக 33 ஓம குண்டம் வைத்து 1959 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடந்த வரலாறும் உண்டு.

இவ்வாலயத்தில் எமது கிராம மக்கள் மட்டுமன்றி அயற்கிராம மக்களும் தினமும் பக்தியுடன் வணங்குவதைக் காணக் கூடியதாக உள்ளது. சந்தியில் வீற்றிருந்து அருள் மழை பொழியும் விநாயகப் பெருமானின் அருட்கடாட்ச்சத்தை யாவரும் பெற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!!!

**தலைவர்**
**பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார்**
**ஆலய பரிபாலனசபை சித்தன்கேணி.**

### ஆசிச் செய்தி



சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் இரதோற்சவ சிறப்பிதழுக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். எனது அயல் கிராமமாக இருந்த போதிலும் இக் கிராமத்து மக்களையும் அவர்கள் ஆலயங்களில் கொண்டுள்ள அதி உயரிய பற்றுறுதியினையும் நான் நன்கு அறிவோடு குறித்த சித்தன்கேணி பெரிய வளவு மகா கணபதிப்பிள்ளையாரைப் பல தடவைகள் தரிசித்தும் உள்ளேன். நான் அறிந்த வகையில் இலங்கையில் முதல் முதலில் 33 ஓம குண்டம் அமைத்து மிகச் சிறப்புற மகா கும்பாபிசேகம் நடத்திய ஆலயம் இதுவாகும். இவ் ஆலயத்தின் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவதோடு விநாயகப் பெருமானின் அருட் கடாச்சம் யாவருக்கும் கிடைத்திட வேண்டிக்கொள்கின்றேன்

**ஈ.சரவணபவன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம்.**

### ஆசிச் செய்தி



இலங்கைத் திருமணி நாட்டின் சித்தர்கள் வாழ்ந்து இறைவனை பூசித்த பெரும் பத்திமார்க்கத்துடன் சிறப்புற விளங்கும் கிராமம் சித்தன்கேணியாகும். இங்கு இறை ஆட்சி செய்யும் நாயகனாக சித்தன்கேணி பெரிய வளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார்.இக் கிராமத்தின் மத்தியில் இருந்து அருளாட்சி செய்கின்றார். இலங்கைத் தீவில் தனி வரலாற்றைக் கொண்ட 33 ஓம குண்டம் அமைத்து மகா கும்பாபிசேகம் பெற்ற திருத்தலம் என்ற வரலாற்றுப் பெருமை கொண்ட இவ் ஆலயத்தின் இரதோற்சவம் சிறக்க வாழ்த்துவதோடு அன்று இன்று மட்டுமல்லாது என்றும் தன் அடியவர்களில் அருள் மழை பொழிந்து அடியவர்கள் வேண்டி நிற்கும் வரங்களை வழங்க எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றேன்.

**திருமதி.நாகரஞ்சினி.ஐங்கரன்,**
**தவிசாளர். வலி மேற்கு பிரதேச சபை.**

### அண்ட சராசரங்களை அடக்கியவர்

அண்டசராசரங்களை எல்லாம் அடக்கி ஆண்டு அருள் மழை பொழியும் விநாயகன் சித்தன்கேணி பெரியளவில் மகா கணபதியாக தேரேறி வலம் வருகின்றான். சித்தர்களினால் ஆதி முதற் காலத்தில் பூசிக்கப்பட்ட மூர்த்திகளும் ஈழமணித் திருநாட்டில் முதன் முதலில் முப்பது மூன்று குண்ட மஹா கும்பாபிஷேகம் கண்ட தலச்சிறப்பினை ஒருங்கே கொண்ட எம் பெருமானுடைய அருட்சிறப்பு வார்த்தைகளினால் அடங்கா தவை.

சித்தன்கேணியின் நாற்சந்தியில் அமர்ந்திருந்து அருள்பொழியும் மகாகணபதி தேரேறி வரும் அற்புதக்காட்சி கண்டு அடியவரெல்லாம் அவன் அருட்பார்வையில் அகமகிழ்ந்து வாழ வேண்டும் என்று அவன் அருளினாலேயே அவன்தாள் பணிந்து வாழ்த்துகின்றோம்.

**இளைஞர் முன்னேற்றக்கழகத்தினரும்,**
**சனசமூகத்தினரும்.**

### அருள் மழை பொழியும் விநாயகர்

ஈழத்திலே தெய்வீக ஆற்றல்கள் பொருந்திய சித்தன்கேணிப் பகுதியில் பெரியவளவு எனும் விசேட கலையழகு மிளிரும் திருக்கோயிலில் எழுந்தருளி தன்னை நாடிவரும் அடியார்க் கெல்லாம் அருள்மழை பொழியும் ஸ்ரீ மகாகணபதிப்பெருமான் இன்று தனது பரிவார மூர்த்திகள் சகிதம் அழகிய ரதத்தில் ஆரோகணித்து வருகின்றார்.

சர்வலோகங்களையும் ரட்சித்துக் காக்கும் எம் பெருமானின் பஞ்ச கிருத்தியங்களையும் குறிக்கும் இந்த மஹோற்சவத்தில் அழித்தல் தொழிலைச் சுட்டி நிற்கும் ரதோற்சவத்தன்று திருக்கோயிலின் கர்ப்பகிரகத்தில் உள்ள இறைவன் எழுந்தரு ளியிருந்து அருள்பாலிக்கும் அதே திருக்கோலத்தை கோயிலின் கருவறை போலவே அமைந்திருக்கும் தேரில் ஆரோகணித்து வந்து அருள்புரிகின்றார். மெய்யடியார்கள் அனைவரும் வந்து எம்பெருமான் தேரில் ஆரோகணித்து பவனிவரும் தெய்வீகக் காட்சியை தரிசித்து கருணைக்கடலான ஸ்ரீ மாக கணபதிப்பெருமானின் அருள் பார்வை கிடைக்கும் பேறு பெற்றவர்களாகி அனைத்து ஷேமங்களும் கிடைக்கப்பெற்று வாழ்வீர்களாக.

**கணாபதி உபாசகர், சிவ மஹா துரந்தரர்.**
**ஸ்ரீ மதுசூதனக்குருக்கள்.**

தரமான கணினிக் கல்விக்கு
தன்னிகரில்லா நிறுவனம்

**SKYLINE ITC**

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சையின் பின்னர் உங்கள் எதிர்காலம் சிறக்க கணினித் கல்வியைக் கற்று சிறந்த கணினித் தொழில் நுட்பவியலாளராக வருவதற்கு நாம் சிறந்த வழிகாட்டியாகவுள்ளோம்.

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

* NVQ Courses
* Certificate Courses
* Diploma Courses
* Other Courses

web: www.skylineitc.com
email: sasi@skylineitc.com

கவனியுங்கள்: கற்கை நெறிகளை சிறப்பாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**எதற்காக SKYLINE ITC யைத் தெரிவு செய்ய வேண்டும்**

01. ஒரு பாடத்திற்கான கட்டணத்துடன் பல பாடநெறிகளை இலவசமாகக் கற்றல்
02. வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பிக்கப்படும்.
03. மூன்றாம் தொழில் கல்வி அமைச்சினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
04. Fusion Education னினால் வடபகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு கணினி நிறுவனம்.
05. கணனிக் கற்கையைப்பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம், சிங்களம் போன்ற வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படும்.
06. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.

SKYLINE I T C
Your Search ends here.

Web: www.skylineitc.com
email: sasi@skylineitc.com
Phone: 021 225 0078
Hot Line: 077 952 7575

Thellipalai Road,
Vaddukoddai,
(Opposite Vaddukoddai Hindu College)

**ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ்**
பல சரக்கு பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
சிவன் கோயிலடி வீதி, சித்தன்கேணி.

**விநாயகர் கபே**
**உயர்தர சைவ உணவகம்**
திருமண வைபவங்கள், பிறந்தநாள், ஏனைய அனைத்து வைபவங்களுக்கும், உயர்தரமான சிறந்த சைவ உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். (ஓடர் உணவுகள் வீட்டுக்கு எடுத்து வந்து தரப்படும்.)
நா.கேதீஸ்வரன்
பிள்ளையார் கோயில் வீதி, சித்தன்கேணி.
T.P :021 791 3307, 077 156 5877

**Vinayakar Supper Stores**
141, Pillayar,
Kovillady,
Sithankerny
T.P :021 225 0797

**PAN PHARMACY**
Shop No.1
Sithankerney
Tel:021 225 1151

**உயர் கணக்கியல் கல்லூரி**
சித்தன்கேணி.

**NORTH LANKA IIT**
பட்டப்படிப்புகளுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பம்.
யாழ்ப்பாணம் / சங்கானை.
077 749 2666

**SUBRA**
**கல்வி நிறுவனம்**
சித்தன்கேணி- வட்டுக்கோட்டை- சுழிபுரம்
தரம் 1-A/L வரையான தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி
ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள
பிரபல ஜோதிடர்
சிவசங்கர் ஜோதிடர்

உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.

ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.

தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

# முடிவுக்கு வந்தது ஆற்று மணல் கொள்ளை வெருகல் பிரதேச செயலாளர் தயாபரன்

மண்டூர், ஜூன் 1

வெருகல் பிரதேசத்தில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த ஆற்று மணல் கொள்ளை ஞாயிற்றுக்கிழமை முத்தற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளதாக வெருகல் பிரதேச செயலாளர் எம். தயாபரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:–

உள்ளூர் தேவைகளுக்காக பெறப்பட்ட மணல் அகழ்வு அனுமதியைப் பயன்படுத்தி அளவுக்கதிகமான அளவில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்வு இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. இந்த விடயம் திருகோணமலை மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து குறித்த சட்டவிரோத மணல் அகழ்வுக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த அனுமதியின்படி நாளொன்று 2 உழவு இயந்திரப் பெட்டிகளிலேயே உள்ளூர்த் தேவைகளுக்காக மணலை அகழ முடியும். நாளொன்றுக்கு 2 உழவு இயந்திரப் பெட்டி மணல் அகழ முடியும்– என்ற நிலையில் இந்த அனுமதியைப் பயன் படுத்தி நாளொன்றுக்கு சுமார் 20 இற்கு மேற்பட்ட உழவு இயந்திரப் பெட்டிகளில் திருட்டுத்தன மாக மணல் அகழ்வது தெரியவந்ததை அடுத்து மணல் அகழ்வதற்குத் தடை விதிக்கப் பட்டுவிட்டது.

வெருகல் பிரதேசத்தில் மணலைக் களஞ்சியப் படுத்தி வைத்து விற்பனை செய்வதற்கான அனுமதி எவருக்கும் வழங்கப்பட்டிருக்காத போதும் நீண்டகாலமாக அவ்வாறு களஞ்சியப்படுத்தி விற்பனை செய்வதும் தெரிய வந்ததையடுத்து அந்த செயற்பாடும் உடனடியாகத் தடை செய்யப்பட்டுள்ளது. திருகோணமலை மட்டக்களப்பு நெடுஞ்சாலைக்கு அருகிலேயே நீண்ட காலமாக ஆற்று மணல் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்தல் இடம்பெற்றுள்ளது. பொலன்னறுவை, அம்பாறை மட்டக்களப்பிலிருந்து வரும் மணல் வியாபாரிகளுக்கே இவ்வாறு மணல் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த சட்ட விரோத மணல் களஞ்சியங்கள் கைப்பற்றப்பட்டதோடு அரச அதிபரின் உத்தரவுக்கமைய இத்தகைய மணல் அகழ்வும் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த அளவுக்கதிகமான ஆற்று மணல் அகழ்வின் காரணமாக நாதன்ஓடை அணைக்கட்டு உடைப்பெடுத்து பிரதான வீதியையும், மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளையும் ஊடறுத்து வெள்ளம் கரைபுரண்டோடி பாதிப்புக்களை ஏற்படுத்தும் விடயத்தையும் மக்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். தனிப்பட்ட ஓரிரு மணல் வியாபாரிகளின் சுயலாபத்திற்காக இந்தப் பிரதேச செயலாளர் பிரிவின் அனைத்துக் கிராமங்களுமே ஆபத்தைச் சந்திக்க வேண்டிய நிலைமையைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரியதற்கிணங்க இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். (ஒ–10)

வீடு வாடகைக்கு உடன் தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதிகளில் சகல வசதியுடன் கூடிய வீடு.

T.P: 077 166 0458

அழகுக்கலை பயிற்சி

யாழ் பியூட்டி அக்கடமி மற்றும் ஒறிபிளேம் யாழ்.சேவை நிலையம் இணைந்து மிக குறைந்த கட்டணத்தில்...

- Certificate in Basic Beauty Course (ஒரு மாத கால அழகுக்கலை)
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Cake Decoration Classes (கேக் ஐசிங்)

அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் 05.06.2015 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 07.06.2015 அன்று 10.00 மணிக்கு

YARL BEAUTY ACADEMY

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்...

ORIFLAME SWEDEN (யாழ்.சேவை நிலையம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)

# விபத்தில் பெண் சாவு

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பு – ஆரையம்பதி பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதியே குறித்த பெண் உயிரிழந்துள்ளார். சம்பவத்தினையடுத்து மோட்டார் சைக்கிள் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ–10)

PLC

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
(மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனம்)

யாழ்ப்பாணக் கிளையானது தனது சேவைநிலையம் ஒன்றினை கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இன்று (01-06-2015) திறந்து வைக்கின்றது, என்பதை தனது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றது.




பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
(மக்கள் வங்கியின் ஒரு துணைநிறுவனம்)
இல.12, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 021 222 8031
கொடிகாமம் சேவை நிலையம் -
021 205 0233 / 021 205 0234

கொடிகாமம் : யூ.கெய்சர் - 0777520936
கி.மகாராஜ் - 0775581991
சாவகச்சேரி : க.சதீஸ் - 0775386232

www.plc.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதுமலை அம்மனுக்கு இன்று தேர்

வலி.தென்மேற்கு, ஜூன் 1
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமையும் தீர்த்தத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெற வுள்ளது.

அம்பாளின் வருடாந்த உற்சவம் கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

தேர்த்திருவிழா உற்சவத்தின்போது இலட்சுமி கடாட்சம் வேண்டியும் சுமங்கலிப் பிராப்தம் மேலோங்கவும் நீண்ட ஆயுள் கிடைக்கவும், நோய்கள் அகலவும் மனச் சந்தோஷமும் அமைதியும் நிலவவும் முதன் முதலாக பாற்குடப் பவனி அம்பாளின் தேரின் முன்னால் இருந்து ஆரம்பித்து வீதி வலமாகவந்து ஸ்தலவிருட்ஷமான தங்கு சங்களை அம்பாளுக்கு (வற்றாப்பாளை அம்மன்) அபிஷேகம் செய்யப்பட வுள்ளது. அன்றைய தினம் பி.ப. 3 மணிக்கு மஹா கும்பாபிஷேக சிறப்பு மலரும் ஆலய வரலாறு அடங்கிய நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெற வுள்ளது. (ஒ–115)

# யோகா பயிற்சியை நிறைவு செய்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஜூன் 1
நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் யோகாசனப் பயிற்சி முடித்தவர்கள் நேரில் வந்து சந்தித்துப் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

யாழ்.நாவலர்மணி மண்டபத்தில் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் யோகாசனப் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களிடமே இவ்வாறு கோரப்பட்டுள்ளது. அவர்கள் வாரநாள்களில் திங்கள், செவ்வாய்,புதன்,வியாழன். ஆகிய நாள்களில் மாலை 4.30 தொடக்கம் 5 மணி வரையும் சனி, ஞாயிற்றுக் கிழமை களில் 4 மணி தொடக்கம் 5 மணி வரைக்கும் நேரில் வந்து பதிவை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள் ளனர். இந்தப் பயிற்சி நெறி இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ–4)


## மரண அறிவித்தல்



திருமதி நந்தினி தனபாலன்

யாழ் புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நந்தினி தனபாலன் 26.05.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2015) திங்கட் கிழமை சுவிஸில் இடம்பெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6ஆம் வட்டாரம், அனலைதீவு.
தகவல்:
S.சிவபாலன் (மைத்துனர்)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண்மகிழ
27.06.1983



கண்கலங்க
16.05.2011

அமரர்
செல்வன் இரத்தினம் இதயராசா
திதி: வைகாசி பூர்வபக்க சதுர்த்தசி (01.06.2015)

ஆண்டுகள் நான்கு ஆனதுவோ
ஆறவில்லை எம் துயரம்
ஆனாலும் தம்பி உன் நினைவு
ஆர்ப்பரிக்கும் எம் நெஞ்சில்

மாணாவளவு,
கரணவாய்,கரவெட்டி.
குடும்பத்தினர்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
ஸ்ரீமான்
வை.இராமசாமிப்பிள்ளை
வைத்திலிங்கம்



மலர்வு
28.08.1932
உதிர்வு
01.06.2006

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்
அவர்கள் இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் ஒன்பது
நிறைந்தாலும் அவர் நினைவுகள் என்றும் அழியாது
வாழக்கூடியவை, நற்பண்பும், நற்குணமும்,
சிறந்த சிந்தனையும் அறிவு ஆற்றல் அத்தனையும்
வாய்க்கப்பெற்றவர்.
பாசத்தின் உறைவிடமாய், அன்பின் திருவுருவாய்,
கருணையின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்கள் அனைவரையும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஒன்பது ஆண்டுகள் காலம் சென்றாலும்,
கவலைகள் மறையவில்லை
ஆண்டுகள் பல சென்றாலும் எம்மைவிட்டு நீங்காது
உங்களின் பிரிவு........
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஸ்ரீராகவேந்திரா நமஹே
என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மகன்மார், மகள், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், ஸ்தாபன சேவையாளர்கள், சக ஊழியர்கள்,
RVG ஸ்தாபனம், நல்லூர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

திருமதி செல்லம்மா செல்லையா



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லையா 30.05.2015 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியசாமி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் நவரட்ணம் அன்னலட்சுமி (சாந்தா ) கனகமணி காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் இராசரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராணி காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் சண்முகராஜா பத்மலோஜினி(பாப்பா-ஜேர்மனி),ஞானேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்
இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
தகவல்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
1937
12
06



இறப்பு
2013
06
01

அமரர் V.R.வடிவேற்கரசன்

(பிரபல வர்த்தகரும் ஸ்ரீலங்கா டயர் அசோசியேசன்ஸ் முன்னாள் தலைவரும், யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், கிரீன்லேன்ஸ் ஹோட்டல் முன்னாள் தலைவர் / நிர்வாகப்பணிப்பாளரும், ஸ்ரீ பிரதர்ஸ், வி.ஆர்.வி. டிரவல்ஸ், வி.ஆர்.வடிவேற்கரசன் நிறுவனங்களின் முன்னாள் தலைவரும்)

பாசத்தில் தந்தையாகி பரிவினிலே தாயுமாகி
நேசத்தில் குழந்தையாகியெம் நெஞ்ச மெல்லாம் நிறைந்தவரே
பார் வியக்கவோர் நல்வாழ்வை சீர் சிறக்க வாழ்ந்திருந்து
ஓர் நொடியில் இவ்வுலகைவிட்டே ஓடிப்போனதென்ன?

கூட்டத்தில் தலைவனாகி கூடிநின்றால் நண்பனாகி
நாட்டம் கொண்ட கொள்கைக்கு நற்பெரும் தொண்டனாகி
மருந்துக்கு உணவென்ற மாற்றங்கள் புறந்தள்ளி
விருந்துக்கு விளக்கமாகி எம்மை வருந்தவிட்டுப் போனதெங்கே?

சினம் வந்தபோதும் பிறர் மனம் நொந்து போனதில்லை
தனம் கொண்டு வாழ்ந்தாலும் பெருங்கனம் கொண்டு வாழ்ந்ததில்லை
சிரம் போக நேர்ந்தாலும் அறம் காக்கத் தவறவில்லை — சிலர்
தரம் தாழ்ந்து போனாலுமவர் கரம் கோர்க்கத் தயங்கவில்லை

ஆண்டுகள்இரண்டு போனாலும் அழுது முடியவில்லை — நீங்கள்
மீண்டிங்கு வந்தாலன்றி மகிழ்விக்க யாருமில்லை !
அருள்மிகு சன்னதியான் அழைத்திட்ட இந்நாளில்
அடிபணிந்தோம் அவன் பாதம் உங்கள் ஆத்மா சாந்திபெற !!!

தகவல்: குடும்பத்தினர்
25, 27 ஆவது ஒழுங்கை,கொழும்பு -03

## மரண அறிவித்தல்

சிவஸ்ரீ சுப்பையா ஐயர் கார்த்திகேசுஐயர்



பிறப்பு: 16.06.1940
இறப்பு: 30.05.2015

உடுவில், புதுமடம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சுப்பையாஐயர் கார்த்திகேசுஐயர் 30.05.2015 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஸ்ரீ சுப்பையா ஐயர் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், கோமதி அம்மாவின் அன்புக் கணவரும், சிவஸ்ரீ இராஜேஸ்வரக் குருக்கள் (மானிப்பாய்), சிவஸ்ரீ உருத்திரேஸ்வரக் குருக்கள் (கொக்குவில்), சிவஸ்ரீ குகனேஸ்வரக்குருக் கள் (கொழும்பு), சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் (தாவடி), சிவஸ்ரீ புவனேஸ்வரக்குருக்கள் (கொக்குவில்), பிரம்மஸ்ரீ சிவானந்தசர்மா (சுவீடன்), ஜெ.யோகேஸ்வரி (மானிப்பாய்), ர.வாமதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மருமக்களின் மாமனும், பேரர்களின் பேரனும், பூட்டர்களின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் மானிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
புதுமடம், மானிப்பாய்.
(60355) (45.36)
தகவல்:
பிள்ளைகள்.
021 [illegible] 6225


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை
# வைகாசி விச




## வற்றாத நீரி

வற்றாப்பளையூர் கண்ணகை அம்மன் திருத்தலம், மு
வற்றாப்பளை என்னும் ஊரில் அமைந்துள்ளது. இது முல்
வீதியிலிருந்து கிளை பிரிந்தமைந்துள்ள இரு பிரதா
டுள்ளது. ஒரு வழி மூன்றாம் கட்டையடி பாதையாகவ
அம்மன் சக்தி என அழைக்கப்படும் பாதையாகவும் உள்ள
சென்றால் பிரதான வீதியிலிருந்து கோயிலை அடைய
கமுகு, வாழை, மா, பலா, தோடை முதலிய மரச் சோலைக
ஒரு சோலை வனமும், நெல் வயல்கள் நீர் நிலைகள் வற்
ளமை இந்தக் கோயிலுக்கும் கிராமத்துக்கும் அழகு செய்
பது அம்மனின் பத்தாவது தங்குமிடமே மருவி வற்றாப்
கோயிலின் வரலாறு நோக்கியறிய முடிகிறது, 1956 ஆம்
திகதி 6 அன்று இந்தக் கோயில் கும்பாபிஷேகம் செய்
நின்ற இடைச் சிறுவர்களுக்கும் அம்பாள் நேரில் காட்சி
படையல் செய்யுமாறு வேண்டி நிற்க, இடைச் சிறுவர்க
லிட்டு படைக்கின்றனர். விளக்கு எரிப்பதற்கு எண்ணெ
அந்தச் சிறுவர்களுக்கு கோயில் முகப்பில் காணப்படும்
காட்டிய அம்பாள் "கடல் நீரெடுத்து எனக்கு விளக்கு ஏ
கின்றார். கடலிலிருந்து எடுக்கப்பட்ட அந்த நீரானது
கடல் நீரில் விளக்கு எரிகிறது. படையல் நடக்கிறது. இ
கள். அதிசயித்தார்கள். ஊரவர்களை மூதாட் னஓ
எடுத்து விடுமாறு கூவும் இடைச் சிறுவர்கள கிழவிக
நேரத்தில் கிழவி மறைந்து விடுகிறாள் யாவரும் அதிச
பக்கத்தில் பரந்து பட்டுக் காணப்படும் சிறுகடல் தான்
கொண்டது. இந்த சிறுகடல் முல்லைத்தீவு பெருங்கடல்
மாடுகள், ஆங்காங்கே மேய்ந்து நிற்கும் வயல் வளம்,
அங்கு காணப்படும். குறைந்த மட்ட ஆழத்தில் கிணறு
பினை இந்தக் கிராம மக்கள் பெற்றுள்ளார்கள்.

'சிலம்பு கூறல்' என்னும் சிலப்பதிகாரக் காப்பியம்,
இங்கு கூறப் படுகிறது. மானிடக் கண்ணகி, தெய்விக

POOVILI Jewellery
பூவிழி நகைமாடம்
Paranthan Road, Puthukkudiyiruppu.
Tel:077 960 0818

Multy Farm Pet Paradies
வளர்ப்புக் கலர்மீன்கள், மீன் தொட்டி,
மீன்தொட்டி உபகரணங்கள்,
வளர்ப்பினகுருவிகள், அதற்குரிய
கூடுகள், வளர்ப்பின புறாக்கள்,
நாய்க்குட்டிகள்,
முயல், கினிபிக்,
வளர்ப்பின கோழிகள், கோழிக்குஞ்சுகள்
என்பவற்றை மிக மலிவான விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
941, K.K.S வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
075 988 0000, 075 498 5400

நியூ உதயா ஜுவல்லர்ஸ்
New Uthayaa Jewellers
Manufacturers of Gold Jewels
இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
No.91 Power House Road, Jaffna. T.P:021 222 2031

கலையரசி நகைமாடம்
KALAIYARASI NAGAI MADAM
புதுக்குடியிருப்பு சந்தி,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
Puthukkudiyiruppu Junction,
Puthukkudiyiruppu, Mullaitivu.
T.P: 077 045 7661

கன்னிஹா ஜுவல்லர்ஸ்
KANNIHA JEWELS
இல.99E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4448

SRI MUTHUMARIAMMAN TRADERS
342,344, Hospital Road, Jaffna.
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
SMT
Authorized Distributor For Prima Ceylon (Private) Limited Lanka Milk Food (cwc) PLC
T.P: 021 222 8666, 021 567 4110 Fax: 021 222 8666

INDHU HARDWARE
Prop. Kayanjali Rathi
077 0609469
Dealers & Suppliers of All kinds of Building Materials, Paints, Electrical items & Cement
இந்து இரும்பகம்
இன்டு ஹாட்வெயர்
Paranthan Road, Puthukkudiyiruppu.
Tel: 021 2061611
Mobile: 077 3199923

K.T.S. Class Center
அலுமினியம் பிற்றிங் வேலைகள் செய்துகொடுக்கப்படும்
Alumex Dealers
அலுமினியம் பிற்றிங், கண்ணாடி,
Level Seets மற்றும் படவகைகள்
என்பவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
077 2428 483
கந்தசாமி யோயில் வீதி, புதுக்குடியிருப்பு.

தீபன்
போன் சொப் &
இலத்திரணியல்
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.
077 919 8559

FLC FRENCH LANGUAGE CENTRE FOR FRENCH FRENCH
FRENCH CLASSES
Embassy ஆல்அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
Register now : 0779 789 456 / 021 221 7781
No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி
கண்டி வீதி, அரசடி சாவகச்சேரி.

நியூரோன் எலற்றிக்கல்ஸ்
Your Complete Electrical & Plumbing Retail/Wholesale Supplier and Contractor
169, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
021 222 2037, 077 0610280

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ள கண்ணகை அம்மன் ஆலய
# சாகப் பொங்கல் சிறப்பிதழ்

## ரில் விளக்கெரியும் வற்றாப்பளை அம்மன்...........

ந்தலம், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இது முல்லைத்தீவு -மாங்குளம் பிரதான பிரதான வீதிகளால் தொடுக்கப்பட் தையாகவும் மற்றையது முள்ளியவளை யும் உள்ளது. சுமார் மூன்று மைல் தூரம் அடையலாம். தென்னை மரங்களும், சோலைகளும் நிறைந்த மணல் பரப்பில் லகள் வற்றாத நீர் ஊற்றுக்கள் சூழ்ந்துள் ழகு செய்கின்றன. 'பத்தாம் பளை' என் வற்றாப்பளை ஆகிய வரலாறு இந்தக் 956 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தமிழ் கம் செய்யப்பட்டது. ஆநிரை மேய்த்து ல் காட்சி கொடுத்து தனக்கு பொங்கல் சிறுவர்களுக்கும் பால் அமுது பொங்க ண்ணெய் இல்லையே என ஏங்கி நின்ற னப்படும் நந்திக் கடல் நீரினைச் சுட்டிக் ளக்கு ஏற்றி வைப்பாயாக'' என்று கூறு நீரானது நெய்யாக பாவிக்கப்படுகிறது. றது. இடைச் சிறுவர்கள் ஆரவாரித்தார் னது லையை மயிர் வகிர்ந்து பேன் கிழவிக்குப் பேன் பார்த்தார்கள். சற்று ம் அதிசயிக்கின்றனர். கோயிலின் முன் ல் தான் நந்திக் கடல் என்னும் நாமம் ருங்கடலுடன் தொடுவையாக வுள்ளது. வளம், கடல் வளம் பொருந்திய சூழல் கிணறு தோண்டி நீர் பெறும் வாய்ப்

ப்பியம், தெய்வீகம் நிறைந்த கதையாக தெய்விகக் கண்ணகைத் தேவியாகவும்





சக்தி வழி பாட்டின் மகத்துவம் மிக்க தேவியாகவும் காணப்படுகிறாள்.புனிதம் நிறைந்த இந்த சிலம்பு கூறல் காப்பியத்தை இயற்றியவர் வெற்றிவேலன் என்றழைக்கப்படும் வெற்றிவேல் புலவர் ஆவார். மேற்படி அம்பாள் திருத்தலப் பொங்கல் விழாவன்றும் அதற்கு முன்னுள்ள ஒரு வார காலத்திலும் இந்த சிலம்பு கூறல் கோயிலில் படிக்கப் பெறும்,இதை ஆர்வத்துடனும், பக்தியுடனும், கேட்போர் இல் வாழ்வில் செல்வம் சிறக்க வாழ்கிறார்கள், அம்பாளின் அருள் கடாட்சம் இவர்களுக்கும், இவர் போல இந் நூற் கதையை தொகுத்தளித்த அறிஞர்களுக்கும், ஆர்வல ருக்கும், என்றும் கிடைக்கும். வெற்றி வேற்புலவர் வட இலங்கையைச் சேர்ந்தவர் என்று அறியக் கிடக்கிறது. இந்தக் காவியத்தில் கண்ணகையாரின் கதையில் சொற் சுவை, பொருட்சுவை, வர்ணணைகள், காதல், வீரம், சோகம், சிருங் காரம், பக்திப் பரவசம் உள்ளிட்ட நவரசங்களையும் இணைத்த ஒரு பெருஞ் சிறப் புக் காணப் படுகிறது.

''உறைந்திடத்தில் காண் சோழ நகர்
உற்று வந்தேன் கதிர்காமம்'' என்பது சிலம்பு கூறலில் கண்ணகையார் கூறிய வந்துள்ளேன் என் பதைக் கண்ணகையார் விளக்குகிறார்.

''வைகாசித் திங்கள் விசாகம் கூடிய பூரணையில் வருவேன் ஒரு நாள்'' எனவும் கண்ணகையார் கூறியமை இங்கு நோக்கற்பாலது. இதன்படியே வைகாசி மாதம் விசாகம் கூடிய பூரணை நிலவில் வருடாந்த பொங்கல் உற்சவம் கொண்டாடப்பட்டு வருகின்றது. கதிர்காமக் கரை யாத்திரை செல்லும் அடியார் கூட்டம் இந்த தலத்திலிருந்தே தமது யாத்திரையை ஆரம்பிப்பர், அதுவே முறையாக அமைந்த தல யாத்திரையாகும். எனவே கதிர்காமக் கரை யாத்திரையுடன் நீண்டகாலமாக இந்த திருத்தலம் தொடர்பட்டுள்ளமை சிறப்பாகும்.

பொங்கலுக்கு முன்னுள்ள சோமவார தினமன்று அம்பாள் தீர்த்தம் எடுக்கப் படும். கோயிலிலிருந்து பல மைல் தூரத்திலமைந்துள்ள சிலாவத்தைக் கடலில் தீர்த்தம், கிரியா கரும முறைப்படி எடுக்கப்படும். இந்தத் தீர்த்தமானது 'தீர்த்தக் குடம்' என சிறப்புப் பெற்று முதலாவதாக சிலாவத்தையில் உள்ள தற்காலிக கடல்கரை ஆலயத்தில் இறக்கி வைத்து இளைப்பாறி பூசை வழிபாடாற்றப்பட்டு சிலாவத்தையிலுள்ள அம்மன் ஆலயத்தில் இறக்கி வைத்து பூசை வழிபாடாற்றப்பெற்று மூன்றாவதாக, புதறிமுடா எனுமிடத்திலுள்ள ஓர் பந்தலில் இறக்கப்படும், இந்தப் பந்தல் அதற்கென அமைக் கப்பட்டது. அங்கு அடியவர் இளைப்பாறிய பின் இந்தத் திருக்குடமானது பவனியாக இந்தக் கோயிலுடன் தொடர்புபடும் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு இந்தந் தீர்த்தக் குடத்தில் உள்ள கடல் நீரினை நெய்யாகப் பாவித்து விளக்குத் திரியிட்டு விளக்கு எரியும் அதிசயம் இன்றும் நடைபெறுகிறது. தொடர்ந்து ஏழு நாள்களாக இந்த விளக்கு காட்டா விநாயகர் ஆலயத்தில் எரிந்து கொண்டிருக்கும், கண்ணகை அம்பாள் பொங்கலன்று அதிகாலையில் தீர்த்தக்குடம், மடைப் பண்டங்களுடன் வற்றாப்பளை கண்ணகையார் திருத்தலத்துக்கு எடுத்துச் செல்லப்படும். ***********


V.M.K.Jewellery
வீ.எம்.கே
ஜுவல்லறி
Dealers in 22 Kt.Gold Jewellery
80/03, Kasthuriar Road, Jaffna.
T.P: 021 222 2515, 021 720 1117



லக்கி
நகை மாடம்
Lucky
Nagai Maadam
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு
T.P: 077 391 6471, 077 284 4832



நியூ
மைதிலி
ஜுவலர்ஸ்
New Maithily Jewellers
தங்க நகை வியாபாரி
இல.38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7878, Fax: 021 221 7877
Email: newmaithily40@gmail.com

கிருபா
லேணர்ஸ்
(அரச அங்கீகாரம்பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை)



Regd No.DS/589
Kiruba Learners
Govt.Approved A Grade Driving Training School
இல.226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி:
021 222 4353, 021 492 3200, 0777 225292





அம்மன்
நகைமாடம்
தங்கப்பவுண் நகைவியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு
077 040 9484

Sellakkuddi Hardware
செல்லக்குட்டி
பல்வகை வாணிபம்
Dealers in all kind of Hardware Materials
இல.109, உதயநகர் கிழக்கு,
கனகபுரம் தெரு, கிளிநொச்சி.
Tel: 077 0748773,
0778594935

ஜெயா
புத்தகசாலை
கந்தசாமி கோயில் வீதி,
புதுக்குடியிருப்பு
(மத்திய கல்லூரிக்கு முன்பாக)
T.P:077 757 7953

சோதி லக்ஷ்மி
புடைவை & பான்சி
Sothy Luxmy
Textiles & Fancy
உங்களுக்குத் தேவையான சேட்டிங், சூட்டிங் மற்றும் பட்டுப்புடைவைகள், சல்வார்கள் அனைத்தும் தேவையான விதத்தில். தேவைகளுக் கேறறப பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே இடம்
T.P: 077 9168419
ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு.

எழில்நதி
எலற்ரோனிக் & போன்சொப்



077 43 23 743, 021 320 80 14
முல்லை வீதி, விசுவமடு.



ATM
இலத்திரனியல்
Electrical & Electronic
Kanthasame Temple Road,
Puthukkudiyiruppu.
கந்தசாமி கோயில் வீதி,
புதுக்குடியிருப்பு.
T.P: 0770427561

பொதிகை
சலூன்
ஆண், பெண்களுக்கான
பேசியல்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P: 077 571 5111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் சிக்கல் தீருமா, வென்றிடுவாரா சிறிசேன

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியதன் பின்னர் பொதுத் தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்பது ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவின் திட்டமாக இருந்து வரும் அதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கட்சி அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை எந்த வகையிலேனும் நிறைவேற்றிவிட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் சிறிசேனவுக்கு எதிராக மறைமுகமாகச் செயற்படும் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மும்முரமாகக் களத்தில் குதித்துள்ளனர்.

இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சிலர் ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவிக்கு போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தோல்வியில் திரும்பியிருந்தார்கள். அவ்வாறு போட்டியிட அவரை அனுமதிக்க முடியாது என்பதை ராஜபக்ஷவிடமே நேருக்குநேர் இருவரும் நடத்திய பேச்சுக்களின் போது ஜனாதிபதி மைத்திரிபால கூறியிருந்த நிலையில்.இவர்கள் அதேவிடயத்தை ஜனாதிபதியிடம் வற்புறுத்தியிருப்பதானது ஜனாதிபதியை சற்றுக் கடுப்பு கொள்ளச் செய்திருக்கிறது. அதனால்தான் இரண்டு தடவை என்னை கொலைசெய்ய முயன்றவர். அவருக்கு என்ன வென்று இந்தப் பதவிக்கு போட்டியிடுமாறு நான் அனுமதி வழங்க முடியும் என்று கேட்டுள்ளார். அதுமட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், பிரதமராகவும் மட்டுமன்றி இரண்டு முறை ஜனாதிபதியாகவும் பதவி வகித்து அனுபவித்தவர். அது போதும் அவருக்கு. அந்தச் சந்தர்ப்பத்தை வேறு ஒருவருக்கு வழங்கலாம் என்று கூறியிருக்கிறார் ஜனாதிபதி.

இவ்வளவுக்குப் பிறகும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அல்லது அக்கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக ராஜபக்ஷவைப் போட்டியிட வைப்பதற்கு முயற்சிகள் நடக்கின்றன. அவரும் பின்னணியில் இருந்து பெரும்பாடுபட்டு இந்த முயற்சியை இயக்கிக் கொண்டிருக்கிறார் என்பது ஊடகச் செய்திகளில் இருந்து தெரியவருகின்றது.

இதற்கிடையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெரும்பான்மையற்ற ஐ.தே.க. அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்றிவிடுவதன் மூலம் பொதுத் தேர்தலுக்குப் போகலாம் என்ற வகையிலும் ஒரு முயற்சி இடம்பெற்று வருகின்றது. அவ்வாறு செய்வதன் மூலம் ஜனாதிபதியின் நிலைமையை சிக்கலுக்குள்ளாக்குவதுடன் ராஜபக்ஷவை எப்படியோ முன்னிலைக்குக் கொண்டுவந்துவிடலாம் என்பது இவர்களின் நோக்கமாக இருக்கலாம். அந்தத் தீர்மானத்துக்கு தாமும் ஆதரவளிப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகரும் எதிர்க்கட்சி தலைவருமான சிறிபால டி சில்வா கூறியிருக்கிறார். அவ்வாறு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறும் பட்சத்தில் ஆட்சிப் பொறுப்பை தங்களிடம் தரும்படி எதிர்த்தரப்பினர் கோரலாம் அல்லது பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உடனடியாக செல்லவேண்டியிருக்கும். ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை ஆதரிக்கும் நிலையில் இல்லை. ஏனென்றால் சிறிசேன ஜனாதிபதியாக வருவதற்கு ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஐ.தே.கவும் பெரும் பங்களிப்பை செய்திருந்தனர். அவ்வாறானவர்களை துச்சமாக தூக்கி எறிய அவர் துணியமாட்டார் என்பது உறுதி.

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என்று கருதுபவர்கள் அவருடன் சேர்ந்து செயற்படலாம். ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஒருபோதும் செயற்படமாட்டேன். நல்லாட்சியை ஏற்படுத்த பாடுபட்டவர் எனது உயிருக்கு உத்தரவாதமாகவும் செயற்பட்டவர் என்று அவர் தெரிவித்திருப்பது அவரது உறுதியைக் காட்டுகிறது.

ஜனாதிபதியையும் ஐ.தே.க. இணைப்பாட்சியையும் குழப்பத்துக்குள்ளாக்கி அரசியல் பகடை விளையாட் முற்பட்டுள்ளவர்கள் வெற்றி பெறுவார்களா? அல்லது சூதும் சூழ்ச்சியும் செய்து மீண்டும் அராஜக அரசு ஒன்றைப் பதவியில் அமர்த்த முயல் பவர்களை சாணக்கியமாக வீழ்த்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவாரா? என்பது வரும் நாள்களில் தெளிவாகும். பொறுத்திருந்து பார்ப்போம்.



# மாணவர்களின் எதிர்காலம் கருத்தில் கொள்ளப்படுமா?

● ராஜராஜன்

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 36 பேர் மாணவர்கள் என்பது தெரியவந்துள்ளது. இவர்களில் அநேகமானவர்கள் பாடசாலை மாணவர்களாவர். ஏனையவர்கள் பல்கலைக்கழகத்திலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் கல்வி கற்பவர்கள்.

நீதிமன்றம் மீதான தாக்குதலை எவர் நடத்தியிருந்தாலும் அவர்கள் நீதியின் முன்பு நிறுத்தப்பட வேண்டியவர்களே. ஆனால் இதில் சம்பந்தமேயில்லாதவர்கள் சிறையில் அடைக்கப்படுவதையும், தண்டனை அனுபவிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவர்களின் கல்விக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இன்னமும் சில மாதங்களில் முக்கியமான பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை பாரதூர மான பாதக விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது.

அடுத்த வாரம் நீதிமன்றத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகும்போது இவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பிரபல சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளமை சிறிது ஆறுதலைக் கொடுக்கின்றது. ஆனால் இவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கு பொலிஸார் உடன்படுவார்களா என்பது தெரியவில்லை.

ஆரம்பத்திலேயே நீதிமன்றத்தின் பாதுகாப்பை பொலிஸார் உறுதிப்படுத்தியிருந்தால் அங்கு வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்க மாட்டாதென பல்வேறு தரப்பினரும் தெரிவித்துள்ளனர். குற்றவாளிகள் சுதந்திரமாகச் செயற்பட்டு நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்குச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். இத்தகையவர்கள் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பியிருப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. இந்த நிலையில் சம்பவத்தை வேடிக்கை பார்க்கச் சென்றவர்களும், வீதிகளில் நின்றவர்களும்கூட பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதற்கான வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. ஆகவே நீதிமன்ற விசாரணைகளின்போது உண்மையான குற்றவாளிகள் இனம் காணப்பட்டு அவர்களுக் குரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் போர் ஓய்ந்ததன் பின்னர் பல்வேறு குற்றச் செயல்களும் அதிகரித்துச் சென்றவாறே உள்ளன. இவற்றுள் பல திட்டமிடப்பட்ட வகையில் ஏற்படுத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்துள்ளன.

அதேவேளை குற்றவாளிகளில் அநேகமானவர்கள் தண்டனை ஏதுமின்றி தப்பித்துவிடுவதாகவும் பொது மக்கள் தரப்பிலிருந்து முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் சட்டமும், ஒழுங்கும் பொலிஸார் மற்றும் நீதித்துறையினரால் நிலைநாட்டப்பட வேண்டியவை ஆகும். இதில் ஏதாவது தவறு நேர்ந்தாலும் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு விடும்.

புங்குடுதீவு மாணவியின் வன்கொடுமைச் சம்பவம் எவராலும் மன்னிக்க முடியாத ஒன்று. இது தொடர்பாக மக்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் காணப்பட்டமை இயல்பான ஒன்றுதான். ஆனால் நீதிமன்றக் கட்டடத் தொகுதியைத் தாக்கும் அளவுக்கு அது எல்லை மீறிச் சென்றிருக்கக் கூடாது. மேலும் இந்தத் தாக்குதலில் நாசகார சக்திகள் சிலவற்றின் கரங்களும் நீண்டிருப்பதாக குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன. ஆகவே பொலிஸார் இது தொடர்பாகவும் துரித விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும்.

இதேவேளை அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 130 பேரில் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பில்லாத அப்பாவிகள் பலர் இருக்கலாம். ஆகவே பூரண விசாரணைகள் மூலமாகவே இதனைத் தெளிவுபடுத்திக் கொள்ள முடியும்.

ஏற்கனவே ஏராளமான தமிழர்கள் விசாரணைகள் ஏதுமின்றி சிறைகளில் நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலை தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் அவ்வப்போது விடுக்கப்பட்ட போதிலும் எதுவுமே நடக்கவில்லை. தற்போது இந்த 130 பேர் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மிகப் பெரிய ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட பெரும் முதலைகள் சுதந்திரமாக உலாவி வருகின்றனர். கைது செய்யப்பட்ட ஒரு சிலரும் சிறை வாழ்க்கைக்குப் பதிலாக சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். மேலும் பெரிய குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட அரசியல்வாதிகள் சிலர் இதுவரை தண்டிக்கப்படாத நிலையில் சௌகரியமாக வாழ்ந்து வருகின்றனர். ஆகவே நீதி என்பது அனைவருக்குமே சமமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இனரீதியாகவோ அல்லது மத ரீதியாகவோ நீதி வழங்கப்படுமாயின் அது நாட்டின் ஒற்றுமையையும், சமாதானத்தையும் சீர்குலைத்துவிடும்.

ஆகவே அனுராதபுரம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டவர்களின் விடயத்திலும் நீதி தேவதையின் கடைக்கண் பார்வை விழ வேண்டும். அப்பாவிகள் ஒருபோதுமே தண்டிக்கப்படக்கூடாது. மேலும் மாணவர்களின் விடயத்தில் அவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பொருத்தமான நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டும். இதுவே அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சேரலாதன்

# நாட்டின் தலைவிதி



தற்போதைய பிரதம மந்திரியும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவியில் அமர்ந்திருப்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தமக்குக் கிடைக்க வேண்டிய பதவியொன்றை ரணில் விக்கிரமசிங்க தட்டிப் பறித்து வைத்திருப்பதாகவே அவர்கள் நினைக்கின்றனர்.

# இனிமேல் மக்களின் கைகளில்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கப் போகின்றது. இந்தத் தேர்தலில் தற்போதைய நல்லாட்சி தொடர வேண்டுமா? அல்லது முன்னைய பேயாட்சிக்கு இடம் வழங்குவதா? என்பதை மக்கள் தீர்மானிக்கப் போகின்றார்கள்.

தற்போதைய அரசியல் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடும் நிலை தோன்றியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான அணியினர் மஹிந்த தலைமையில் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளும் முனைப்புடன் இடம்பெற்று வருகின்றன. முன்னாள் ஜனாதிபதி பிரதமர் பதவி மீது கண் வைத்துள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன. அவர் தாமொரு முன்னாள் ஜனாதிபதி என்பதையும் மறந்து அதற்கும் கீழ் உள்ள பதவி ஒன்றுக்குப் போட்டியிடும் நிலைக்குத் தாழ்ந்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுபடுகின்றமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பாக அமையப் போகின்றது. சிறுபான்மையினக் கட்சிகள் சில பிளவுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விடுத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேர்தல் கூட்டணி அமைப்பதற்கான சாத்தியங்களும் உண்டு.


தற்போதைய பிரதம மந்திரியும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவியில்அமர்ந்திருப்பதைஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தமக்குக் கிடைக்க வேண்டிய பதவியொன்றை ரணில் விக்கிரமசிங்க தட்டிப் பறித்து வைத்திருப்பதாகவே அவர்கள் நினைக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிப் பதவியில் அமர்வதற்குக் காரணமானவர்களில் ரணில் விக்கிரமசிங்க முக்கியமானவர். எவராலுமே அசைக்க முடியாதவர் என்ற இறுமாப்புடன் காணப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைவதற்கு ரணிலின் ஒத்துழைப்பும் காரணமாகிவிட்டது. ஆகவே பிரதமர் பதவியில் அமர்வதற்கு அவர் முற்றிலும் பொருத்தமானவரே. ஆனால் அந்தப் பதவியில் அமர்ந்துகொண்ட முறைதான் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகி விட்டது.



மஹிந்த ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினர் எதிர்கொண்ட அவலங்கள் ஏராளம். பெரும்பான்மையின மக்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் சிறுபான்மையினரை மஹிந்த சிறு துரும்பாகக் கூட மதிக்கவில்லை. பெரும்பான்மையினர் இன்னமும் அவரை யொரு போரில் வெற்றி கண்ட வீரனாகவே மதிக்கின்றனர். புலிகளைத் தோற்கடித்து அவர்களிடமிருந்து காப்பாற்றியவர் மஹிந்தவே என்ற எண்ணமும் இன்னமும் மங்காத நிலையிலுள்ளது. மஹிந்தவும் மக்கள் மனதிலிருந்து இது மறையாத வண்ணம் பார்த்துக் கொள்கின்றார். இவரது இனவாத உரைகள் இதற்கு உதவி புரிகின்றன. மேலும் இனவாதத்தைக் கொழுந்துவிட்டு எரிய விடுவதன் மூலமாக நல்ல அரசியல் அறுவடையைப் பெற முடியுமென்ற சூத்திரத்தையும் மஹிந்த நன்கு அறிந்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 58 லட்சம் வாக்குகளை அவர் பெற்றுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. வடக்கு, கிழக்கில் [illegible] தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே மைத்திரியை ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்த்தியுள்ளன என்ற உண்மையை எவருமே மறுக்க முடியாது. இந்த வாக்குகள் மைத்திரிக்கு அளிக்கப்படாதிருந்தால் இன்னமும் மஹிந்த யுகமே இந்த நாட்டில் நீடித்திருக்கும். நல்லாட்சி மலர்வதற்கான வாய்ப்பே இல்லாமற் போயிருக்கும்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்பதில் வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ போன்றவர்கள் விடாப்பிடியாக நிற்கின்றனர். மக்கள் செல்வாக்கு அறவே இல்லாத இவர்கள் மஹிந்தவின் மந்திரத்தை உச்சரித்தவாறு வெறும் வாயைமென்று கொண்டிருக்கின்றனர். வீரவன்ஸவைப் பற்றி சொல்லவே தேவையில்லை. ஜே.வி. பியின் பரப்புரைச் செயலாளராகத் திகழ்ந்து, பரப்புரை மேடைகளில் அனல் தெறிக்க கட்சியின் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பிய அவர் இறுதியில் கொள்கைகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டுமஹிந்தவின் காலடியில் வீழ்ந்தவர். ஆடம்பரப் பிரியரான இவர் முக்கியமான அமைச்சுப் பதவியையும் வகித்தவர். இவர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவரது மனைவியும் கடவுட்சீட்டு மோசடியில் சிக்கியுள்ளார். இவற்றிலிருந்து விடுபட வேண்டுமானால் மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவதே ஒரே வழியென இவர் சிந்தித்திருக்கலாம். ஆனால் தீவிர இடதுசாரியென அடையாளம் காணப்பட்ட வாசுதேவ நாணயக்காரவின் செயற்பாடுகள்தான் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன. அவர் கண்மூடித்தனமான வகையில் மஹிந்தவை ஆதரிப்பது ஏன் என்பதும் புரியவில்லை. மேலும் பாடசாலைப் பிள்ளைகள் பார்த்திருக்க நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சகிக்க முடியாத கூடாத வார்த்தைகளால் வாசுதேவ வசைபாடியுள்ளார். இதற்காக அவர் மனம் வருந்தியதாகவும் தெரியவில்லை. ஏனென்றால் இன்னமும் கூடாத வார்த்தைகள் எனது நினைவுக்கு வந்திருந்தால் அவற்றைக் கொண்டும் ரணிலைத் திட்டியிருப்பேன் என அவர் கூறியுள்ளமை இதனை உறுதி செய்கின்றது.



ஆனால் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகும் பெரும்பான்மையின மக்கள் சிந்தித்து வாக்களிப்பதற்கான தருணம் வந்துவிட்டது. குறுகிய அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முயற்சிக்கும் மஹிந்த போன்றவர்களை அவர்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும். மேலும் கடந்த ஆட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களையும் புறமொதுக்கி வைத்தல் வேண்டும். இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டுக்கு மீட்சி கிடைக்கவே கிடைக்காது.

எவரால் நல்லாட்சி வழங்க முடியுமோ? அவர்களுக்கே ஆதரவு வழங்குவதன் மூலமாக இந்த நாட்டை ஊழல், மோசடி, இனவாதம் ஆகியவற்றிலிருந்து மீட்டெடுக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தமது சரியான முடிவை வழங்கிய சிறுபான்மையினத்தவர்கள் இனியும் சரியான வழியிலேயே நடப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு. பெரும்பான்மையின மக்கள்தான் சிந்தித்து நல்லதொரு முடிவை எட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாத அருள்பாலிக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன்

கலாபூஷணம் திருமதி
புவனா ஐயம்பிள்ளை,
முள்ளியவளை,

வன்னிப் பெருநிலப்பரப்பில் சோழகக் காற்று வீசத் தொடங்கிவிட்டால் கண்ணகி அம்மனின் தெய்வீக வருகையைக் கட்டியம் கூறுவதுபோன்ற உணர்வலைகள் மக்கள் மத்தியில் ஊற்றெடுக்கத்தொடங்கிவிடும் இவ்வாறான சிந்தனை குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் தமிழ் மக்களுக்கும் வடக்கு கிழக்கு மத்திய மாகாணங்களில் வாழ்ந்துவரும் சைவத் தமிழ் மக்களுக்கும் மட்டுமன்றி, தென் இலங்கைப் பௌத்த மக்களுக்கும் அருள் தரும் பெருவிழாவாக அமைவதால், இன மத வேறுபாடின்றி அனைவருக்கும் கேட்ட வரமளித்தருளும் கண்ணகி அம்பாளை நாடி வரும் மக்கள் கூட்டம் எண்ணிலடங்கா. இப்பெருவிழா சுமார் பதினைந்து நாட்கள் நடைபெற்றாலும் பாக்குத்தெண்டல், தீர்த்தமெடுத்தல் நிகழ்வுகள் முக்கியப்படுத்தப்பட்டு அம்மாளின் பெரும் பொங்கல் இடம்பெற்று பக்தஞானிப் பொங்கலுடன் நிறைவுறும்.



இன்று பொங்கல் பெருவிழா

முள்ளியவளை: இது ஒரு அழகிய கிராமம் பனங்காமத்திற்கு அடுத்த பெரிய வன்னிக்கிராமமாக சுமார் எழுபது கிராமங்களை உள்ளடக்கிய வன்னி மையமாக விளங்கியது. யாழ்ப்பாண அரசனான பரராச சேகரன் முள்ளியவளையில்



கோட்டை கட்டி கோயிலொன்றையும் வகுப்பித்தான் என்று வையா பாடல் (16 ஆம் நூற்றாண்டு) கூறுகின்றது. விநாயகப் பெருமானை வணங்கி எச்செயலையும் தொடங்கும் சைவ மரபுக்கேற்ப தலைசிறந்த தனித்துவமான கண்ணகி அம்மன் பொங்கல் விழா பொங்கலுக்கு முந்திய ஏழு நாள்களும் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் நடைபெறுவது வழக்கமாகும். இதற்காதாரமாக முள்ளியவளையில் கண்ணகி அம்மன் உறைந்திருந்ததாக அறியக் கூடிய அம்மன் சிந்துப் பாடலைப் பார்ப்போம். பிந்தி வந்தங் கொணாமைக் கடவை தனிலும் பேரான முள்ளியவளைப் பதியுறைந்தாய், தந்தி முகன் கோயிலில் வந்து மடை கண்டு தார் கடல் உப்புத் தண்ணீரில் விளக்கேற்றி, அந்திப்பொழுதிலே நந்திக் கடற்கரையில் வைகாசித் திங்களில் வந்த மாதாயே. இப்பாடலில் கண்ணகி அம்மன் வற்றாப்பளையில் தனது உறைவிடத்தை அணுகு முன்னர் முள்ளியவளையில் தங்கி பொங்கல் மடை கண்டு போவதாகக் குறிப்புண்டு. தந்தி முகன் கோயில் காட்டாவிநாயகர் கோயிலைக் குறிக்கும். இந்தக் கோயில் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை கொண்டது. இங்கேதான் உப்பு கடல் நீரில் விளக்கு ஏற்றப்பட்டதாக இப்பாடல் கூறுகின்றது.

வற்றாப்பளை கண்ணகை அம்பாளின் பெரு விழாவை வற்றாப்பளைப் பொங்கல் என்றே கூறும் வழக்கம் நிலைத்துவிட்டது. அம்மை வீற்றிருக்கும் தலம் இடத்துக்காகி வற்றாப்பளைப் பொங்கல் ஆகிவிட்டது. பெருமளவு முக்கியமான தலங்களை இடப்பெயரால் அழைப்பது மரபாகிவிட்டது. புதூர்ப் பொங்கல்,வட்டுவாகல் பொங்கல், ஒட்டுசுட்டான் திருவிழா, வன்னிவிளாங்குளம் பொங்கல், கல்லிருப்புப் பொங்கல், புளியம் பொக்கணைப் பொங்கல், இத்திமடுப் பொங்கல், கற்கிடங்குப் பொங்கல், பொறிக் கடவைப் பொங்கல் என்பவை நோக்கற்குரியவை. தலத்தையும் மூர்த்தியையும் இடப்பெயரால் அழைப்பது இடத்தின் விசேடமல்லவா!

**வற்றாப்பளை:** வற்றாப்பளை கண்ணகி அம்மனின் பொங்கலில் முன்னைய பின்னைய சிறப்பம்சங்களை நோக்கும்போது அவற்றை மூன்று கட்டங்களுக்குள் வரையறை செய்வது பொருத்தமானது எனலாம் இதன் முதலாவது கட்டம் பாக்குத் தெண்டல் ஆகும்,

பாக்குத்தெண்டல்:வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் பொங்கலுக்கான திரு நிகழ்வின் தீர்த்தமெடுத்தல் தினத்துக்கு சரியாக ஏழு நாள்களுக்கு முன்னர் பாக்குத் தெண்டல் நிகழ்வு இடம்பெறும். தனிப்பெரும் தேவியாக அருளாட்சி நல்கிக் கொண்டேயிருக்கும் கண்ணகி அம்மனின் பெரும் பொங்கல் விழாவுக்குக் கால்கோளாக அமைவது பாக்குத் தெண்டல் நிகழ்வாகும்,

பொங்கலிற்கான ஆரம்ப வேலைகளைப் பகுத்தும், பிரித்தும், வகுத்தும் நோர்ப்புக்காரர்களிற்கு ஒதுக்கிக் கொடுத்து ஆகவேண்டிய சகல ஏற்பாடுகளையும் முறைப்படி செய்யும் கடமை வரு காலம் எனவும், ஏழு நாள்களைக் கொண்டதாகவும் இக்காலம் அமையும். கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை வருடாந்தப் பொங்கலுக்கான பாக்குத்தெண்டல் இடம் பெற்றது. இந்த நாளிலிருந்து எட்டாவது நாள் இந்து மகா சமுத்திரத்தில் சிலாவத்தைத் தீர்த்தக்கரையில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம் பெறும். இந்த வருடத்திற்கான தீர்த்தமெடுக்கும் நிகழ்வு கடந்த 25ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

**தீர்த்தம் எடுத்தல்:** உப்பு நீரில் விளக்கு எரியும் உலக அதிசயங்களில் மகோன்னதம் எனக் கருதக் கூடிய தீர்த்தமெடுத்தல் திரு நிகழ்வு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்தே ஆரம்பிப்பது வழக்கம். ஆலயத்தில் உச்சிக் காலப் பூசை முடிந்ததும் தீர்த்தம் எடுக்கும் வைபவம் ஆரம்பமாகும். தீர்த்தமெடுக்க கொண்டுசெல்லும் வெண்கலக் குடத்தை வெண் துணியால் சுற்றி மூடி அதற்குப் பூசைகள் செய்து தீர்த்தமெடுக்கப் புறப்படுவர். குடத்தைச் சுமந்து செல்பவர் தன் வாயை வெண் துணியால் மறைத்துக் கட்டி எல்லோரின் ஆசீர்வாதங்களையும் பெற்று பக்தி சிரத்தையுடன் பாத்திரத்தைத் தன் தோழில் வைத்து மேலாப்புப் பிடித்துவர, பறை கொட்ட பாதசாரிகளாக அடியார்கள் சிலாவத்தை தீர்த்தக்கரை (கடற்கரை)க்குச் செல்வர். அங்கு ஏற்கனவே தீர்த்த நிகழ்ச்சிக்கான விசேட ஆயத்தங்களுடன் கும்பம் தீபம் மடை போன்ற திருச் சின்னங்களால் அலங்கரித்துப் பூசகர் காத்திருப்பார். தீர்த்தமெடுக்கச் செல்லும் குழாம், ஏற்கனவே சிலாவத்தையில் குழுமியுள்ள குழாம் அனைவரதும் அரோகரா ஒலியும் வேத ஒலியும் பறை ஒலியும் ஒன்று சேர்ந்து ஒலிக்க தீர்த்தமெடுப்பவரும் இவருக்கு உதவியாக கடற்கரை கிராமத்தவர் இருவருமாக இணைந்து இந்து சமுத்திரத்தில் இறங்கி சமுத்திரத்தைப் பார்த்தபடியே முன்னேறிச் செல்வார்கள். நீர் கழுத்து முட்டுமளவுக்குச் சென்றதும் பொங்கி வரும் முதற் பேரலையில் குடம் கழுவி விட்டு அடுத்த பேரலைக்குக் காத்து நின்று பேரலை வரும்போது குடத்துடன் மூவருமாக நீரில் மூழ்கி குடத்தை நிறைத்து கரைக்கு மீள்வர் அந்த நீர்தான் தீர்த்தம் எனவும் உலக அதிசயமான உப்பு நீரில் ஒளியேற்றும் அற்புத பெரு விழாவாக முள்ளியவளைக் காட்டா விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து ஏழு நாள்களுக்கு அணையாத் தீபமாக சுடர் விட்டெரியும் ஒளியாக காட்சி கொடுப்பதை யதார்த்தமாக காணக்கூடியதாக உள்ளது. பஞ்ச பூதங்களும் வேத மந்திர ஒலிக்குக் கட்டுப்படுகின்றன என்பது நிதர்சனமாகின்றதல்லவா!

**ஏடு படித்தல்:** தீர்த்தமெடுத்து ஒளியேற்றி காலையிலும் மாலையிலும் பூசைகள் நடைபெறும் காலத்தில் சிலம்பு கூறல் காவியம் (ஏட்டில் உள்ளவை) படிக்கப்படும். யாழ்ப்பாணம் குடாரப்பு எனும் பதியிற் பிறந்த வெற்றிவேற்புலவர் பாடிய சிலம்பு கூறல் காவியம் தொடர்ந்து ஏழு நாள்களுக்கும் காட்டா விநாயகர் ஆலயத்தில் படித்து காட்டா விநாயகர் ஆலயத்தில் பொங்கல் நிறைவு பெற்றதும் மடப் பண்டத்துடன் வற்றாப்பளைக்கு சிலம்பு கூறல் காவிய ஏட்டையும் எடுத்துச் சென்று அன்று முழுவதும் சிலம்பு கூறல் காவியம் படித்து நிறைவு செய்வர். ஏடு படிப்பது சாதரணமாக எல்லோராலும் செய்யக்கூடியதல்ல அதற்கும் அவள் அருள் வேண்டும்,

இன்று திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகித் தேவியின் வருடாந்தப் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. கடந்த 25 ம் திகதி தீர்த்தமெடுக்கும் விழாவுடன் ஆரம் பமாகி நேற்று 31 ஆம் திகதிவரை தொடர்ந்து முள்ளியவளைக் காட்டா விநாயகராலயத்தில் ஒளியேற்றப்பட்டு வரும் இன்று அதிகாலை 3மணிக்கு மடப் பண்டத்துடன் சர்வலோக நாயகியான கண்ணகித் தாயாரின் உறைவிடமான வற்றாப் பளைக்கு சென்று அங்கு இன்று இரவு வருடாந்தப் பொங்கல் நடைபெற்று செவ்வாய் அதிகாலை பரியலம் வழிவிடுதலோடு பொங்கல் இனிது நிறைவடையும்.

பக்தர்கள் தங்கள் தங்கள் நேர்த்திக் கடன்களைச் நிறைவேற்றி வழிபடும் காட்சியை வார்த்தைகளால் வடிக்க முடியாது. அடியார்களின் தொகை வருடா வருடம் பல இலட்சங்களால் அதிகரித்துக் கொண்டே செல்லும். இப்பெருவிழா முடிவுற்ற பின்னர் கதிர்காமக் கோயிலுக்கான பக்தர்கள் தமது பாத யாத்திரையை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்தே ஆரம்பிப்பது வழமையாகும்.

## லபார்ஜ் சிமெந்து நிறுவனத்தின் சவிபியச திட்டத்திற்கு இரு வங்கிகள் ஒத்துழைப்பு

தமது பாவனையாளர்களுக்கு சிறந்த வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு லபார்ஜ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சவிபியச வேலைத் திட்டத்தின் ஊடாக புதிய வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான கட்டட நிர்மாணம் தொடர்பான தொழில்நுட்ப அறிவை லபார்ஜ் நிறுவனம் வழங்கி இதனை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றது. இந்த வேலைத் திட்டத்தை மேலும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்காக 9 வர்த்தக நாமங்களும் இரு வர்த்தக வங்கிகளும் லபார்ஜ் நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

லபார்ஜ் சர்வதேச நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் சிறந்த நகரங்களைஉருவாக்குதல் (Building better cities) என்ற தொனிப் பொருளில் உலகிலுள்ள பெரும்பாலான குடும்பங்களுக்கு தற்போது பல்வேறு உதவிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. 2020ஆம் ஆண்டளவில் 2 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு விலைகொடுத்து வாங்கக் கூடிய அளவிற்கு சிறந்த வீடுகளை அமைத்துக் கொடுப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். அதனூடாக பொதுமக்கள் தமது வாழ்க்கைச் சூழலை சிறந்த விதத்தில் அமைத்துக் கொள்வதற்கு வசதியாக அமையும்.

எதிர்காலத்தில் லபார்ஜ் மகாவலி சிமெந்து நிறுவனம் வர்த்தகத் துறையில் முன்னணியில் திகழும் நாமங்களுடன்; தொடர்புகளைப் பேணி வருவதன் ஊடாக இரும்பு, மின் உபகரணங்கள், வண்ணம், கண்ணாடிப் பொருட்கள், PVC குழாய்கள் போன்ற கட்டடப் பொருட்களை விசேட நிவாரண விலைகளுக்கு சவிபியச வேலைத்திட்டத்தை முன்னெடுப்போருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன் நிதி நிறுவனங்களுடன் கைகோர்த்துள்ளமை யால் பாவனையாளர்களுக்கு வேண்டிய கடன் வசதிகளையும் துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த லபார்ஜ் சிமெந்து நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அநுராக் காக், பல வருடங்களுக்கு முன்னர் நாம் ஆரம்பித்த இந்த வேலைத் திட்டத்திற்கு சிறந்த வரவேற்பு கிட்டியுள்ளதுடன் விசேட கழிவுகள் மற்றும் நிதி வசதிகளின் கீழ் வீட்டு நிர்மாண வேலைத் திட்டம் ஒன்றை இந்த நாட்டில் மேற்கொள்ள முதலாவது சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது லபார்ஜ் நிறுவனமாகும். அதனால் தமது திட்டத்திற்கு அமைவாக நிர்



மாணிக்கப்பட்ட உயர் தரத்திலான வீடுகளைப் பெற்றுக் கொள்ளக் கிடைக்கின்றமை தனிப்பட்ட ஒருவருக்கு அவரது மனப் பாரத்தை குறைக்கும் என அவர் தெரிவித்தார்.

லபார்ஜ் சவிபியச திட்டத்திற்கு PVC எஸ்லோன், ஒரேன்ஜ் இலைக்ரிகல்ஸ், யாஸ்ன மஸ்கணைட், நிப்போன் பெயின்ற், இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம், ரொசெல், அசோக் கிளாஸ் மற்றும் Frostaire ஆகிய நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. Habitat for humanity என்ற அரசசார்பற்ற நிறுவனம் லபார்ஜ் நிறுவனத்துடன் இணைந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உள்ள தமது உறுப்பினர்களுக்கு நிவாரண விலைக்கு வீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன் அதற்காக நம்பகரமான பெயரைக் கொண்ட நிதி நிறுவனமான செலான் வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கிகளின் ஒத்துழைப்புகளை வழங்க முன்வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும்

*அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டு வருகின்றமை பெரும் வேதனைக்குரிய விடயமாகும். நாடுபூராகவும் எல்லா சமூகத்தினர் மத்தியிலும் இந்த நிலைமையானது பயத்தையும் பீதியையும் ஏற்படுத்துவதாகவுள்ளது. எனவே, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்படுவோர் தீர விசாரிக்கப்பட்டு குற்றம் உறுதியாகும் பட்சத்தில் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்" – என பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறுசுட்டிக்காட்டியுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

அண்மையில் புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் மீதான பாலியல் வன்முறையானது நாட்டில் பாரிய அதிர்வொன்றை ஏற்படுத்தியுள்ளது. அண்மைக்காலமாக இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர் பாலியல் வன்முறைகளுடன்கூடிய கொலைகளும் இடம்பெற்று வந்தமை அங்கு பெரும் பீதியை உருவாக்கியது. அதே போல வடமாகாணத்திலும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பாலியல் வன்முறைகளுடன் கூடிய கொலைகள் அங்கு வாழும் மக்களிடத்தில் ஒருவித பயத்தையும் பீதியையும் தோற்றுவித்துள்ளன. உறவினர்களாலும் அயலவர்களாலும் இந்த வன்முறை மேற்கொள்ளப்படுவதானது சமூகச் சீரழிவை ஏற்படுத்துவதாகவும் சமூக வாழ்வு சீர்குலைக்கப்படுவதாகவும் உள்ளன.

வித்தியா படுகொலை நடந்து பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடந்துகொண்டிருக்கும்வேளை கிளிநொச்சியிலும், ஊரணியிலும் சிறுமிகள் மீதான பாலியல் வன்முறை இடம்பெற்றிருக்கின்றமை மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இந்த நிலைமைகளைத் தொடர்ச்சியாக அனுமதிக்கமுடியாது. குற்றம் செய்தவர்கள் மனதில் அந்தப் பயத்தை உருவாக்குதன் மூலம் மாத்திரமே இத்தகைய குற்றங்களைத் தடுக்கமுடியும்" – எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# பொருளாதாரத்தைச் சுரண்டி பைகளை நிரப்பினார் மஹிந்த

*ரவி கருணாநாயக்க சாடுகின்றார்*

கொழும்பு, ஜூன் 1
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு, நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டி தமது பைகளை நிரப்பிக்கொண்டதென நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வெள்ளை வானில் மக்களைக் கடத்தி, ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள் மீண்டும் அதிகாரப் பசி கொண்டு அலைவது வெட்கக்கேடானது. மக்களின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்ட ஒருவர், தமக்கு சவாலான ஒருவர் அல்ல.

தாம் தவறிழைக்காவிட்டால், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்களின் விசாரணைக்கு ஏன் செல்லமுடியவில்லை எனக் கேள்வியும் எழுப்பியுள்ளார்.

நாட்டில் கடந்த 10 வருடங்களில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகளை எமது அரசினால் 100 நாட்களில் நிவர்த்திசெய்ய முடியாது, அவற்றை சிறிது சிறிதாக சரிசெய்து மக்களின் வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வதே எமது நோக்கமாகும்.

அத்துடன், எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்று தேசிய அரசொன்றை அமைப்பாரெனவும், அதன் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவே கடமையாற்றுவார் எனவும் தெரிவித்துள்ளார். (ற)

# அரச நிர்வாக சேவைக்கு புதிதாக 175 பேர்

அரச நிர்வாக சேவைக்கு 175 பேரை புதிதாக இணைத்துக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்காணல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே. தடல்லகே குறிப்பிட்டுள்ளார்.

அரச நிர்வாக சேவையின் மூன்றாம் தரத்திற்கான உத்தியோகஸ்தர்கள் தெரிவிற்காக, கடந்த வருடம் இடம்பெற்ற போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் புதிய சேவையாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் உத்தியோகஸ்தர்கள், பயிற்சியின் பின்னர் வெற்றிடங்கள் காணப்படும் பிரதேசங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர். மேலும் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு ஜூலை மாதமளவில் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ற)

# ஆட்சி மாறியும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை

*பிரிட்டன் தூதுவரிடம் நல்லை ஆதீன குரு முதல்வர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸிடம் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானதேசிக சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரிட்டனின் புதிய தூதுவராக பதவியேற்றுள்ள ஜேம்ஸ் டோரிஸ் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நல்லைஆதீனகுருமுதல்வரைச் சந்தித்து யாழ். மாவட்டத்திலுள்ள நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடினார். இதன்போதே நல்லை ஆதீன குரு முதல்வர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது யுத்தத்திற்குப் பின்னர் யாழ்.மாவட்டத்திலுள்ள நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.

மேலும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ் மக்களுடைய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இராணுவத் தேவைக்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இதனால் மக்கள் இன்றும் நலன்புரி முகாம்களில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் பிரிட்டன் தூதுவரிடம் நல்லை ஆதீன குரு முதல்வர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் அரசியல் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பிரிட்டன் தூதுவரிடம் நல்லை ஆதீன குரு முதல்வர் கோரிக்கை விடுத்தார். (ற)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேறும் அகதிகளுக்கு ஜேர்மனியில் புதிய நடைமுறை

பெர்லின், ஜூன் 1

ஜேர்மனியில் குடியேறும் வெளிநாட்டு அகதிகள் பயனடையும் வகையில் புதிய திட்டம் ஒன்றை அரசு தொடங்கியுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து ஜேர்மனியில் தஞ்சம் கோரி உறவினர்கள் துணை இல்லாமல் வரும் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை வரவேற்கும் வகையில் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

பெர்லினில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அரச நிகழ்வு ஒன்றில், ஜேர்மனியின் குடும்ப விவகாரத் துறை அமைச்சகமும், அகதிகள் இடம்பெயர்வு மற்றும் ஒருங்கிணைப்பு ஆணையமும் இந்தத் திட்டத்தைக் கூட்டாக தொடங்கிவைத்துள்ளன.

ஜேர்மனியின் சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினர் அறக்கட்டளையுடன் இணைந்து சுமார் 12 மில்லியன் யூரோ மதிப்பீட்டில் செயற்படுத்தப்படும் இந்தப் புதிய திட்டத்துக்காக முக்கிய நகரங்களில் புதிய அலுவலகங்கள் தொடங்கப்படும்.

இந்த அலுவலகங்களில் இணைந்து அகதிகளுக்கு உதவ ஜேர்மனி முழுவதுமிருந்து தன்னார்வத் தொண்டர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

தற்போது ஜேர்மனியில் வெளிநாடுகளைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் என சுமார் 30 ஆயிரம் பேர் தஞ்சம் பெற்று வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

# தீவிரவாத நாடுகளில் கியூபா நீக்கம்;

## அமெ. நடவடிக்கை

வொஷிங்டன், ஜூன் 1

அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையேயான தூதரக உறவுகள் 1961 ஆம் ஆண்டு துண்டிக்கப்பட்டு இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து பனிப்போர் நடந்து வந்தது. மேலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் கொரில்லா அமைப்புகளுக்கு கியூபா ஆதரவு தெரிவித்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டைத் தீவிரவாத ஆதரவு நாடுகள் பட்டியலிலும் அமெரிக்கா சேர்த்தது.

இந்த நிலையில் கடந்த வருடம் டிசெம்பர் முதல் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் மீண்டும் துளிர்க்கத் தொடங்கியது. இதன் பலனாக இரு நாடுகளுக்கும் இடையே தூதரக உறவுகளை மீண்டும் தொடங்க இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

இவ்வாறு உறவு மேம்படுவதைத் தொடர்ந்து, கியூபாவை தீவிரவாத நாடுகள் பட்டியலில் இருந்து நீக்க ஒபாமா விரும்பினார். இதற்காக 45 நாள் மறு ஆய்வுக்காலம் ஒன்றையும் அவர் அறிவித்தார். இந்த கெடு நேற்றுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, தீவிரவாத நாடுகள் பட்டியலில் இருந்து கியூபா நீக்கப்பட்டது. இந்தப் பட்டியலில் இனி ஈரான், சூடான் மற்றும் சிரியா ஆகிய நாடுகள் மட்டுமே உள்ளன.

இந்த நடவடிக்கை மூலம் கியூபாவுக்கு பொருளாதார உதவி, ஆயுத ஏற்றுமதி உள்ளிட்டவற்றில் போடப்பட்டிருந்த தடை நீங்கியது. எனினும் கியூபா மீது 1960 ஆம் ஆண்டுகளில் போடப்பட்டிருந்த விரிவான வர்த்தகம் மற்றும் ஆயுதங்கள் விற்பனைத் தடை நடைமுறையில் உள்ளதால், மேற்படி தடைகள் நடைமுறையில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (14)

# நைஜீரியாவில் மீண்டும் தற்கொலைப் படை தாக்குதல்

## 26 பேர் துடிதுடித்துச் சாவு



மைதுகிரி, ஜூன் 1

நைஜீரிய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள போர்னோ மாநிலத்தின் தலைநகரான மைதுகிரியில் நேற்று முன்தினம் பிற்பகல் நடந்த தற்கொலைப்படைத் தாக்குதல் காரணமாக, அங்கு பிரார்த்தனைக்காக வந்திருந்த 26 பேர் துடிதுடித்து உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மைதுகிரியின் பரபரப்பான சந்தைப் பகுதியில் உள்ள அல்ஹாஜி ஹருனா மசூதிக்குள், உடலில் கட்டியிருந்த சக்தி வாய்ந்த வெடி குண்டுகளுடன் நுழைந்த தீவிரவாதி ஒருவர் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தியுள்ளார். இந்தத் தாக்குதலின் போது, அங்கு பிரார்த்தனைக்காக வந்திருந்த 26 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 28 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (14)

# ஐ.எஸ் தீவிரவாதிகளை ஒடுக்க பிரான்ஸ் புதிய திட்டம்

பாரிஸ், ஜூன் 1



இணையத் தளங்கள் மூலம் பிரான்ஸ் இளைஞர்களை தீவிரவாதத்துக்குத் தூண்டும் ஐ.எஸ். தீவிரவாதிகளைக் கண்காணிக்க புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாக பிரான்ஸ் பிரதமர் மேனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசிய பிரதமர், இணையத்தளங்கள் மூலம் பிரான்ஸ் இளைஞர்களை மூளைச் சலவை செய்யும் ஜிகாதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது வருத்தம் அளிக்கிறது.

தற்போதைய அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஐ.எஸ். தீவிரவாதிகள் இளைஞர்களை எளிதில் தொடர்பு கொண்டு அவர்களைத் தங்களின் வலைக்குள் விழ வைக்கிறார்கள். ஐ.எஸ். தீவிரவாதி களின் இந்த முயற்சியை முறியடிக் கும் விதத்தில், இணையத் தளங்கள் மூல மாக அவர்களை தீவிரமாக கண் காணிக்க வேண்டும்.

இதற்கு, அனுபவம் வாய்ந்த, அதிநவீன தொழில்நுட்பங்கள் தெரிந்த ஹேக்கர்களை பணியில் அமர்த்தி தீவிரவாதிகளை கண்காணிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார். தீவிரவாதிகளின் இந்த முயற்சியை முறியடிக்கவே தற்போது புதிதாக ஹேக்கர்களை பணியில் அமர்த்த உள்ளதாகவும் மேனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார். (14)

# 8 கால்களுடன் பிறந்த விசித்திர நாய்க்குட்டி

டோங்கா, ஜூன் 1



பசிபிக் பெருங்கடலில் உள்ள டோங்கா என்ற தீவில் 8 கால்கள் கொண்ட விசித்திரமான நாய்க்குட்டி ஒன்று பிறந்திருப்பது அந்தப் பகுதி மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

டோங்கா தீவில் உள்ள வைனி என்ற இடத்தில் 5 குட்டிகளுடன் சேர்ந்து இந்த அதிசய நாய்க்குட்டி பிறந்துள்ளது. இந்த நாய்க்குட்டியின் வயிற்றுக்குக் கீழே ஒட்டியுள்ள அதன் 2 உடல்களின் காரணமாக 2 பின்னங்கால்களும் 2 வால்களும் உள்ளது. உடலின் மேற்புறத்தில், முன்புறம் ஒரு முன்னங்கால், பின்புறம் மற்றொரு முன்னங்கால் என ஒட்டு மொத்தமாக எட்டு கால்களுடன் இந்த விசித்திர நாய்க்குட்டி பிறந்துள்ளது.

ஆடு மற்றும் பூனைகள் இது போன்று விசித்திரமான தோற்றத்துடன் பிறப்பது வழக்கம். ஆனால் நாய்கள் இது போன்ற விசித்திர தோற்றத்துடன் பிறப்பது மிகவும் அபூர்வமானது என்று கால்நடை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (14)

# முகாம் அகதிகளை வெளியேற்ற

## பிரான்ஸ் அரசு உத்தரவு

பாரிஸ், ஜூன் 1

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸுக்கு அருகில் உள்ள தற்காலிக முகாம்களில் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதால் அங்கு தங்கியுள்ள புலம்பெயர்ந்தவர்களை வெளியேறுமாறு அரச அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

வடக்கு பாரிஸுக்கு அருகில் மெட்ரோ ரயில் பாதைக்கு அடியில் உள்ள பகுதியில் சுமார் 400 வெளிநாட்டவர்கள் தற்காலிகமாக முகாம்கள் அமைத்து தங்கி வருகின்றனர்.

எரித்திரியா, சூடான், எத்தியோப்பியா நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து வந்துள்ள அவர்கள் தங்களது குழந்தைகளுடன் கடந்த சில மாதங்களாக இந்தப் பகுதியில் தங்கி வருகின்றனர். பிரான்ஸ் நாட்டின் சுகாதாரத்துறை இந்தப் பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். அந்த ஆய்வில், அந்தப்பகுதி முழுவதும் சுகாதாரமற்ற சூழல் நிலவுவதால், மோசமான தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதாக அரசுக்குத் தகவல் அனுப்பியது.

இதனைத் தொடர்ந்து, கடந்த வியாழக்கிழமை முகாம்களுக்கு வந்த பிரான்ஸ் பொலிஸார், அந்த இடத்தை விட்டு வெளியேறுமாறு புலம்பெயர்ந்தவர்களுக்கு உத்தரவிட்டனர். (14)

# அடுத்த நிலநடுக்கம் மிக பயங்கரமாக இருக்கும்

## புவியியல் வல்லுநர்கள் எச்சரிக்கை

டோக்கியோ, ஜூன் 01



பசிபிக் கடற்பகுதியில் நெருப்பு வளையம் என்றழைக்கப்படும் ஆபத்தான நிலப்பரப்பில் அமைந்திருக்கும் ஜப்பான் நாட்டில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

அந்த நாட்டின் தலைநகரான டோக்கியோவில் இருந்து தெற்கே சுமார் ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் உள்ள போனின் தீவில் நேற்று முன்தினம் 7.8 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. போனின் தீவில் இருந்து சுமார் 194 கிலோமீற்றர் தூரத்தில் ஏற்பட்ட அந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, அடுத்து மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக புவியியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எனவே பயங்கர நிலநடுக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் தயாராக இருக்குமாறு ஜப்பான் அரசை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 12 பேர் படுகாயமடைந்தனர். கடந்த 2011 ஆம் ஆண்டு நிகழ்ந்த நிலநடுக் கத்திலும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுடன், புகுஷிமா அணு உலையிலும் கதிர்வீச்சு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)

# ‘காதல் பூட்டு’களை அகற்ற உத்தரவு



பாரிஸ், ஜூன் 1

பாரிஸில் உள்ள ஆற்றுப்பாலத்தில் பூட்டப்பட்டுள்ள காதல் பூட்டுகளை அகற்ற அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் உள்ள செயின் ஆற்றுப்பாலத்தில் உள்ள தடுப்புச்சுவரில் காதலர்கள், தங்கள் காதல் நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்தில் பூட்டுகளை மாட்டிவிடுவார்கள். அந்த நாட்டு மக்கள் மட்டுமின்றி, உலக நாடுகளில் இருந்து பிரான்ஸுக்கு சுற்றுலா வரும் பயணிகளும் காதல் பூட்டுகளை மாட்டிவிடுவார்கள். இந்தப் பூட்டுகளின் சுமை தாங்க முடியாமல், அண்மையில் பாலத்தின் ஒருபகுதி இடிந்து விழுந்ததாக தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் இலட்சக் கணக்கான பூட்டுகள் பாலத்தின் தடுப்புச்சுவரை ஆக்கிரமித்துள்ள நிலையில் அவற்றினை அகற்ற அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

மேலும் இந்தப் பூட்டுகளால் பாரிஸின் பாரம்பரியம் சீர்குலைந்து வருவதாகவும், இந்தப் பூட்டுகள் மக்கள் மத்தியில் மூடநம்பிக்கையை வளர்க்கும் விதமாக உள்ளதால், அங்கு தொங்கவிடப்பட்டுள்ள ஒரு மில்லியன் பூட்டுகளை அகற்ற அரசு நிர்வாகம் முடிவு செய்துள்ளது. மேலும், இனிமேல் அங்கு யாரும் பூட்டுகளை மாட்டக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. பாலத்தின் தடுப்புச்சுவற்றில் உள்ள இரும்புக் கம்பிகளுக்குப் பதிலாக, கண்ணாடிகளால் வடிவமைக்கப்பட்ட ஜன்னல்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவுக்குள் நுழைவதற்கு 89 ஐரோப்பியருக்குத் தடை



லண்டன்,ஜூன் 1

ஐரோப்பாவைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் உட்பட 89 பேர் தங்கள் நாட்டுக்குள் வர ரஷ்யா தடை விதித்துள்ளது.

பிரிட்டனின் முன்னாள் துணை பிரதமர் நிக்கிளிக் மற்றும் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி சர்மல் கொலம் ரிப்கிண்ட் ஆகிய ஐரோப்பாவைச் சேர்ந்த 89 அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் தங்கள் நாட்டுக்குள் நுழைய ரஷ்யா தடை விதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் இது தொடர்பான விவரங்களை ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியிடம் வழங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் உத்தரவின் பேரிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகதகவல் வெளியாகியுள்ளது. உக்ரையினின் உள் நாட்டு கலவரத்தில் கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா மறைமுகமாக உதவி வருவதாக உக்ரையின், நேட்டோ மற்றும் மேற்கத்தியப் படைகள் குற்றஞ்சாட்டி வரும் வேளையில் ரஷ்யாவின் இந்த முடிவு உக்ரையின் விவகாரத்தில் மேற்கத்திய நாடுகளுடனான உறவில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐரோப்பியாவின் வெளிவிவகாரங்களுக்கான செய்திதொடர்பாளர் ஒருவர் கூறுகையில்; கடந்தசில நாள் களாகவே ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த தலைவர்கள் தங்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு ரஷ்யா அனுமதி மறுத்துவருகிறது. இது தொடர்பான விவகாரங்களை ரஷ்யாவின் பிரதிநிதிகள் எங்களுடன் பகிர முடிவு செய்துள்ளனர். எனினும் இது தொடர்பாக வேறு எந்த அதிகாரபூர்வ தகவலும் தங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ரஷ்யா கிரிமியாவை இணைத்து கொண்டதற்காக ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (14)

# இறந்த பின்னர் அவரின் முகம் வேறு ஒருவருக்கு



வொஷிங்டன், ஜூன் 1

அமெரிக்காவில் இறந்தவரின் முகத்தை வேறு ஒரு நபருக்கு பொருத்தி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்காவின் வேர்ஜீனியாவைச் சேர்ந்த ரிச்சர்ட் நோரிஸ் என்பவர் கடந்த 1997 ஆம் ஆண்டு தனது தலையில் துப்பாக்கியால் சுட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். இந்தச் சம்பவத்தால், அவரது முகம் சிதைந்துபோனது, இதனைத் தொடர்ந்து அவருக்கு பல்வேறு அறுவை சிகிச்சைகள் செய்தும் அவரது முகத்தைச் சரிசெய்ய முடியவில்லை.

இந்த நிலையில் வேர்ஜீனியாவைச் சேர்ந்த ஜோஸ்வா என்ற இளைஞர்; உடல் நலக்குறைவால் உயிரிழந்தார். அவரது முகத்தைத் தானமாக பெற்று, நோரிஸ்க்கு பொருத்த மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தின் மருத்துவர்கள் முடிவு செய்தனர்.

சுமார் 3 மணி நேரம் நடந்த இந்த அறுவை சிகிச்சையில், அவரது பல், தாடை, நாக்கு மற்றும் நரம்புகள் மாற்றப்பட்டன. அறுவை சிகிச்சைக்குப் பின்னர் ரிச்சர்ட் நோரிஸின் முகம் இறந்த ஜோஸ்வாவின் முகத் தோற்றமாக மாறியது.

அண்மையில் வேர்ஜினியா வந்த ஜோஸ்வாவின் சகோதரி ரேபேகா அவெர்சனோ முகம் மாற்று அறுவைசிகிச்சை செய்து கொண்ட ரிச்சர்ட் நோரிஸை நேரில் சந்தித்துள்ளார். அப்போது, அவரது முகம், அச்சு அசல் இறந்த தனது சகோதரன் ஜோஸ்வா போன்று இருந்ததை பார்த்து ஆனந்தம் அடைந்தார். (14)

# உணவுப் பொருள்களில் கலந்திருக்கும் உயிரினங்கள்

ரொறான்ரோ, ஜூன் 1

கனடாவில்உணவுப்பொருள்களின் தரம் மற்றும் சுகாதாரம் மிகவும் குறைந்துவிட்டதாகவும் அவற்றில் பல உயிரினங்கள் கலந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அதன் மூலம் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அவற்றில் முக்கியமான சில நிகழ்வுகள் நியு பவுன்லாந்து பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் மளிகைக் கடையில் இருந்து வாங்கிய உறைந்த இறைச்சிப் பக்கற்றுக்குள் பல்லியின் தலை இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாக தெரிவித்துள்ளார்.

இதேபோன்று சென்.ஜோன்சைச் சேர்ந்த பெண் புளூ டயமண்ட் என்ற பாதாம் பாலை வாங்கியுள்ளார். அதற்குள் 10 முதல் 12 அங்குல பூஞ்சணம் இருந்ததைக் கண்டு பிடித்ததாகத் தெரிவித்துள்ளார்.

நியு பிறவுன்ஸ்விக் சேர்ந்த ஒருவர் வழக்கம்போல் மக்டொனால்டில் கோப்பியை வாங்கி குடித்துள்ளார். பின்னர் கப்பின் அடியில் இருந்த கோப்பியையும் குடிக்க மூடியை திறந்தபோது கப்பின் அடியில் ஒரு செத்த சுண்டெலியைக் கண்டுள்ளார். இதனால் உணவு பொருள்களின் தரம் குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (14)



# ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக களமிறங்கிய ஹொலிவூட் நடிகர்

லண்டன்,ஜூன் 1

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு எதிராக போராட ஹொலிவூட் நடிகர் ஒருவர் முடிவு செய்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் கொண்டுள்ள ஐ.எஸ் அமைப்பு தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கும் நோக்கில் பல்வேறு அட்டூழியங்களை நிகழ்த்தி வருகின்றன. இந்த ஐ.எஸ். அமைப்பை எதிர்த்து குர்திஷ் அரசு படையினர் அமெரிக்க உதவியுடன் போராடி வருகின்றனர். இந்த நிலையில் இந்த குர்திஷ் அமைப்பில் இங்



கிலாந்து நடிகர் மைக்கேல் என் ரைட் என்பவரும் இணைந்துள்ளார். (14)

# மொரீசியஸ் ஜனாதிபதியாக முதன் முதலாக பெண் தெரிவு

போர்ட்லூயிஸ்,ஜூன் 1

இந்தியப்பெருங்கடலில்உள்ள குட்டி தீவு நாடு மொரீசியஸ், பணக்கார நாடான இங்கு 13 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இங்குகரும்பு அதிகம் விளைவதால் சர்க்கரை ஆலைகள் அதிகம். அதனால் இங்கிருந்து சர்க்கரை அதிக அளவில் ஏற்றுமதி ஆகிறது.

மொரீசியஸின் ஜனாதிபதி ஆக கைலாஷ் புர்யாக் பதவி வகித்து வந்தார். இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக அமீனா குரிப்-பாகிம் அறிவிக்கப்பட்டுள்ளார். அதன் மூலம் அவர் மொரீசியஸின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமை பெறுகிறார். புதிய ஜனாதிபதியாக அவரை பிரதமர் சர் அனிருத் ஜெகனாத் அறிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின் போது அமீனா குரிப்-பாகிமை ஜனாதிபதி ஆக்குவதாக அவர் வாக்குறுதி அளித்து இருந்தார். அதன்படி அவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ளார். (14)

# புருண்டி நாட்டில் தொடரும் போராட்டம் தேர்தல் குழுத் தலைவர் தப்பியோட்டம்

புஜும்புரா,ஜூன் 1

புருண்டியில் உள்ளாட்சி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்கவிருக்கும் நிலையில் அந்த நாட்டின் தேர்தல் குழுத் துணைத் தலைவர் தப்பி ஓடியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் 3 ஆவது தடவையாக அவர் போட்டியிடுகிறார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு போராட்டம் நடைபெறுகிறது. இதற்கிடையே ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா, தான்சானியா நாட்டில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்கச் சென்றார். இந்த நிலையில் அங்கு திடீரென இராணுவ புரட்சி ஏற்பட்டது.

இந்தப்புரட்சியை ஜனாதிபதி பியார்ரேவுக்கு எதிராகச் செயல்படும்



தளபதி கோட் பிராய்டு நியோம்பர் நடத்தினார். ஆனால் அரசு விசுவாச இராணுவப் படைகள் புரட்சியை முறியடித்து விட்டது. தேர்தல்கள் கடந்த வாரம் நடைபெறவிருந்த நிலையில் தேர்தல் ஆணையத்தின் வேண்டுகோளின் படி எதிர்வரும் 5 ஆம் திகதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

இந்த நிலையில் 5 பேர் அடங்கிய தேர்தல் குழுவின் துணைத் தலைவர் ஸ்பெஸ் கரித்டாஸ் நதிரோன்கேயே பக்கத்து நாடான ருவாண்டாவுக்கு தப்பியோடியுள்ளார். அவர் தப்பியோடியதற்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை. ஆனால் தனது பதவி விலகல் கடிதத்தை மட்டும் விட்டுச் சென்றுள்ளார். இதனால் நடக்கவிருக்கும் தேர்தல் பாதிக்கப்படாது எனக் கூறப்படுகிறது. அதே சமயம் 5 பேர் குழுவில் 2 பேர் இல்லை என்றால் எந்தவித முடிவுகளும் எடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. இது அதிபர் பியார்ரே நகுருன் ஜிசாவிற்கு மிகப்பெரிய பின்னடைவாக கருதப்படுகிறது. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகள் பணத்தைக் கூட விடவில்லை கடந்த அரசு

## சாடுகின்றார் அமைச்சர் சஜித்



அம்பாறை, ஜூன் 1

கடந்த அரசு ஏழை மக்களையும் விட்டுவைக்கவில்லை. ஏழைக் குடும்பங்களினால் சமுர்த்தி வங்கிகளில் வைப்பிலிடப்பட்டிருந்த 300 மில்லியன் ரூபாவை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, அவர்கள் செலவு செய்துள்ளனர் என சமுர்த்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வீட்டுக்கடன் மற்றும் வாழ்வாதாரக் கடனுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு, அம்பாறை தயாகமகே ஆடைத்தொழிற்சாலை கூட்ட மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:–

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பஸ் போக்குவரத்து, உணவு மற்றும் ஊடக செலவுகளுக்காக நாளாந்தம் 63 மில்லியன் ரூபாவை அவர்கள் செலவு செய்துள்ளனர். ஏழை மக்களையும் நிதி நிறுவனங்களையும் கடந்த அரசு தங்களது தேவைகளுக்காகவும் பயன்படுத்தி உள்ளது.

வறுமை ஒழிப்புத் திட்டமான சமுர்த்தித் திட்டம் முறையாக கொண்டு செல்லப்படவில்லை. உறவினர்களுக்கும் தெரிந்தவர்களுக்குமே முன்னுரிமையுடன் அதன் பலாபலன்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது இந்தசமுர்த்தித்திட்டத்தைக் கொண்டு செல்வதில் பாரிய சவால் உள்ளது. இந்த நாட்டில் 51 இலட்சம் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கள் அனைவரும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள். ஏதோவொரு வகையில் இவர்கள் எமக்கு தெரிந்தவர்கள். அதற்காக 51 இலட்சம் குடும்பங்களுக்கும் சமுர்த்தி உதவியை வழங்கமுடியாது.

உரிய பயனாளிகளையும் தகுதியானவர்களையும் தெரிவுசெய்வதற்காகவே அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த அதிகாரிகள் முறையாக செயற்படாதுபோனால், 51 இலட்சம் குடும்பங்களுக்கும் வழங்க வேண்டிய நிலையேற்படும். 51 இலட்சம் குடும்பங்களுக்கும் வழங்குவதாயின், இதற்கு அதிகாரிகள் தேவையில்லை.

அத்துடன், தற்போதைய அரசு முறையானதிட்டங்களைத் தயாரித்து ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சிறந்த வழிகாட்டுதலுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. – என்றார். (ற)

# பொருளாதாரம் பற்றிய விவாதத்துக்குத் தயார்

## பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

இலங்கையின் தற்போதைய பொருளாதாரம் தொடர்பில் கலந்துரையாட தொலைக்காட்சி விவாதத்துக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன விடுத்த சவாலை, பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா ஏற்றுக்கொண்டுள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவும், மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனும் நிதி தொடர்பில் போலியான தகவல்களை வழங்கி வருவதாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அல்லது கொள்கை திட்டமிடல் துறை பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா ஆகியோரை விவாதத்துக்கு வருமாறும் பந்துல சவால் விடுத்திருந்தார்.

இந்த சவால் குறித்து பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா, சிங்கள மொழி ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:-

அவருக்கும் எனக்கும் ஒரே நாளில் விடுமுறை கிடைக்கும் போது முழு நாட்டுக்கும் தெரியும் வகையில், நாட்டுப் பொருளாதாரம் குறித்து விவாதத்திற்கு செல்வோம் என எனது நண்பர் பந்துல குணவர்தனவிற்கு நேற்றுமுன்தினமே கூறப்பட்டு விட்டது.

வெறுமனே சவால் விடுத்துக்கொண்டிருக்காமல் பகிரங்கமாக விவாதத்துக்கு வரவும். இதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

கடந்த 20 வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை பின் தள்ளிவிட்டு 100 நாள்களில் அதனை நிவர்த்திசெய்ய முடியவில்லை என்று குறிப்பிடுகின்றார்கள்.

நானும் இது குறித்து விவாதிப்பதற்கான சந்தர்ப்பத்தைத் தான் எதிர்பார்த்துக்கொண்டுள்ளேன். – என்று அவர் கூறியுள்ளார். (ற)

# மு.காவை பிளவுபடுத்த ஹெல உறுமய சூழ்ச்சி

## எம்.நிஸாம் காரியப்பர் குற்றஞ்சாட்டுகின்றார்



அம்பாறை, ஜூன் 1

தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும் தனக்கும் கருத்து முரண்பாடு நிலவுவதாக, ஜாதிக ஹெல உறுமய மேற்கொள்ளும் பொய்ப் பரப்புரை தமது கட்சியைப் பிளவுபடுத்துவதற்கான சதி முயற்சியாகும் என அக்கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர முதல்வருமான எம்.நிஸாம் காரியப்பர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

'தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. இந்த நிலைப்பாடு சகல சிறு கட்சிகளுடன் சேர்ந்து எடுக்கப்பட்ட முடிவாகும். இந்த நிலைப்பாட்டைத்தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், சவூதி அரேபியா சென்றிருந்த போது அவர் சார்பில் அமைச்சரவை உப குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட நான் தெரிவித்திருந்தேன்.

இந்த நிலைப்பாடு சம்பந்தமாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் அமைச்சர் திகாம்பரமும் ஏற்றுக்கொண்டு அவர்களும் அதற்கு உடன்பட்டிருந்தார்கள் என கூறினார். அதாவது முன்மொழியப்பட்டுள்ள புதிய தேர்தல் முறையில் இரண்டு வாக்குச் சீட்டுகள் கொண்டு வரும் பட்சத்தில் அது சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளினால் ஏற்றுக் கொள்ள முடியும் என்கின்ற நிலைப்பாடாகும்.

தற்பொழுது ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அதன் பேச்சாளர் நிஷாந்தவும் இதற்குப் பிழையான கருத்தை வெளியிட்டு, நிஸாம் காரியப்பர் ஒரு விதமாகவும் அதற்கு முரண்பட்ட கருத்தை அமைச்சர் ரவூப் ஹக்கீம் சொல்வதாகவும் கூறி பொய்ப் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர். இது முற்றுமுழுதாக எமது கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கான சதி முயற்சியாகும்.– என்றுள்ளது. (ற)

# ஐக்கிய தேசிய கட்சி புலிகளுக்கு ஆதரவு

## குற்றஞ்சாட்டுகின்றார் பிரதி சபாநாயகர் சந்திம



கொழும்பு, ஜூன் 1

பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெளியிட்ட கருத்து தொடர்ந்தும் புலிகளின் விருப்பு வெறுப்புகளுக்காக குரல் கொடுப்பது போன்று உள்ளது என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விஜயகலாவுக்கு மாத்திரமின்றி ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையும் அது போன்று காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இருந்த போது வடக்கில் இளைஞர்களுக்கு முழுமையான சுதந்திரம் காணப்பட்டது என்று விஜயகலா குறித்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதி சபாநாயகர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஊழல் மோசடிகள் இடம்பெறவில்லை எனவும், இந்த நாட்டு பாதுகாப்புப் பிரிவை விட, விடுதலைப் புலிகளின் ஆட்சியின் போது மிகவும் சுதந்திரமான சூழல் காணப்பட்டதனை அவர் சுட்டிக்காட்ட முயற்சித்ததாக பிரதி சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு சார்பான அரசியல்வாதி ஒருவருக்கு நாட்டில் பிரதி அமைச்சர் பதவி வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் பிரதி சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# இந்த அரசைக் கொண்டுவர சிறுபான்மையினர் காரணம்

## அமீர் அலி தெரிவிப்பு

அம்பாறை, ஜூன் 1

இந்த அரசைக் கொண்டுவருவதில் சிறுபான்மையினரின் பங்கு மிகவும் காத்திரமானது. அந்த வகையில், நாம் பங்காளிகளாக இருந்து எமது மக்களுக்கான பணிகளையும் தேவைகளையும் செய்வோம். – இவ்வாறு சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.

வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு, அம்பாறையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.அதில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:–

அமைச்சர் சஜித் பிரேமதாஸ அவரது தந்தையின் வழியில் எமது நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் வழிகாட்டுதலுடனும் மிகவும் சிறப்பாக பணியாற்றி வருகின்றார்.– என்றார். (ற)

# இனவெறுப்புப் பரப்புரையில் சிங்கள பேரினவாதம் வெற்றி

## பஷீர் சேகுதாவூத் எம்.பி. கூறுகின்றார்

அம்பாறை, ஜூன் 1

சிறுபான்மையினர் மீதான இனவெறுப்புப் பரப்புரையில் சிங்களப் பேரினவாதம் வெற்றியடைந்துள்ளது என்று தான் கருதுவதாக முன்னாள் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

'வடபுலத்து முஸ்லிம்களின் தடையற்ற மீள் குடியேற்றத்துக்கான ஆதரவுக்குரல் வில்பத்து விவகாரம் ஆயிரம் அம்புகள்' எனும் தொனிப்பொருளில் அமைந்த பகிரங்க விளக்கமளிப்புக் கூட்டம் ஏறாவூர் வாவிக்கரையோரப் பூங்காவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. ஏறாவூர் அஷ்ரப் நற்பணி மன்றம் ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டம், அதன் தலைவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர்க் கிளை கொள்கை பரப்புச் செயலாளருமான யூ.எல். முஹைதீன் பாபா தலைமையில் நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

றொஹிங்கியா முஸ்லிம்கள் மீதான இனவெறுப்புப் பிரசாரத்தில் கடந்த 50 ஆண்டு காலமாக அந்நாட்டு சாதாரண பௌத்த மக்கள் மனதைச் சலவை செய்யப்பட்டு, இன்று அது வெற்றியடைந்திருக்கின்றது. அது போன்றுதான் இலங்கையில் ஹலால் விவகாரத்தைக் கொண்டு தொடங்கிய முஸ்லிம் இனவெறுப்புப் பரப்புரை, பேரினவாத சிங்கள பௌத்தர்களால் வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இலங்கையில் சிறுபான்மையினர் மிக அவதானமாக இருக்க வேண்டும். எப்பொழுதுமே உலகின் எப்பாகத்திலும் வளர்ந்து வருகின்ற பெருந்தேசிய வாதத்தில் அகப்படுவது சிறுபான்மையினர்தான். பெருந்தேசியவாதத்தின் எழுச்சியிலே, அதன் கொள்கை வெறியிலே, அதன் உச்சத்திலே சிறுபான்மையினர் அகப்படாமல் மிக அவதானமாக இருந்து விட வேண்டும். இத்தகைய ஒரு அனுபவப் பாடத்தை நமது முன்னோடிகளான அரசியல் அறிஞர்கள் நமக்குக் காட்டித் தந்திருக்கின்றார்கள்.

நமது முன்னோர்களான முஸ்லிம் அரசியல் தலைவர்களை சிங்கள மக்கள் நம்பினார்கள். அதற்குக் காரணம் அவர்களது அரசியல் சாணக்கியம்தான். சிங்களப் பெருந்தேசியவாதத்திற்குள் அகப்படாமல் அவர்கள் ஆழ்ந்த அறிவோடு சிறுபான்மையினரான முஸ்லிம்களைக் காத்தார்கள். இன்று முஸ்லிம்கள் அநியாயக்காரர்கள், முஸ்லிம்கள் கொள்ளையர்கள், முஸ்லிம்கள் வந்தேறுகுடிகள், ஆகையினால் அவர்கள் அரபு நாடுகளுக்குப் போக வேண்டும். தமிழர்கள் வந்தேறு குடிகள், அவர்கள் தமிழ் நாட்டுக்குச் செல்ல வேண்டும். இப்படியெல்லாம் இன வெறுப்பைக் காட்டி வருகின்றனர் பேரினவாதிகள்.

சிறுபான்மைச் சமூகங்கள் தங்களுக்கு முன்னாலுள்ள பேராபத்தை உணர்ந்து மிக நிதானமாகவும் விவேகத்தோடும் நடந்து கொள்ள வேண்டும். வடபகுதியிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்கள் அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்பும் வரை நாம் அனைவரும் ஏகோபித்த குரலில் போராடியே ஆகவேண்டும்'.– என்றார். (ற)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மெய்யுணர்வு மலர வேண்டும்

ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதிஅந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக் கின்றான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான். தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல் பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம். எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும். உங்களுக்குப் பிடித்ததை கடைபிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை
பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

தர்மிகன், *யாழ்ப்பாணம்.*

# வேள்வி ஒரு கிராமிய பொருளாதார முறைமை அதனை அனைவரும் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும்

## வாசகர் திருமுகம்



எமது பிரதேசத்தில் நீண்ட நெடுங் காலமாக வேள்வி எனும் சமய விழா ஆலயங்களில் இடம்பெற்று வரு கின்றது. தற்போது சில வருடங்களாக ஆலயங் களில் இடம்பெறும் வேள்விக்கு இந்து சமய அமைப்புக்கள் தொடர்ச்சியான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. அந்த வகையில் இவ்விடயம் நீதிமன்றத்துக்கும் எடுத் துச் செல்லப்பட்டு – வேள்வியில் சுகாதார நடைமுறை கள் மற்றும் உயிர்க் கொலை என்னும் விடயங்களில் நீதிமன்ற தீர்ப்புகளும் கிடைத்துள்ளன. தீர்ப்பின் அடிப் படையில் வேள்வியில் வெட்டப்படும் உடல்களின் சுகாதார நிலைமைகள் பரீட்சிக்கப் படவும், வெட்டும் இடத்தில் (கொல்களத்தின்) சுகாதாரம் பேணவும் அறிவு றுத்தப்பட்டதுடன், இவற்றைப் பிரதேச சபைகளின் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வழிப்படுத்த உத்தர விடப்பட்டு உரிய அனுமதியுடன் வேள்விகள் இடம் பெறுகின்றன.

எனினும் இந்து அமைப்புக்கள் வேள்விக்கு தமது எதிர்ப்பைக் கைவிடவில்லை. இங்கு அவர்களின் வாதம் இது ஒரு உயிர்க் கொலை, அதுவும் ஒரு சைவ ஆல யத்தில் இடம்பெறுவது முறையல்ல என்பதே. ஆனால் இவ் விடயத்தில் பின்வரும் வினாக்களை நான் தொடுக்கின்றேன்.

- வேள்வியின் ஆரம்பகாலம் தெரியாத அளவுக்கு நீண்ட நெடுங்காலமாக நிலவிவரும் இம் மரபு முறையை இப்போது தடுப்பதன் காரணம் என்ன?
- வேள்வி இடம்பெறுவது கிராமிய சிறு தெய்வ ஆல யங்களான வைரவர், வீரபத்திரர், காளி போன்ற ஆலயங்களிலே. இந்தத் தெய்வங்கள் "பலி எடுக்கும் வழமையுள்ளவை" எனும் நம்பிக்கை மக்களி டையே இன்னும் உள்ளது.
- கடல் உணவாக பயன்படும் மீன் வகைகள் தினம் ஒன் றுக்கு பல லட்சக் கணக்கில் கொல்லப்படும் போது ஒரு சில நூறு ஆடுகள், கோழிகள் கொல்லப்படுவதில் என்ன தவறு உள்ளது?
- கிராமிய மக்களிடையே "சிறு தெய்வங்கள் பலி எடுக்கும்" எனும் நம்பிக்கை நீண்ட காலமாக இருந்து வரும் நம்பிக்கையாகும். இது போல வேறும் பல பகுத்தறிவுக்கு பொருந்தாத நம்பிக்கைகள் இருக் கும் போது வேள்வி – பலி எடுத்தல், பலி கொடுத்தல் எனும் விடயத்தில் மட்டும் இந்து அமைப்புகள் தீவிரம் காட்டுவது ஏன்?
- ஆடு, கோழி வளர்ப்பு என்பன கிராமத்து விவசாயி களின் வருமானத்துக்குரிய உப தொழில் முயற்சி யாகும். அந்த வகையில் வளர்ந்த கடாக்களையும், சேவல்களையும் உயர்ந்த விலைக்கு விற்க கிடைக் கும் சந்தை வாய்ப்பாக இவ் வேள்வி காணப்படுகின் றது. இதனைத் தடுப்பதன் மூலம் கிராமத்து விவசாயி களின் உப தொழில் வருமானத்தை தடுக்கும் முயற் சியாக அமையாதா?
- இந்து சமயிகளுக்கு பசு, எருது என்பன வணக் கத்துக்குரிய பிராணிகள். இந்துக்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதில்லை. இந்த நிலையில் ஆடு, கோழி என்பன இந்துக்களின் புரத உணவாக இருப்பதில் தவறேதும் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

எனது மேற்படி வினாக்களுக்குரிய விடைகளைத் தொகுத்து நோக்கும் போது நீண்ட காலமாக சைவ சிறு தெய்வ ஆலயங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேள்வி எனும் சமய விழாவானது இன்றைய விஞ் ஞான முறைகளுக்கு ஏற்ப "சுகாதார முறைப்படி – சுகா தார கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் நிலை யில் இது ஒரு கிராமிய பொருளாதார முறைமை என்ற வகையிலும் எமது பாரம்பரிய வழிபாட்டு முறை என்ற வகையிலும் எல்லோரும் ஏற்று செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

விவசாய அன்பர், *உடுவில் வீதி, மானிப்பாய்.*

## கேலிச் சித்திரம்




# தமிழருக்கு வேறு நீதியா

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொடூரமான படு கொலையையடுத்து கொதிப்படைந்த மக்கள், யாழ்ப் பாணத்தில் நடத்திய ஆர்ப்பாட்டங்களுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பிருப்பதாக தென் பகுதியில் இன வாதத் தரப்பினர் கிளப்பி விட்ட போலிப் பிரசாரங்கள் இன்னமும் அடங்கி விடவில்லை.

இந்நிலையில், கஹவத்த கொடஹதென இரட்டைக் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூன்று நபர்களையும் கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலைசெய்ததன் எதி ரொலியாக கடந்த வியாழக்கிழமையன்று கஹவத்தை யில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். அன்று ஆரம்பித்த பதற்ற நிலை இன்னமும் அப்பகுதியில் தொடர்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கஹவத்தை போராட்டத்தை மக்களின் ஜனநா யகப் போராட்டமாக அடையாளப்படுத்தும் இரட்டை வேடத்தரப் பினர் தமிழர்களின் நியாயமான நீதிவேண்டிய போராட் டத்தை விடுதலைப்புலி களின் மீளெழுச்சியுடன் இணைத்து அதனை முடக்குவதிலேயே குறியாக இருக்கின்றமை தெளிவாகின்றது.

எங்கே இந்த நாடு பிரிந்துவிடுமோ என்ற அச்சத்தில், "இந்த நாட்டிலுள்ள அனைவரும் சமமானவர்கள். இங்கே அனை வரும் மகிழ்ச்சியாக வாழலாம்" எனக் கூறுகின்றவர்கள் நாட்டின் ஒருபகுதியான வடக்கில் இடம்பெற்ற அநீதிக்கு நீதிவேண்டி அப்பகுதி மக்கள் நடத்திய நியாயமான போராட் டங்களுக்குப் புலிச்சாயம் பூசி பிரிவினைவாதிகளாக அடையாளப்படுத்துவதனூடாக இனவாதத்தைக் கிளப்பி அடுத்த தேர்தலில் வாக்குகளை அள்ள ஒருதரப்பினர் முற் படும் அதேவேளை, மற்றைய தரப்பினரோ தமிழர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அதுபற்றி குரலெழுப் பாது அடக்கி வாசிக்கவேண்டும் என எண்ணுகின்றனர் என்ற நிலைப்பாட்டுக்கே வர வேண்டியுள்ளது.

வடக்கில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து சிறையடைக்கப்பட்ட 130 பேரும் தொடர்ந்தும் சிறைகளில் வாடும் நிலையில் கஹவத்தையில் இடம்பெற்ற ஆர்ப்பாட் டங்களை யடுத்து கைதுசெய்யப்பட்டவர்களைப் பிணை யில் விடுவித்துள்ளமையானது வடக்கிற்கு வேறு நீதி, தெற் கிற்கு வேறு நீதியா? என்ற கேள்வியையும் எழுப்பிநிற்கின் றது.

அநீதி வடக்கில் இழைக்கப்பட்டாலும் தெற்கில் இழைக் கப்பட்டாலும் மக்கள் நீதிக்காகப் போராடுவது இயல் பானது. இந்த நாட்டின் வரலாற்றில் குற்றம் இழைத்தவர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் பொலிஸார் கடந்த காலங்களில் காண்பித்த அசமந்தப் போக்குகளும் கால இழுத்தடிப்புகளும் விசாரணை நடத்தி தண்டனை வழங்கும் செயற்பாட்டில் நீதித்துறை காண்பித்த மந்த நிலையும் மக்களின் நம்பிக்கை இழப்பிற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல்மயப்படுத்தப்பட்ட பொலிஸ் மற்றும் நீதித் துறையை மீட்டெடுத்து மக்களின் நம்பிக்கையை வென் றெடுக்கக்கூடியதாக மாற்றவேண்டியது இன்றியமையாத தாகும்.

குற்றச்செயல்கள் நடக்காதவாறு உறுதிப்படுத்துவதும், குற்றச்செயல்கள் நடந்தால் குற்றவாளிகளைப் பிடித்து துரிதமாக நீதியின்முன் நிறுத்துவதுமாக வினைத்திற னுள்ள பொலிஸ் துறையை உருவாக்குவதும், அவர்களுக் குப் பக்கபலமாக வேகமாக விசாரணைகளை நடத்தி நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தை மாற்றியமைப்பதும் பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்சியமைக்கவுள்ள அரசின் முன்பாகவுள்ள பெரும் சவால்களாக அமைந்துள்ளன.

கஹவத்தையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை யடுத்து கைதுசெய்யப்பட்ட மக்களை விடுவித்தமை போன்று வடக் கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமாகும். இல்லை யென்றால் வடக்கிற்கு ஒரு நீதி, தெற்கிற்கு ஒரு நீதியா? என்ற மக்களின் கருத்து நிலைப்பாட்டுக்கு வலுவூட்டுவதாக மாறி விடும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் காணிக்கை

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சே. கவிதா
அவர்களின் அன்புக் கணவர்
அ. செந்தில்குமரானந்தா (ஆசிரியர்)



அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரா ர்த்திக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
யா/ மயிலணி சைவ ம.வி.
சுன்னாகம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை நடராசா



பிறப்பு 24.12.1929 | இறப்பு 30.05.2015

குருந்தாங்கொடையைப் பிறப் பிடமாகவும், தலமன் கலட்டியை வசிப் பிடமாகவும் கொண்ட இலட்சுமிப் பிள்ளை நடராசா கடந்த (30.05.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், ராணி (லண்டன்), வேவி (கனடா), சந்திரசேகரம் (லங்கா சிமெந்து Ltd) கருணாகரன் (லங்கா சிமெந்து Ltd), ஜெயலலிதா, ஜெயக்குமார் (ஜேர்மனி), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2015) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தலமன் கலட்டி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

### மகேஸ்வரி சின்னையா



செம்மணி வீதி, நல்லூரைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சின் னையா கடந்த 29.05.2015 கர்த் தருக்குள் நித்திரை யடைந்து விட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரவியம் பரமானந்தம், அரியமலர் ஆறுமுகம் ஆகியோரின் பாச மிகு சகோதரி யும், தில்லையர் பரமா னந்தம், ஆண்டி ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனியும், ப. மோகனதாஸ், ப. ரவீந்திரதாஸ், ப.தேவதாஸ், த.புஸ்ப லதா, றொ.சியாமளா, ச.விஜிதா, ப.ஜீவதாஸ் ஆகியோரின சிறிய தாயும், ஆ. சுதாகரன், ஆ. சுரேந்திரன், ஆ. சுகந்தன், எ. சுகந்தி, ம. நிரஞ்சனா ஆகியோ ரின் பெரிய தாயும் (ஆசையம்மா), மோ.ஜெசி, ர.ஷீலா, தே.மார்லின், த. தனேஸ் வரன், ம.றொகான், கா. சத்தியகுமார், ஜீ. றூபினி, சு.சசி, சு. சியாமளா, சு. பற்றீசியா, எ. றோய், பா. மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமி யும், றொஜர், கெவின், ஷரன், றோஷன், ஜெய்சன், சைதன்ஜன், சமிதன், பைரவி, டானியல், ஷலோமி, காருண்யன், ஷாலோம், ஜெய்டன், ஜொகானா, எமிலி, பியங்கா, எமா, நிஷோன், பெனிற்றோ, சாகித்யா, ஓவியா, ஷைரந் தன், சைருஜின், சஜித் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு 110, செம்மணி வீதியில் நாளை (02.06.2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று சென் ஜேம்ஸ் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 222 6681, (அரியமலர்)
071 522 2288 (சுகந்தன்)
071 861 2586 (புஸ்பலதா)
071 817 5805 (விஜிதா)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பற்றிக் அப்பு லோனியா (ராணி)



குருநகர் ஐஸ்பிளான் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட பற்றிக் அப்பு லோனி யா கடந்த (30.05.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.06.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 14, ஐஸ்பிளான் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 140 9383

## முதலாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



அமரர்
### சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன்
(ஜெகன்)
(பருத்தித்துறை பஸ் உரிமையாளர், சாதி-கட்டார்)

தோற்றம் 18.01.1981 | மறைவு 12.06.2014

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (01.06.2015) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி
(ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர் வடமராட்சி வலயம்)



எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் தற்போது சுவிஸ் கிளையின் நிறைவேற்றுக்குழுத் தலைவரும் ஆகிய குட்டித்தம்பி அவர்களின் அன்பு மனைவி திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்கள் 31.05.2015 நேற்று இறைபதம் அடைந்ததையிட்டு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன் னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரி விப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இமையாணன் அ.த.க
பாடசாலையின்
சுவிஸ் பழைய மாணவர் நலன்புரி
சங்கமும், நிறைவேற்றுக்கிளையும்.

## மரண அறிவித்தல்

### திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி
(ஓய்வு நிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி வடமராட்சிக் கல்வி வலயம்)



தோற்றம் 30.01.1956 | மறைவு 31.05.2015

0777734698

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி (31.05. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வு நிலை அதிபர் ம. குட்டித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி ஆ. டேவிட் போல் சந்தன வடிவு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி மயிலு சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், Y.M.C.A ஊழியரான அன்பழகன் போலின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சிவகாந்தி, யோகராசா, தேவராசா, திருமதி செ. இராசம்மா, நாகம்மா, ரஞ்சி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல. 50, கீரிப்பல்லி வீதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி யில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (01.06. 2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியள வில் வதிரி ஆலங்கட்டை கிறீஸ்தவ மயா னத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல் லப்படும். . இந்த அறி வித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை இராசாத்தி



பன்னாலையைப் பிறப்பிடமாக வும் கைதடியை வதிவிடமாகவும் தற் போது பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை இராசாத்தி நேற்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பண்டாரி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இளையபிள்ளை, சிதம்பரப்பிள்ளை (துரை), சொக்கலிங்கம் (விதானை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீபுவனேந் திரராசா (டென்மார்க்), ஸ்ரீதேவி (இத்தாலி), ஸ்ரீதாஸ், ஸ்ரீநவம், ஸ்ரீநிர்மலாதேவி, ஸ்ரீஸ்வரா (இத்தாலி), ஸ்ரீகவேஸ் வரா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும், சுலேகா, மயில்வாகனம், இந்திரகலா, ஜெயாநிதி, கிருஸ்ணகுமார், பத்மதீபா, சந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமியும், மாளவிகா, அவனேஸ், அஜந்தன், கௌசிகன், சங்கவி, சாருஜன், கிருத்திகா, சஜீபன், அஜந்தினி, பிரஷாந்தி, கிதுர்ஷன், யஸ்மிதன், அருண், அப்ஷரா, யஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2015) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணிக்கு பன்னாலை வதிவிடத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 0690918,
0768592764

தகவல்:
குடும்பத்தினர்.

## மு.காவின் தேவைக்காக 62 லட்சம் வாக்குகளை இழக்க முடியாது

*- ஹெல உறுமய தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 1

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேவைக்காக 62 இலட்சம் மக்களின் வாக்குகளை தாரைவார்க்க முடியாது எனத் தெரிவித்துள்ள அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, தேர்தல் முறை மாற்றத்தை எதிர்க்கும் முஸ்லிம் காங்கிரஸின் பின்னணியில் சதித்திட்டம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே கட்சியின் ஊடகப்பேச்சாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த சிறி வர்ணசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேர்தல் முறைமை மாற்றப்படுமென மக்களுக்கு உறுதியளித்திருந்தார். அதற்கமைய அனைத்து கட்சிகளும் கலந்து பேசி பல்வேறுபட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டு சிறுபான்மை இனத்தினருக்கோ சிறு கட்சிகளுக்கோ பாதிப்பு ஏற்படாத விதத்தில் புதிய தேர்தல் முறைமை மாற்றம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகம் நிசாம் காரியப்பர் கலந்து கொண்டு யோசனைகளை முன்வைப்பது மட்டுமன்றி இணக்கப்பாட்டையும் தெரிவித்திருக்கின்றார். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர்க்கின்றார்.

இது என்ன நியாயம்? மனோ கணேசன், திகாம்பரம், தமிழ் தேசியக்கூட்டமைப்பு உட்பட சிறுபான்மை கட்சிகள் அனைத்தும் தேர்தல் முறைமை மாற்றத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

புதிய தேர்தல் முறைமை மாற்றத்தில் சிறுபான்மை இன மக்களுக்கோ சிறு கட்சிகளுக்கோ எவ்விதமான பாதிப்பும் இல்லை. எனவேதான் அக்கட்சிகள் அனைத்தும் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஆனால் ஹக்கீம் மட்டும் எதிர்க்கின்றார். அமைச்சரவை கூட்டத்திலும் எதிர்ப்பு வெளியிடுகின்றார். தனியொருவரின் எதிர்ப்பில் இன்று நாட்டுக்கு தேவையான முக்கியமான விடயம் தள்ளிப்போடப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமை மாற்றத்தை எதிர்க்கும் ஹக்கீம் அதற்கான காரணங்கள் என்னவென்பதை வெளிப்படுத்தாமல் உள்ளார். எனவே இதற்கு பின்னணியில் யாரோ உள்ளனர். சதி இடம்பெறுகின்றது என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது. இன்று சிலர் நம்பிக்கையில்லா பிரேரணைகளை கொண்டு வருவதில் அதிக அக்கறை செலுத்துகின்றனர். சிலர் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமென்கின்றனர். இக்கூட்டத்தினரும் தேர்தல் முறைமை மாற்றத்தை எதிர்ப்பவர்கள். – என்றார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆவது திருத்தம் பற்றிய நிலையை வெளிப்படுத்துக

*ரணிலிடம் கோருகின்றார் நிமல் சிறிபால*

கொழும்பு, ஜூன் 1
20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் குறித்த பிரதமர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்பதை மக்கள் அறிந்து கொள்வதற்காக அதனை பகிரங்கமாக அறிவிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா சவால் விடுத்துள்ளார்.
பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கே எதிர்க்கட்சித் தலைவர் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.
அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ற)

# வைக்கோல் மரத்தையாவது பிடித்துக் கரையேற முயற்சி

*நிராகரிக்கப்பட்ட அரசியல் தலைவர்களை சாடுகின்றார் ஊவா மாகாண முதலமைச்சர்*

மக்களால் நிராகரிக்கப்பட்ட வங்குரோத்து அரசியல் தலைவர்கள் மூழ்க போகும் நேரத்தில் வைக்கோல் மரத்தை பிடித்தாவது கரையேற துடிப்பதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இவர்கள், தான் வெளியிட்ட அறிக்கை ஒன்றைப் பயன்படுத்தி ஊடகங்கள் மூலமாக அரசியல் லாபத்தை பெற பயனற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.
ஊவா மாகாண காணி ஆணையாளருக்கு தான் அனுப்பிய கடிதம் ஒன்றை பயன்படுத்தி, அரசியல் ரீதியாக மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள வங்குரோத்து அரசியல்வாதிகள் அரசியல் லாபம் பெறும் நோக்கில் அந்த கடிதத்தை ஊடகங்களுக்கு வெளியிட்டு தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் தோல்வியான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் ஊவா முதலமைச்சர் கூறியுள்ளார். (ற)

# பாதிப்படைந்த சீன உறவை ஒட்டுகிறது மைத்திரி அரசு

இந்திய நாளிதழ் கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 1
மைத்திரிபால சிறிசேனவின் அரசு பாதிப்படைந்திருந்த சீனாவின் உறவை வேகமாக ஒட்டிவருவதாக இந்திய நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.
இடைக்காலத் தடைவிதிக்கப்பட்டிருந்த கொழும்பு துறைமுகநகர் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை மற்றும் சீனாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை இலங்கை மீண்டும் ஆரம்பித்துள்ளமை என்பவை இதனை காட்டுவதாக நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.
சிங்கப்பூரில் நடைபெற்ற 14ஆவது ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன மற்றும் இலங்கையின் முப்படை தளபதிகள், சீனாவின் மக்கள் இராணுவத்தின் உதவி தலைமையதிகாரியை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.
இதன்போது 2014ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் அரசு முன்னெடுத்த பாதுகாப்பு ஒத்துழைப்பை தொடர்வதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.
இதன் கீழ் இலங்கைக்கு பாதுகாப்பு விடயங்களில் உதவ சீன இராணுவ அதிகாரி உடன்பட்டுள்ளார் என்று இந்திய நாளிதழ் கூறியுள்ளது. (ற)


உதயன்
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30.01.1956 மறைவு 31.05.2015

திருமதி
**இரஞ்சிதம் குட்டித்தம்பி**

(முன்னாள் அதிபர், யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி வலயம்)

எமது கல்லூரியில் நீண்ட காலம் அதிபராகப் பணியாற்றி பல சாதனைகள் புரிந்த எமது அதிபர் விண்ணுலகம் சென்றிட்ட செய்தி கேட்டு நாம் கண்ணீர் சிந்துகின்றோம். அவருக்கு எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## 31ஆம் நாள் நினைவு நாளும் நன்றி நவில்லும்

தோற்றம் 08 . 04 . 1946



மறைவு 02 . 05 . 2015

**வேலுப்பிள்ளை நாகராஜா**

அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் நாம் செழிப்புடனே வாழ்வதற்கு
ஈடிலா வழிகாட்டிய தெய்வமே
உமை இந்நாளில் அஞ்சலித்தோம்
நீங்கா நினைவுடன்

54, நாவலடி லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## தவறிவிட்டது

சுப்பிரமணியம் சிறிகாந்தன் ஆகிய எனது தே.அ. அட்டை (753234438V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கல்வியங்காட்டிற்கும் நாயன்மார்கட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:- 077 628 1654, 077 923 2934

## தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு உதவி கோரல்
## ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பழை

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மற்றும் அதனுடன் அண்டிய மாகாணங்களைச் சேர்ந்த ஏறத்தாள 2.5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு உரித்தான அதிசிறப்புப் புற்றுநோய் மற்றும் உளநல சிகிச்சைப் பிரிவுகளைக் கொண்டு உன்னத சேவையாற்றி வருகின்றது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை. சுகாதாரத் திணைக்களம் மூலமாகப் பெருமளவு உதவிகள் வழங்கப்படுகின்ற போதும் வைத்தியசாலையின் நாளாந்த இமாலய தேவைகள் மற்றும் அத்தியாவசிய எதிர்கால அபிவிருத்திகளின் பொருட்டு தனியாரின் பங்களிப்பு பெருமளவில் எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ் பேசும் மக்களின் உயிர் காக்கும் அத்தியாவசிய தேவையை ஆற்றிவரும் கேந்திர முக்கியத்துவம் மிக்க இந்த வைத்திய சாலைக்கு கருணை உள்ளம் படைத்த தனிநபர்களினதும் தொண்டு நிறுவனங்களினதும் பெருவாரியான பங்களிப்பு அவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆர்வமுடையோர் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தை தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள் தொடர்புகளுக்கு: - 0779562742, 077 900 5856,
நலன்புரிச் சங்க வங்கிக் கணக்கிலக்கம் 117020163441
ஹற்றன் நஷனல் வங்கி (HNB) சுன்னாகம்.
Email:- pwsphtellippalai@gmail.com

## காணி அன்பளிப்பாகத் தேவை

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்கு காணி பெருமளவு தேவையாக உள்ளது. வைத்தியசாலை சுற்றாடலில் காணி வைத்திருப்போர் அன்பளிப்பாக காணி வழங்கவிரும்பின் வைத்தியாசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படகின்றீர்கள் அன்புள்ளங்களின் அன்பளிப்புகள் உரிய முறையில் பயனுறுதி வாய்ந்தனவாகப் பயன்படுத்தப்படும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நோயாளர் சேவையில் என்றும்
லயன் சி. ஹரிகரன்
செயலாளர்.நோயாளர் நலன்புரிச் சங்கம்,
077 900 5856

## TCT Multi Trade Centre
## TCT பல்பொருள் விற்பனை நிலையம்

## பதவிவெற்றிடம்

★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் Security Guards (ஆண்கள்)
சிங்களம் அல்லது ஆங்கில மொழி பேசக்கூடியவர் - களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காசாளர் CASHIER (பெண்கள்)
கல்வித்தகைமை - க.பொ.த உயர்தரம் சித்தி.
யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் மாத்திரம்

★ விற்பனை மேற்பார்வையாளர்கள் SALES SUPERVISOR - (ஆண்கள்)
கல்வித்தகைமை - க.பொ.த சாதாரண தரம் சித்தி
தங்கி இருந்து வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ விற்பனை மேற்பார்வையாளர்கள் SALES SUPERVISOR (பெண்கள்)
கல்வித்தகைமை - க.பொ.த சாதாரண தரம் சித்தி
யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் மாத்திரம்

★ தரவு உள்ளீட்டாளர்கள் DATA ENTRY OPERATORS - (பெண்கள்)
கல்வித்தகைமை - க.பொ.த உயர்தரம் சித்தி (வர்த்தகத்துறை)


முகவரி, தொலைபேசி இலக்கம், அனுபவம் ஆகியன உள்ளட்ங்கலாக சுயவிவரக் கோவையை (Bio Data) 05.06.2015 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

TCT Multi Trade Centre
நாவலர் வீதி, நல்லூர்.
021 222 8025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் – பறாளாய் அருள்மிகு ஸ்ரீ ச

# தேர்த்திருவிழா சிறப்



### ஏழி

அருள் மழை பொழியும் ஆறு திருமுகங்
தாமரைகளும், மணமுடைய குவளை மலர்ம
திருத்தோள்களும், பெரும் வரங்களை அடிய
அழகிய பன்னிரு திருக்கரங்களும் மயக்கத்தா
தலால் சிவந்தமலர் போன்ற திருவடிகளும் உ
மகனே! குகனே! கனியே! கண்ணின் மணியே
ஜோதியாய் சுடர் விடும் ஒளியே! மயில் வா
வனே! துதிச் சொற்களுக்கு இனிமை பயப்ப
பதியின் தலைவனே! பக்தியினால் கண்களிலி
கின்ற அடியார்களுக்கு அமுதே! முன்னைத் தீவி
பொடிபடும்படியாக நடம் பயில்கின்ற மயிலை
வாசனை வீசுகின்ற தாமரையுள்ள சரவணப்
வெற்பும், செங்கழுநீர் உதிக்கின்ற திருத்தணி
மும், திருவேரகமும், சோலைமலையும், திருப
திருவேங்கடமலையும் குற்றால மலையும், இ
குன்றுகள்தோறும் விளையாடி திருச்செந்தில்
முருகா! கருணைக்கடலே! அந்தமில் அரசே!
அன்பின் வடிவே! அருட்பெருஞ் சோதி! அ
பேரானந்தப் பெருங்கடலே! பிறப்பறுக்கும்
வள்ளலே! தேனமுதாகிய தித்[illegible]த் தீந்தமிழ்
கோபுரத்தினின்றும் வீழ்ந்த அரு[illegible]கிரியாரை
திலகமே! சிவனார் தம்திருவே வேதம் நான்கி
தீர்க்கும் வேலவா குன்று தோறாடும் குமரா!
கருணாகரா! கார்த்திகேயா! கண்க[illegible]ன் மணி
சிறை மீட்ட அண்ணலே! எண்ணுதற்கரிய வண்
இன்பத்தின் எல்லையே! ஏழிசைப் பயனே
மலையே! சிவகுருபரா, சிலம்பா! தேசிகா! பால

## ஆனந்தம் தந்திட தேர் ஏறிவருகின்றான்

சகல செல்வங்களும் நிறைந்த சுழிபுரப் பதியில் வந்த வினையும் வருகின்ற வல்வினையும் போக்கவல்ல பறாளாயம்பதி முருகன் இன்று தேர் ஏறி வருகின்ற கண்கொள்ளாக் காட்சி ஆனந்தத்தைத் தருகின்றது.

இந்த ஆலயத்தில் எமது தொண்டர் சபையினர் சகல தொண்டுகளையும் செய்து வருகின்றனர். குறிப்பாக மஹோற்சவ காலங்களில் அன்னதானம் சகல அடியார்களுக்கும் சிறப்பாக வழங்கப்படுகின்றது. தாக சாந்தியும் சிறப்பாக நடைபெறுகின்றது.

எமது தொண்டுக்கு சகல வழிகளாலும் அடியார்கள் உதவி செய்து வருகின்றார்கள். சகல அடியார்களும் பறாளாய் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வேண்டுகின்றோம்.

தொண்டர் சபையினர்,
பறாளாய், சுழிபுரம்.

## மஹோற்சவ குருவின் ஆசியுரை



கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகப் போற்றப்படும் கந்தப்பெருமான் கற்றறிந்தவர் செய்யும் விதிமுறை பூஜைகளையும் பாமர மக்களின் அன்புநெறி பூஜைகளையும் விருப்புடன் ஏற்று அருள்புரிகிறார்.


சைவச் சான்றோர்கள் வாழும் சுழிபுரம் கிராமத்திலே நன்செய் களனிகளும் நன்னீர்த் தடாகங்களும் வான்பயிர்களும் சூழ இயற்கை எழில் கொஞ்சும் பறாளை எனும் பதியிலே தன் அண்ணனாகிய விநாயகப்பெருமான் அருகிருக்க "உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன் பின்னை ஒருவரை யான் பின்செல்லேன்" என்று நம்பி வரும் அடியார்கள் வேண்டியவற்றை வேண்டியவாறு வழங்கும் கந்தப்பெருமான் கோயில்கொண்டு அருள்பாலிக்கின்றார். வைகாசி மாத பூரணையை நிறைவாகக் கொண்டு பன்னிருதினங்கள் இங்கு மஹோற்சவம் வெகு விமர்சையாக நிகழ்கின்றது. சிறப்புமிக்க வைகாசி விசாகமாகிய இன்று திருத்தேர்ப் பவனி நடைபெறுகின்றது. ஆன்மாக்கள் எத்தனை தீவினைகள் பாவங்கள் புரிந்தனரோ அவற்றை நீக்கி அனுக்கிரகம் செய்வதற்காக ஆறுமுகவள்ளல் திருத்தேரில் பவனி வருகின்றார்.

சாம்பவி தீட்சை ஊடாக அடியார்கள் அனைவருக்கும் சுபீட்சம் கிடைக்க வேண்டும் இகபர நலன்கள் பெற்று வாழவேண்டும் என்று கலியுக வரதனாகிய கந்தப்பெருமானை வணங்கி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

"குகனுண்டு குறையில்லை"

ஸ்ரீவத்ஸ வ. இராஜேஸ்வரக் குருக்கள்
மஹோற்ஸவ குரு

## சண்முகனின் திருவருள் கி



மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக் க
சிவசுப்பிரமணிய சுவாமிகோயிலில் வருடாந்த
களாக நடைபெற்று இன்று இரதோற்சவம்
வேதம் ஓத நாதஸ்வர தவில் இசையுடன் தே
அடியார்கள் புடை சூழ சண்முகப்பெருமான்
இருகண்கள் போதாது வேண்டுவார்க்கு
அடியார்கள் துயர்போக்கி ஆட்கொள்ப வன் மு
அவனது அருளைவேண்டி ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டுவ
கண்டு களிப்பார்கள் சண்முகப்பெருமான் தன்னைத்தரிசிக்க வரு
வழங்கி அவர்களது துயர் போக்கி நல்வாழ்வு தருவான் இன்று மு
அடியார்களுக்கு சண்முகப்பெருமானது திருவருள் [illegible] முருகனை

சர்வே ஜனா[illegible]கினோபவந்து
சமஸ்தா சன் மங்களானிபவந்து
முருகனின் கருணை மகத்தானது


சேவற்கொடியோனே முருகா சரணம்!
சேவடி காப்பவனே முருகா சரணம்!!

**தேர்த் திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போரும் அனுசரணையாளர்களும்**

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!
வெற்றி வேல் முருகா அரோஹரா

**ஸ்ரீ அம்பாள் குறோசறிஸ்**

எங்களிடம் சகல பொருள்களும்
தரமாகவும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
பண்டத்தரிப்பு

உங்களை அழகுபடுத்தும்
நகைகளுக்கு நாடவேண்டிய இடம்

**S.K.T மகாலட்சுமி ஜூவலர்ஸ்**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**

163, 165 பிரதான வீதி,
சங்கானை.

கிளை :
**தரன் றேடர்ஸ்**
130, 132 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2664

நாளை (02.06.2015) செவ்வா
காலை 9.30 மணிக்
திருவடிநிலையில் தீர்த்
05.06.2015 வெள்ளிக்
காலை 9.00 மணி
சங்காபிஷேகம்

**நகுலேஸ்**
ஹாட்வெயர் ஸ்ரே
சித்தன்கேணி வீதி, பண்ட

புத்தம் புதிய புடவை வகைகளுக்கும்
அழகு சாதனப் பொருள்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்
**முத்துமாரி**
புடைவை பான்சி பலஸ்
பண்டத்தரிப்பு.

சகல வகையான புடைவை
வகைகளையும் பெற்றுக்கொள்ள
**விநாயகர்**
பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.

பலசரக்குப்பொருள்களை
நியாய விலையில் பெற்றிட...
**கந்தசாமி அன்சன்ஸ்**
பல்பொருள் வணிக நிலையம்
பிரதான வீதி, சங்கானை.

நவநாகரிக பட்டுப்புடைவைகளை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**புதிய அபிராமி**
புடைவை மாளிகை
பிரதான வீதி, சங்கானை.

**கந்தசாமி அன்சன்ஸ்**
(காந்திகடை)
பிரதானவீதி, சுழிபுரம்.

**ஈஸ்வரா**
நெற் கபே
ஈஸ்வரா பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, சுழிபுரம்.

**பாபு களஞ்சியம்**
சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான்
கோயில் வீதி, சுழிபுரம்.

**கலை**
111 - B, கஸ்
யாழ்ப்ப


(39630)(10.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்

# ...ப்பிதழ் - 01.06.2015

## திங்கட்கிழமை



### ...எழில் மிகு பறாளாய் முருகனை காண வாரீர்

...திருமுகங்களும், மலர்ந்த பன்னிரு விழித் ...ா மலர்மாலை பொலிவுற்ற மலை யொத்த ...ள அடியார்க்கு அருளவேண்டி நீண்டுள்ள ...யக்கத்தால் வரும் இரு வினையையும் மிதித் ...களும் உடைய கங்கையின் ஒப்பற்ற திரு ... மணியே!கருணையே குடி கொண்டவனே! ...யில் வாகனனே! கடப்ப மாலை அணிந்த ...ம பயப்பவனே! தமிழின் அழகே! பழனிப் ...ணகளிலிருந்து நீர்பெருக உன்னைத் தொழு ...னைத் தீவினைகளும் ஏனைய தீவினைகளும் ...) மயிலை வாகனமாகக் கொண்ட கடவுளே! ...சரவணப் பொய்கையும்! சந்தபுரியும் கந்த ...ிருத்தணியும், காஞ்சி புரத்துக் குமரகோட்ட ...ம், திருபரங்குன்றும், திரு ஆவினன்குடியும், ...லயும், இலஞ்சியும், கதிர்காமமும் ஏனைய ...செந்தில் நகரில் அரசு புரியும் பெருமானே! ... அரசே! அன்பர் மனத்துறையும் ஆண்டவா! ...சோதி! ஆருயிர்த் துணையே! ஆராவமுதே ...றுக்கும் பெருமானே! வானவர் போற்றும் ... தீந்தமிழ்! [illegible]ாதி தேவா! திருவருணைக் ...ரியாரை ஆட்[illegible]கொண்ட ஐயனே! செந்தமிழ்த் ...ம் நான்கிலும் மெய்பொருளானவா! வினை ...ு குமரா! கந்தா! கடம்பா! கதிர்வடிவேலா! ...ன் மணியே! கலியுகவரதா! விண்ணவரைச் ...கரிய வண்ணக் கொழுந்தே! ...ப் பயனே அன்பெனும் பிடியுள் அகப்படும் ...சிகா! பாலசுப்பிரமணியா! கோல மயில் வீரா! சூர்பகைவா! சரவணபவா! குன்றெறிந்தோனே. குகா! சண்முகா! முன்னான்கு தோளா! முக்கண்ணிமைந்தா!

அரிமருகா! திருமுகா! வேல்முருகா வள்ளி மணவாளா! பாபசங்காரா! மன்னுயிர் அனைத்தும் போற்றும் மாதவா! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பவா! மும்மல மறுக்கும் மூர்த்தியே!

எண்ணரிய பிறவிகளில் அரிதாகிய மானிடப் பிறவியை எனக்களித்தாய்! அதிலும் கூன்குருடு செவிடு நீங்கிப் பாங்குறப் பிறக்க அருள் செய்தாய் பிறந்தேன். வளர்ந்தேன் கல்வி பயின்றேன் கற்றதனால் ஆய பயன் நின்திரு வடிகளைப் பற்றுவதன்றி வேறென்றுளதோ? வீணே உண்ணுவதற்கும் உறங்குவதற்கும எதையாவது உளறித் திரிவதற்குமா இப் பிறவியை எனக் களித்தாய்.

ஈசா! நின் பொன்னார் திருமேனியைக் கண்ணாரக்கண்டு களிக்கவும், என் கரங்களால் நாளும் நன் மலரெடுத்து நின்மின்னார் பொன்மேனியில் சாத்தி வணங்கவும் அல்லும் பகலும் அகமுருகி நின் பெருமை மிகு திருநாமங்களை என் வாயால் இசைக்கவும் நின்கோயில் வலம் வந்து "முருகா முருகா" என்று உருகா நற் சிந்தையுடன் ஆனந்தக் கூத்தாடி வணங்கி நற்கதி பெற்று உய்ய பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும் - கச்சைத் திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகரணம் சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும் எந்தத்திசையும் எதிர்தோன்ற எழுந் தருளி நேரும் இடர்களை யெல்லாம் தூளாக்கி எவ்வரம்கேட்பினும் அவ்வரத்தை தந்து மகிழ்ச்சியோடு என் உள்ளத்தில் புகுந்திருந்து எனது பற்றுக்களை நீக்கி மும்மலத் தொடர்புகளையும் அகற்றி, அடியேனை நின் திருவடித் தொண்டனாக ஆட்கொண்டு அடியேனுக்கு முன்னின்று திரு அருள் புரிவாயாக!

உன் ஆனந்த நடனத்தை காண பறாளையம்பதி வாருங்கள் அவன் திருத்தேர் வடம் பிடித்து வினைதீர்க்கவாரீர்.

முருகன் அடியான் Dr. க. சிவராஜா (வாகை)

### ...ள் கிடைக்கட்டும்

...ு சிறப்புக் களையுடைய சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ ...ல் வருடாந்த உற்சவம் சென்ற பத்துத் தினங் ...தோற்சவம் நடைபெறுகின்றது. அந்தணர்கள் ...சையுடன் தேவார திருவாசக கோஷங்களோடு ...கப்பெருமான் தேரில்வரும் காட்சியைக்காண ...ண்டுவார்க்கு வேண்டுவதை எல்லாம் தந்து ...ாள்ப வன் முருகன்.

...ர் திரண்டுவந்து முருகனது திருக்கோலத்தைக் ...ரிசிக்க வரும் அடியார்களுக்கு அருளைவாரி ... இன்று முருகனது இறதோற்சவம் காணவரும் ...க்க முருகனைப் பி[illegible]ர்த்திக்கின்றேன்.

...னோபவந்து
...ானிபவந்து
...மகத்தானது.

மு.பாலகுருசாமி சர்மா
ஆலயபரம்பரை பூசகர்.

### சிவபரம்பொருளின் அருளுருவாம் முருகனின் அருட்தலமே பறாளாயம்பதி

பரம்பொருளின் கருணையைப் பெறும் பெருநெறியே சைவம். சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது என்பது சைவத்தின் மேன்மையைப் பறைசாற்றுவது. அன்பின் முழுமைதான் முழுமுதற்பொருளான சிவம். சிவத்தின் கருணை வடிவில் ஒன்றே ஆறுமுகன். ஆறுமுகன் விருப்புடன் அமர்ந்து அருள் பொழியும் இடங்களில் சுழிபுரம் பறாளாயம்பதியும் ஒன்று. ஆறுபடை வீடுடைய முருக பிரான் விரும்பி உறையும் பதியாக பறாளாய் திருத்தலம் உள்ளது. முருகன் அடியார்கள் நிறைந்த தலம் பறாளாய்த் தலம். முருகன் அடியார்கள் நேர்த்திக் கடனாகக் காவடி எடுத்தும், கர்ப்பூரச் சட்டி எடுத்தும். ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தும் வழிபாடாற்றி முருகனுடைய அருளுக்குப் பாத்திரமாகிச் சிறப்புடன் வாழுகின்றனர். மூர்த்தி, தல சிறப்புடைய பறாளாயானுக்கு ரதோற்சவம் கண்கொள்ளாக் காட்சி. ஊர்மக்கள் மாத்திரமல்லாமல் அயலூரவரும், முருகபக்தர்களும் ரதோற்சவத்தில் பங்குகொண்டு முருகனருளில் திளைத்து இன்பம் பெறுகின்றனர்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மூதாட்டி ஔவையாரின் முதுமொழி. ஆலய வழிபாடு சிவபுண்ணியச் செயல். இறையருள் இல்லையேல் வாழ்க்கை சூனியமாகிவிடும். இறையருளைப் பெறும் அருள் நிதியங்கள் ஆலயங்கள். ஆலயத்தில் இடம்பெறும் நித்திய நைமித்திய வழிபாடுகள் அருளைப் பெறும் சாதனங்கள். அதிலும் ரதோற்சவம் மிகவும் உயர்ந்தது. அனைத்துயிர்களும் அருள்பெறும் சாம்பவி தீட்சையாகும். எங்கள் முன்னோர்கள் வழிபட்டு அருட்செல்வம் பெற்ற பறாளாய் சிவசுப்பிரமணியர் ஆலயப் பெருவிழாவாம் ரதோற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்கள் அனைவரும் மேன்மை பெறுவர்.

நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

...செவ்வாய்க்கிழமை
...0 மணிக்கு
...ில் தீர்த்தம்,
...வள்ளிக்கிழமை
...00 மணிக்கு
...ஷேகம்

### இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடைய நாற்புறமும் வயல்களினால் சூழப்பட்ட சுழிபுரம் பறாளாய் எனும் பதியில் வள்ளி தேவ சேனாபதியாக விளங்குகின்ற முருகப் பெருமானுக்கு வைகாசி மாதத்தில் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்நாளில் அவனுடைய பெருமையை நினைப்பதில் அகம் மகிழ்கின்றேன். இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த் தோற்சவம் நடைபெறுகின்ற இவ் வால்யத்தில் 11 ஆம் நாள் தேர்த் திருவிழாவும் நாளை திருவடி நிலையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்

இத்தினத்தில் அவனுடைய அடியார் களுக்கு எம்பெருமானுடைய திருவருள் கிடைக்க வேண்டும் என்று அவனை வேண்டி நிற்கின்றோம்.

அப்புத்துரை மனுநீதி.
நிர்வாக உறுப்பினர், தர்மகர்த்தா சபை.
'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது மூதாட்டி

### துன்பங்கள் போக்கிட காத்தருள் முருகா

பறாளாயம்பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கந்தவேற் பெருமான் இன்று அழகிய சித்திரத் தேரில் வீதி யுலா வருகின்றார். இந்த அருமையான நன்நாளில் அடியார்கள் அனைவரும் சகல செல்வங்களைப் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல் லாம்வல்ல எம்பெருமான் சண் முகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வேலாயுத இரத்தினசபாபதி
தலைவர், தர்மகர்த்தா சபை.

### குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராவோம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தன்னகத்தே பெற்றுக் கொண்டது சுழிபுரம் என்னும் தொல்பதியாகும். இஃது யாழ்ப்பாணத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ளது. இப்பதியின் கண்ணேயுள்ள பறாளாய் ஈசுவர விநாயகர் ஆலயமும் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயமும் மிகப் பிரசித்தி பெற்றவை. நாற்பாலும் மருதநிலம் சூழ வீற்றிருக்கும் இத்திருத்தலத்திலுள்ள ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிக்கு இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

வேண்டுவார் வேண்டும் வரம் யாவும் இத்திருத்தலத்துக்குச் சென்றால் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் பக்தர்கள் அரோகரா ஒலியெழுப்பி மெய்மறந்து வழிபடுகின்றனர். எங்கள் இருகண்களாகவும், கருமணிகளாகவும், மணியொலியாகவும் விளங்குகின்ற ஆறுமுகப் பெருமான் தமது ஆறு முகங்களாலும், பன்னிரண்டு கண்களாலும், பன்னிரு திருக்கரங்களாலும் மெய்யடியார்களுக்கு அருளமுதத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றார். வடந்தொட்டுத் தேர் இழுக்கும் அடியார் பெருமக்கள் அருணகிரிநாதருடன் சேர்ந்து பறாளாய் முருகனைக் கண்டு தொழ அந்த நான்முகன் நாலாயிரங்கண் படைத்திலனே என இறும்பூதெய்தி ஏக்கமுறுகின்றனர். குமரவேள் திரு முன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதியடைவோம் என்ற நம்பிக்கை யுடன் அவனருளாலே அவன் தாள் அடைவோம்.

பண்டிதை திருமதி பொன்.பாக்கியம், சுழிபுரம்.

...லஸ்
...ஸ்ரோர்ஸ்
... பண்டத்தரிப்பு.

VRV
ரேட் சென்ரர்
பிரதான வீதி, சுழிபுரம்.

இ.ராசநாயகம்
பறாளாய் வீதி,
சுழிபுரம்.

சகல வணிகப் பொருள்களையும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
கணேஸ்
ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

ஆசைப்பிள்ளை
அன் சன்ஸ் நகைமாடம்
கே.ரி பிளாசா,
பிரதான வீதி சங்கானை.

...லவாணி
நகைமாளிகை
...3, கஸ்தூரியார் வீதி,
...ாழ்ப்பாணம்.

E.S. Perampalam & Co
Importer,Distriburors of Bicycle & Bicycle Spare Parts
50, Kasthuriyar Road, Jaffna.
T.P. 021 222 2988
Email: espco50 @ gmail. com


க.தம்பு
அன் சன்ஸ்
பிரதான வீதி, சுழிபுரம்.


சிவா களஞ்சியம்
(கேதீஸ் களஞ்சியம்)
பிரதான வீதி, சுழிபுரம்
021 225 0160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டலாம் வாங்க





## ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

ஒரு தந்தைக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் தங்களுக்குள் அவ்வப்போது சண்டையிட்டு வந்தனர். அதனால் மனம் வருந்திய தந்தை... அவர்களிடையே எந்த வழியில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்று யோசித்தார். பின்னர் ஒரு நாள் அவர் தன் பிள்ளைகளிடம் ஒரு கட்டு சுள்ளி விறகுகளைக் கொண்டு வரச் சொன்னார். பின்னர் ஒவ்வொரு மையனிடமும் அந்தக் கட்டைக் கொடுத்து அதை, துண்டுகளாக உடைக்கும்படியாகக் கூறினார். மகன்மார் நால்வரும் தனித்தனியாக தங்கள் பலத்தை உபயோகித்து சுள்ளிக் கட்டை உடைக்க முயன்றனர். ஆனால்...அதை அவர்களால் உடைக்க முடியவில்லை... பின்னர் தந்தை அந்தக் கட்டை அவிழ்த்து..... சுள்ளிக் குச்சிகளைத் தனித்தனியே எடுத்து ஒடிக்கக் கொடுத்தார்..... அவர்கள் சுலபமாக ஒடித்து விட்டனர். தந்தை தன் புதல்வர்களைப் பார்த்து பார்த்தீர்களா.. முதலில் இருந்த சுள்ளிக் கட்டு போல நீங்கள் ஒற்றுமையாக ஒன்றாக வாழ்ந்தால் உங்களை யாரும் அசைக்க முடியாது.அதனால் உங்களுக்கு ஒருபோதும் துன்பம் வராது.... ஆனால் ஒற்றுமையில்லாமல் தனித்தனியாக பிரிந்தீர்களானால் இந்த சுள்ளிக் குச்சிகளைப் போல எளிதில் உடைபட்டு அழிந்து விடுவீர்கள் என்று புத்திமதி கூறினார். அதைக் கேட்ட புதல்வர்கள்... ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து ஒற்றுமையாக இருந்தனர். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.


## நம்பினால் நம்புங்கள்

* உலகிலேயே எண்ணெய் வளம் மிகுந்த நாடு சவுதி அரேபியாதான். அங்கு உலகின் 20 சதவீத (ஏறத்தாழ 26410 கோடி பரல்) எண்ணெய்பூமிக்குஅடியில்உள்ளது.
* ஒரு கண்ணாடிப் போத்தல் சிதைவதற்கு 10 லட்சம் ஆண்டுகள் கூட ஆகலாம். போத்தல்களின் மூலமான சிலிகான் டை ஒக்சைட் மிக நிலையானது, கிரானைட் போல!
* ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1000 கோடி தொன் காபன் வளிமண்டலத்தில் கலக்கிறது.
* கடலில் மின்னல் தாக்கும் போது 30 ஆயிரம் அம்பியர் மின்சாரம் உருவாக் கப்படுகிறது. ஆனால், அருகிலுள்ள மீன் உணர்வதோ சிறு சிலிர்ப்பு தான்!

## நீர்யானைகள்

நீர்யானைகள் ஆபிரிக்காவைச் சேர்ந்த பாலூட்டியாகும். இது ஒரு தாவர உண்ணிஆகும். கூட்டங்களாக வாழும். ஒரு கூட்டத்தில் 40 நீர்யானைகள் வரை காணப்படும். இவை 40 முதல் 50 ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன. இவை 3.5 மீற்றர் நீளமானவை; 1.5 மீற்றர் உயரமுடையவை; 1500 முதல் 3 ஆயிரத்து 200 கிலோகிராம் நிறையுடையவை. பெண் நீர் யானைகள் ஆண் யானைகளைவிட சிறியவை. நீர்யானைகள் தாமாக மனிதரைத் தாக்குவதில்லை. ஆனால் அவற்றின் ஆள்புலத்தினுள் நுழைவோரை மூர்க்கமாகத் தாக்கக் கூடியவை. நீர்யானைக் குட்டிகள் நீரினுள்ளேயே பிறப்பதால் தம் முதல் மூச்சுக்காகவே நீந்தி நீர்மட்டத்துக்கு வருகின்றன. நீருக்கடியிலேயே முலைப் பால் அருந்துகின்றன.





## சிந்தனைக்கு

* தவறுக்கு வருந்தாதே. திருத்திக் கொள்வதில் வெட்கப்படாதே.

– சாக்ரடீஸ்.

* ஏதற்கும் அஞ்சாதே, எதையும் வெறுக்காதே, யாரையும் ஒதுக்காதே. உன் பணியை ஊக்கமுடன் செய்.

– அரவிந்தர்.

* தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாத மனிதன் தனக்குள் உள்ளதிறமையையும் வெற்றியாக மாற்ற முடியாது.

– எட்கார் ஆலன்போ.

* உன்னால் உன் இஷ்டப்படி வாழ முடியாவிட்டால் உன்னால் இயன்றதை வாழ்ந்து விடு.

– கிரேஸியன்.

* எவரும் எதையும் சொல்லலாம். ஆனால் எல்லோருடைய சொல்லையும் நம்பாதீர்கள்.

– மாண்டேயின்.

* அறிவை விலைக்கு வாங்க முடியும். ஆனால் உணர்ச்சி, அன்பு ஒருநாளும் சந்தைக்கு வருவதில்லை.

– ஜே. ஆர். லெவல்.

* வாழ்க்கையில் சவால்களைச் சந்தித்து இறுதிக்காலம் வரை உற்சாகத்துடன் வாழும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

– மால்ட்ஸ்.

* கோபம் என்பது வைர அட்டிகை போன்றது. அதை எப்போதும் அணிந்திருந்தால் அதன் மதிப்பு போய்விடும். வைரமா? என்கிற சந்தேகமும் வந்துவிடும்.

– அனுராதாரமணன்.

* மனிதனை அழிக்கக்கூடிய ஒரே விஷயம் அழிவில் நம்பிக்கை வைப்பதே.

– மார்ட்டின் புபெர்



- இலக்கு இல்லாத கப்பல்கள் கரை சேர்வதில்லை
- இலட்சங்களைச் சேர்த்தவன் பெயரும் புகழும்– நாலு தலைமுறைக்கு
- லட்சிய மனிதன் என்பவன் எதையும் கலங்காது ஏற்பான்
- இலட்சியங்கள் நம் வழியை வளப்படுத்தும்
- இலட்சியங்களைச் சிந்திப்பவனையே அது நெருங்கி வரும்
- இலட்சியம் இல்லாத மனிதர்கள் வெற்றிகாண்பதில்லை
- இலட்சியம் இல்லாத வாழ்க்கை வெறும் பதட்டமே
- இலட்சியம் என்பது வாழ்வைக் காவியமாக்குகிறது
- இலட்சியமில்லாத மனிதன் இலக்கில்லாத கப்பலைப் போல அலைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை தான் அழகு



அழகு என்பது உடலுடன் தொடர்புடையது மட்டுமல்ல உள்ளத்துடனும் தொடர்புடையது என்கின்றனர் வல்லுநர்கள். எங்கே தன்னம்பிக்கை அதிகரிக்கிறதோ அங்கே அழகு மிளிரும் என்பது அவர்களின் கூற்று. உள்ளத்தில் தன்னம்பிக்கை ஒளி உண்டானால் முகத்தில் பொலிவு கூடும் என்பது வல்லு நர் களின் கருத்து. அழகாய் இருக்க வேண்டும், அழகான தோற்றம் பெற வேண்டும் என எந்தப் பெண்ணும் விரும்புவது சகஜம். நாம் நேசிக்கும் ஒரு வர். அல்லது ஒரு பொருள், அல்லது வேறு ஏதாவதாக இருக்கலாம், அது நம்மை விட்டு போகும் போது, அல்லது இல்லாமல் போகும் போது, நாம் அதற்காக ஏங்கும் நிலை ஏற்படலாம். ஆனால் நாம் எதை இழந்தாலும் அழகு எப்போதும் நம்மை விட்டு அகல்வதேயில்லை. அது எப்போதும் நம்மிடமே உள்ளது. ஆனால், நமக்குத்தான் வயதாகி விட்டதே என எண்ணி அழகை நாம் பேணாத காரணத்தால் தான் அழகிழந்த வர்களாக நாம் நம்மைக் கருதுகிறோம்.

**நம்மை நாமே பாராட்டுவோம்**

இழந்த அழகை பெற நாம் முதலில் நம்மீது நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்மைப் பற்றி உயர்வாக எண்ண வேண்டும். நாம் அழகான வர், இனிமையானவர் என எண்ணிக் கொள்வது அழகின் முதல் படியாகும். இது போன்ற மெல்லிய உணர்வுகள் கூட நமது முகத்தை அழகுபடுத்தும்.

**ஆரோக்கியமான உடல்நிலை**

உணர்வுகள் மட்டுமல்ல, நல்ல ஆரோக்கியமான வாழ்க்கை முறை கூட அழகாய் இருப்பதற்குத் தேவைப்படுகிறது. அழகான மென் உணர்வுகளைப் பெற நல்ல தேக ஆரோக்கியம் மிக அவசியமாகும். நல்ல ஆரோக்கியம் என்பது திடகாத்திரமாக சுறுசுறுப்பானவர்களாக இயங்குவதேயாகும். இது சுறுசுறுப்பை நல்லசத்தான உணவை உட்கொள்வதன் மூலமே பெற முடியும். நல்ல ஆரோக்கியத்தைப் பெற முதலில் மன அமைதியைத் தேடிக் கொள்ளுங்கள்.

**நிதானம் ஏற்படும்**

அமைதியில்லாத உள்ளத்தில் அழகான மென்மையான எண்ணங்களுக் கிடமில்லை. எந்தப் பிரச்சினையையும் என்னால் எதிர்த்துப் போராட முடியும் என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அச்சம் விலகும். அந்த மனத்தைரியத்தில் ஒரு அமைதி மனதில் ஏற்படுவதை உங்களால் அறிந்துகொள்ள முடியும்.

மன அமைதி ஏற்படும் போது மிகுந்த நிதானத்துடன் அன்றாட வேலைகளை திருப்தியுடன் செய்து முடிக்க முடியும். அமைதியாக உறங்கவும் சாப்பிடவும், நண்பர்கள் உறவினர்களுடன் இனிமையாகப் பழகவும் முடியும்.

**தினமும் கவனியுங்கள்**

திருமணத்திற்கோ, திருவிழாவிற்கோ செல்லும் போது மட்டுமே சில பெண்கள் அழகு படுத்திக்கொள்ள முற்படுவார்கள். பிற நாட்களில் ஏனோ தானோவென நாள்களைக் கழித்து விடுவார்கள். இது தவறான முறையாகும். துடைக்கத் துடைக்கத்தான் கண்ணாடி பளப்பளப்பாகும். அதேபோல் பெண்கள் தங்களின் முகத்தைக் கை கால்களை அடிக்கடி நல்ல முறையில் பேணி வந்தால் நாளடைவில் சகல உறுப்புகளும் பொலிவு பெறும். இதே போல் மனதையும் கவனித்து அமைதி இழக்காது பாதுகாப்பது அதைவிடச் சிறந்ததாகும். ஏனெனில் மனதில் அமைதி இல்லாத போது முக அழகு ஏற்படாது. சோகமோ சந்தோஷமோ முகமானது மன அழகை பளிச்சென எடுத்துக் காட்டும். இந்த சக்தி கண்களுக்கும் உண்டு. உங்களைப் பற்றிய நம்பிக்கை, உடலைப் பற்றி ஓர் உயர்ந்த அபிப்பிராயம், நல்ல நினைவுகள் இல்லாமல் போகும். பட்சத்தில் அழகாக இருக்கிறோம் என்ற நினைப்பிற்கே இடமில்லை.

**மகிழ்வாகப் பாடுங்கள்**

பிரச்சினைகள் மனதைப் பாதித்து விடுவது இயற்கையே. பிரச்சினைகள் சகலருக்கும் உண்டு. பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அது அவசியமானது. பிரச்சினைகளுடன் வாழ்வது அதைத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது உடலை மிகவும் பாதித்து விடும். மன இறுக்கத்தை ஏற்படுத்தி விடும். எனவே பிரச்சினைகளை மனதில் போட்டு குழப்பிக் கொண்டிராமல் நெருங்கிய நண்பர்களுடன், அல்லது உங்களுக்கு மிக வேண்டியவர்களுடன் அப்பிரச்சினையைவிட்டு மனம் திறந்து பேச வேண்டும். பிரச்சினை இருக்கிறதே என்று விட்டு விடாமல் மனத்தெளிவுடன் ஏனைய வீட்டு வேலைகளை மேற்கொள்ளலாம். அல்லது ஏதாவது கீர்த்தனைகள், சுலோகங்கள் தெரிந்திருந்தால் அவைகளை கொஞ்சம் சத்தத்துடன் பாடலாம். மனம் இலேசாகும். இதனால் பிரச்சினைகள் மறக்கப்பட்டு மனப்பாரம் குறைந்து சாந்தமடையும். முயற்சி செய்து பாருங்கள்.




**மனத் தெளிவு தரும் யோகா**

யோகாசனம் கூட மன அமைதியைக் கொடுக்கும். எல்லா யோகாசனங்களை செய்ய முடியாவிட்டாலும் ஓரிடத்தில் அமர்ந்து மூச்சை உள்வாங்கி மெல்ல வெளியே விடுங்கள். அதைத் தொடர்ந்து 15, 20 நிமிடம் வரை செய்து வாருங்கள். மன அமைதி கிடைக்கும். அலைபாயும் நினைவுகள் கட்டுக்கடங்கி முகம் அமைதியை வெளிக்கொணரும். பதற்றம் தணியும். உள்ளழகு பளிச்சென வெளிவரும். முகமும் உடலும் புத்துயிர் பெறும்.

**சுடர்விடும் குத்துவிளக்கு**

அழகானதோற்றம்கொண்ட ஒருவர் பிறரையும்சந்தோஷப்படுத்துகிறார். தன்னம்பிக்கைகொண்டவராக புன்னகையுடன் அவர் வலம் வரும் போது பார்ப்பவர்கள் பரவசம் கொள்கிறார்கள். அவரது உள்மன அழகை தெளிவான புன்னகை எடுத்துக்காட்டுகிறது. மனதில் அமைதியும் அடக்கமும் இருந்தால், முகமும் உடலும் அழகு பெறும். அப்படியான முகத்திற்கு அலங்காரமே தேவையில்லை. சாதாரண முக அலங்காரம் போதுமானது. குத்து விளக்கு போன்ற அழகு என்கிறார்களே அது போல அமைதியான முகத்தெளிவைக் காட்டும் அழகைத் தான் அப்படி வர்ணிக்கிறார்கள். மனத் தெளிவும், அமைதியான உள்ளமும் அழகின் முதல் படியாகும். திருப்தியான உள்ளம் அமைதியை ஏற்படுத்தும். எனவே மன அமைதியைத் தேட முயற்சி செய்யுங்கள். உங்களைப் பற்றி அழகான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். நல்ல மென் உணர்வுகளைக் கொண்டிருங்கள். அதுவே உங்கள் முகத்திலும் உடலிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

# ஜூன் மாத இராசி பலன்கள்



## மேடம்

இந்த மாதம் ராகு 6 இல் நின்று நன்மை தந்து கொண்டிருக்கிறார். சுக்கிரன் மே 31 இல் மிதுனத்தில் இருந்து கடகத்துக்கு இடம் மாறினாலும், மாதம் முழுவதும் நற்பலன் அளிப்பார். இடபத்தில் இருக்கும் சூரி யன், செவ்வாய் மற்றும் 12 இல் இருக்கும் கேது ஆகியோரால் ஓரளவே நன்மை உண்டாகும். சனி பகவான் ஜூன் 12 முதல் வக்கிரம் அடைந்து துலாம் ராசிக்கு வருகிறார். இதனால் அலைச்சல் அதிகரிக்கும். அடிக்கடி வெளியூரில் தங்க நேரிடும். அரசு வகையில் எதிர் பார்த்த விடயம் தாமதமாக நடக்கும். மாத பிற்பகுதியில் சுக்கிரனால் சமூக மதிப்பு கூடும். உறவினர்களிடம் இணக்கம் உருவாகும். நண்பர்களின் உதவி தேவையான சமயத்தில் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. புதுமணத்தம்பதியருக்குகுழந்தைப் பாக்கியம்கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களால் நன்மை கிடைக்கும்.

**தொழில், வியாபாரத்தில்:** நல்ல வளர்ச்சி உண்டாகும். புதனால் அவப்பெயர் வரலாம். உங்கள் செல்வாக்குக்கு பாதிப்பு ஏற்படலாம். சற்று ஒதுங்கி இருக்கவும். அவர் மே 24 இல் வக்கிரம் அடைந்து உங்கள் ராசிக்கு வருகிறார். இதுவும் சிறப்பான நிலை என்று சொல்ல முடியாது. கலைஞர்களுக்கு எதிர்பார்த்த புகழ் கிடைக்கும். நல்ல வருமானமும் காண்பர்.

**அரசியல்வாதிகள்:** தொண்டர் மத்தியில் மதிப்புடன் இருப்பர்.

**மாணவர்கள்:** நண்பர்களுடன் பொழுதுபோக்கி மகிழ்வர்.

**விவசாயிகள்:** மஞ்சள், கேழ்வரகு, சோளம் காய்கறி, பழவகைகள் போன்றவை மூலம் நல்ல வருமானம் காணலாம். வழக்கு விவகாரத்தில் மெத்தனம் வேண்டாம்.

**பெண்கள்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.

**நல்ல நாள்:** மே 16, 17, 20, 21, 22, 30, 31 ஜூன் 1, 6, 7, 8, 9, 12, 13, 14

**கவன நாள்:** ஜூன் 2, 3 சந்திராஷ்டமம்

**அதிர்ஷ்ட எண்:** 5, 7 **நிறம்:** நீலம், வெள்ளை

**பரிகாரம்:** நாக தேவதையை வணங்கி வாருங்கள். காலையில் சூரியனை தரிசனம் செய்யுங்கள். செவ்வாய்க் கிழமை முருகனை வழிபடுவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 60 | 60 | 80 | 30 |
| கத்தரி | 100 | 100 | 120 | 80 | 100 | 50 | 80 | 46 |
| கரட் | 200 | 150 | 180 | 120 | 200 | 240 | 200 | 150 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 50 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 200 | 80 | 170 | 120 | 140 | 60 |
| பாகல் | 150 | 130 | 120 | 120 | 140 | 120 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 120 | – | 100 | 140 | 120 | 75 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 110 | 90 | 120 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 120 | 120 | 140 | 100 | 120 | 85 |
| பூசணி | 40 | 30 | 40 | 20 | 30 | 40 | 65 | 15 |
| தக்காளி | 80 | 80 | 70 | 60 | 60 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 80 | 40 | 40 | 50 | 40 | 60 | 30 |
| கீரை | 30 | 40 | 50 | 15 | 40 | 50 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 40 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 50 | 60 | 40 | 50 | 40 | 60 | 120 | 20 |
| புடோல் | 80 | 60 | 100 | 100 | 120 | 80 | 120 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 120 | 80 | 100 | 100 | 40 |
| வெண்டி | 120 | 80 | 120 | 100 | 100 | 60 | 100 | 40 |
| போஞ்சி | 140 | 200 | 240 | 160 | 200 | 340 | 200 | 120 |
| லீக்ஸ் | 160 | 150 | 160 | 160 | 220 | 290 | 200 | 170 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 60 | 35–45 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 160 | 140 | 180 | 160 | 100 | 120 | 140 | 140 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 70 | 120 | 160 | 170 | 120 | 120 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 100 | 120 | 140 | 180 | – |
| முருங்கைக்காய் | 600 | 300 | 600 | 300 | 400 | 400 | 250 | 200 |

# உடல் சூட்டை தணிக்கும் முருங்கைப்பூ



முருங்கைப்பூ நமது நாட்டில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் கிடைக்கக்கூடிய அற்புதமான மருந்து மூலப்பொருளாகும். முருங்கை மரத்தின் இலை, பட்டை, வேர், காய் அனைத்தையுமே ஒவ்வொரு வகையில் மருத்துவச்சிறப்பு பெற்றுத் திகழ்கின்றன. கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டால் முருங்கைப்பூவையும் பிரண்டையையும் வகைக்கு ஒருபடி வீதம் சேகரித்துகொள்ள வேண்டும். சிறு துண்டு தேங்காயை அவற்றுடன் சேர்த்து புட்டு அவிப்பது போல் அவிக்க வேண்டும். பின்னர் இதை பிழிந்து கொடுக்க வயிற்று வலி குணமாகும். நன்கு காய்ச்சிய பசுவின் பாலில் நாலைந்து முருங்கைப் பூக்களைப் போட்டு நாள்தோறும்– சாப்பிட்டு வந்தால் உடலுக்கு நல்ல புஷ்டி பெறும். முருங்கைப் பூவுடன் கற்றாலைச் சாறு, பசு வெண்ணெய், ஆகியவற்றை சம அளவு கலந்து சாப்பிட்டு வந்தால் மேக நோய் எனப்படும் பெண் சீக்கு குணமாகிவிடும். மேகநோய்க்கு வேறொரு பக்குவமும் செய்து சாப்பிடலாம். முருங்கைப் பூவை சாறெடுத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சாற்றில் அரைக்கால் படி அளவு எடுத்து அதே அளவு நல்லெண்ணெய் கூட்டி நூறு கிராம் அளவுக்கு வெல்லம் சேர்த்து மூன்று நாள் கள் சாப்பிட்டாலே மேகநோய் தணிந்து விடும். உடல் சூட்டைத் தணிப்பதற்கு முருங்கைப்பூ நல்ல முறையில் பயன்படும். முருங்கைப்பூவை வடகம் முறையில் பக்குவம் செய்து சாப்பிட்டால் உடல்சூடு உடனேயே சரிபடும். பெண்களுக்கு பெரும்பாடு என்னும் உதிரப் போக்கு ஏற்படுவதுண்டு. உடனடி யாக சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் உயிராபத்து ஏற்படக்கூடும். இதற்கு



முருங்கைப்பூ பெரிதும் பயன்படுகிறது. முருங்கைப்பூவை நன்றாக அரைத்து ஒரு தேங்காய் அளவு எடுத்துக்கொள்ள வேண்டும். பசுவின் பாலும் தேங்காய் பாலும் படிக்கு அரைப்படி எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் 25 கிராம் வெல்லத்தை கூட்டி எல்லாவற்றையும் சேர்த்து காய்ச்சி இலேகிய பதத்தில் இறக்கிவிட வேண்டும். இந்த லேகியத்தை எலுமிச்சை அளவு எடுத்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை சாப்பிடவேண்டும். இவ்வாறு ஒரு வருடம் சாப்பிட்டால் பெரும்பாடு என்னும் உதிரப்போக்கு குணமாகிவிடும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இறைவனை உணர்ந்தவன் உண்மையை உணர்வான்

ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதிஅந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான். தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம். எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும். உங்களுக்குப் பிடித்ததை கடைப்பிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | | 8 | |
| | 4 | | | | 3 | | 9 | |
| 2 | | | 1 | | 6 | 7 | 4 | |
| | | | 4 | | | | 1 | 5 |
| 4 | 2 | | 9 | | 8 | | 6 | 7 |
| 7 | 8 | | | | 5 | | | |
| | 6 | 2 | 8 | | 7 | | | 9 |
| | 9 | | 3 | | | | 5 | |
| | 1 | | | | | | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 8 | 3 | 9 | 1 | 5 | 6 | 7 |
| 6 | 1 | 7 | 5 | 4 | 8 | 3 | 2 | 9 |
| 3 | 9 | 5 | 2 | 6 | 7 | 8 | 4 | 1 |
| 5 | 4 | 2 | 7 | 3 | 6 | 1 | 9 | 8 |
| 9 | 3 | 1 | 4 | 8 | 2 | 7 | 5 | 6 |
| 7 | 8 | 6 | 1 | 5 | 9 | 4 | 3 | 2 |
| 8 | 7 | 3 | 9 | 2 | 4 | 6 | 1 | 5 |
| 1 | 5 | 9 | 6 | 7 | 3 | 2 | 8 | 4 |
| 2 | 6 | 4 | 8 | 1 | 5 | 9 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**வைகாசி-19**
**செவ்வாய்க்கிழமை**
**02.06.2015**

திதி: பூரணை மு.இ.10.10 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ.08.18 வரை
சுபநேரம்: 10.22-11.52 வரை
இராகுகாலம்: 02.52-04.22 வரை



## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 600 | 800 | 600 | 600 |
| நண்டு | 300 | 500 | 300 | 400 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 500 | 450 |
| பாரை | 600 | 500 | 500 | 600 | 600 | 380 |
| சுறா | 550 | 500 | 500 | 650 | 500 | – |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 260 | 320 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 500 | 350 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 350 | 450 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 350 | 400 | – | – |
| ஓரா | 400 | 400 | 350 | 400 | 500 | – |
| திரளி | 200 | 300 | 250 | 300 | 150 | 250 |
| நகரை | 200 | 300 | – | 300 | 300 | 250 |
| சூடை | 150 | 200 | 300 | 120 | 170 | 100 |
| ஒட்டி | 300 | 150 | 250 | 300 | 400 | 200 |
| திருக்கை | 150 | 350 | 300 | 250 | 150 | 130 |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 400 | |
| வாழை | 100 | 150 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 300 | 220 | 250 | 200 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவில் பாதுகாப்பு படை உறுப்பினர்கள் 40 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியத்துடன் கூடிய நியமனக்கடிதம் கையளிக்கும் வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் மெதிரிகிரிய தேசிய பாடசாலையில்நேற்று நடைபெற்றது.

## பொங்கல் விழா

சங்கானை, ஜூன் 1

சங்கானை அரசால் சித்தி ஞான வைரவர் தேவஸ்தான வைகாசி விசாகப் பொங்கல் விழா நிகழ்வு இன்று இடம்பெறும். இந் நிகழ்வானது காலை 11.30 மணியளவில் விசேட அபிஷேகம் ஆராதனைகள் இடம்பெற்று வளந்து கட்டிப் பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

இரவு 7 மணியளவில் ஆலயச் சூழலில் தீப சோடச மந்திர ராஜ உப்ராஜ சமர்ப்பணமும் வில்வ அர்சனையும் இடம்பெறும்.

## போதை

என்பது என்ன நிச்சயம்? என்று அவர்கள் சிந்தித்தார்கள் அதற்காகவே போதைப் பொருள்களை இங்கு திட்டமிட்டு அறிமுகம் செய்தார்கள்.

இவ்வாறு நேற்றுக் குற்றஞ்சாட்டினார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

உதயனின் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முதலமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்தவாவது:

மாணவர்களே உஷாராக இருங்கள்

குறுக்கு வழியில் மனமருட்சியைப் பெற எத்தனிக்கும் செயற்பாடுதான் போதைப் பொருள் பாவனை. ஆனால் மிகவும் கொடிய பாதிப்புக்களை இவை ஏற்படுத்தக் கூடியன. யார் யாரோ வேண்டும் என்றே திட்டமிட்டு போதைப் பொருள்களைக் கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் விநியோகித்து அதன் பாவனையை ஊக்குவித்து வருகின்றார்கள். சிறு கடைகளில் எல்லாம் சிறிய பொதிகளில் பல்வேறு பெயர்களில் அவற்றை விநியோகிக்கின்றார்கள்.

காலத்திற்கு காலம், அவற்றை அறிமுகம் செய்யும் மார்க்கங்கள் மாற்றப்பட்டு, வெவ்வேறு விதங்களில் எமது மாணவர்களுக்கு அவற்றை கிடைக்க வைக்கும் பிரயத்தனங்கள் தொடர்ந்து நடந்து வருவது தெரிகின்றது. இவற்றை விநியோகிப்பவர்களை நாங்கள் அடையாளம் காணும் வரையில், எமது மாணவச் செல்வங்கள்தான் உஷாராக இருந்து தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ள முன்வரவேண்டும்.

திடசங்கற்பம் எடுங்கள்

சாரயம் – சிகரெட் போன்றவற்றின் பாவனை யிலும் பார்க்க போதைப் பொருள் பாவனை மிக அபாயகரமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. அண்மையில் புங்குடுதீவில் இடம்பெற்ற வன்புணர்விலும் கொலையிலும் ஈடுபட்டவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று மாணவ சமுதாயம் திடசங்கற்பம் எடுத்தால்தான் அதனை ஒழிக்க முடியும். மனமிருந்தால்தான் மார்க்கம் உண்டு. திருடராய்ப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. அதேபோல் போதைப் பொருளை ஒரு பொருட்டாகக் கருதமாட்டோம், அதனைத் துச்சமெனத் தூக்கியெறிவோம் என்று மாணவர்கள் நினைக்க முன்வந்தால்தான், அதன் பாவனையை நிறுத்த முடியும்.

பலவித அரசியல், பொருளாதார, புலனுணர்வு சார்ந்த காரணங்களுக்காக எம்மிடையே இந்தப் போதைப் பொருள் விநியோகம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தப் போதைப் பொருள் அறிமுகப்படுத் தப்பட்டதன் பின்னணியில் முக்கியமான அரசியல் காரணங்களும் உண்டு.

விடுதலையுணர்வை சிதைக்கும் ஆயுதம்

எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி ஒரு காலத்தில் அரசுகளையே ஆட்டிப் படைத்து வந்துள்ளனர். அப்போதிருந்த அரசுகளால், வெளிநாட்டு உதவியைப் பெற்று பெரும் செலவுடன்தான் அவர்களை அழிக்க முடிந்தது. தமிழ் இளைஞர்கள் இனியும் ஒன்று சேரக் கூடாது. ஒருமித்துச் செயற்படக் கூடாது. கல்வியில் சிறந்து விளங்கக் கூடாது. சுதந்திர எண்ணங்கள் அவர்கள் மனதில் எழக் கூடாது. விடுதலை வெறி அவர்களுள் கொழுந்து விட்டு எழக் கூடாது. அவர்களை நடைப் பிணங்களாக்க வேண்டும் என்ற எண்ணம், சில அதிகார பீட அலுவலர்களிடமும், அரசியல்வாத அமைச்சர்களிடமும் எழுந்தது. வடக்கு – கிழக்கு இளைஞர்கள் பலரை அழித்து ஒழித்து விட்டோம். ஆனால் அவர்கள் மீண்டும் எழமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? என்று அவர்கள் எண்ணினார்கள். அதற்காகவே போதைப் பொருள்களை இங்கு திட்டமிட்டு அறிமுகம் செய்கிறார்கள். தமிழ் இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி, அவர்கள் தங்களது சுய நினைவையும், சுயமரியாதையையும், சுய சிந்தனைகளையும் மறந்து விட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள்.

பணம் புரட்டுவதும் நோக்கம்

எமது இளைஞர்களிடையே போதைப் பொருள்கள் அறிமுகம் செய்யப்பட ஒரு அரசியல் காரணம் பின்னணியில் இருந்து வந்துள்ளது என்பதை அறிய வேண்டும். போதைப் பொருள்களை விநியோகம் செய்பவர்களை எமக்குக் காட்டிக் கொடுக்க மாணவ சமுதாயம் முன்வர வேண்டும். இந்தச் சதியிலிருந்து தப்ப முயற்சிக்க வேண்டும்.

சில அமைச்சர்கள், உயர் பதவிகளில் இருந்தவர்கள், சில காலத்திற்கு முன் அதிகாரத்தில் இருந்த பலர் அண்மைக் காலம் வரையில் போதைப் பொருள் விநியோகத் தொழிலில் மறைமுகமாக ஈடுபட்டிருந்தார்கள். இதனை தற்போதைய அரசு கண்டறிந்துள்ளது. ஆகவே செல்வாக்கு மிகுந்தவர்களின் உந்துதலின் பேரில் இந்தப் போதைப் பொருள் விநியோக வியாபாரம் வடக்கில் நடந்து வந்துள்ளது என்ற முடிவுக்கு வரலாம்.

பணம் புரட்டுவதும் அவர்களது நோக்கம். அதனால் சீரழிவது எமது மாணவ இளம் சந்ததியினர். நன்மை அடைவது, பெரும் பணம் படைத்தவர்களும் – இடைத்தரகர்களும் – மாணவ முகவர்களும்.

அடையாளம் காட்ட முன்வாருங்கள்

இளைஞர்கள் இடத்தில் புலனுணர்வைத் தூண்டி விட்டால், முதலில் அவர்கள் போதைப் பொருள் பாவனையாளர்களாகத் தொடங்க பின்னர் அதற்கு அடிமையாகிக் கடைசியில் போதைப் பொருள் விற்பவர்களாகவும் மாறி விடுகின்றனர். போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானால் அதிலிருந்து தப்ப முடியாது. எனவே தொடர்ந்து அதனைப் பாவிப்பதற்கு பணம் வேண்டும். அதனால்தான், அவர்கள் விற்பவர்களாகவும் மாறுகின்றனர். இதனால்தான் முதலில் அறிமுகம் செய்தவர்களையும், விநியோகத்தவர்களையும் நாம் அடையாளம் காண முடியாது போகின்றது.

விரைவில் மத்திய அரசுடன் இணைந்து, போதைப் பொருள் பாவனையை ஒழிக்க போதிய விழிப்புணர்வு நிகழ்சிகளிலும் குணமாக்கும் நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபடவுள்ளோம்.

போரின் பின்னர் வடக்கு – கிழக்கு மாகா ணங்களின் அபிவிருத்தியையும் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய என்ன கருமம் ஆற்ற வேண்டும் என்பதில் பத்திரி கைகள் தமது முழு நாட்டத்தையும் செலுத்த வேண்டும். அதே நேரத்தில் மக்களின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் ஏதுக்களை கண்டறிந்து வெளிக் கொண்டு வர வேண்டும்.

*தவறுகளைச் சுட்டிக்காட்டுங்கள்*

எமது குற்றங்குறைகள் எதுவாக இருந்தாலும் சுட்டிக்காட்டுங்கள். எமது மக்கள் அறிவுக் கூர்மையும் திறமையுங் கொண்டவர்கள். புதியனவற்றை தேடும் இயல்பினர். அவர்களைச் சரியான பாதையில் திசை திருப்பினோம் என்றால், ஏனைய மாகாணங்கள் எல்லாவற்றிலும் பார்க்க சகல துறைகளிலும் முன்னணியில் நிற்கக்கூடியவர்கள். அதற்காக ஊடகங்கள் தமது பங்கைச் செய்ய முன்வர வேண்டும்.

வடக்கிலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமாகப் பரிசீலித்து, அவற்றிலுள்ள குறைபாடுகளை பத்திரிகைகள் வெளிக்கொண்டு வர வேண்டும். அந்தக் கிராமத்தில் செய்யக் கூடிய செயற்பாடுகள் பற்றித் தெரியப்படுத்தி, மாகாண சபை அவற்றைச் செய்ய வேண்டும் என்று நிர்பந்திக்கலாம். இதனூடாக இந்த விடயங்கள் உலகறியச் செய்யப்படும். இதனை வெளிநாடுகளிலுள்ள, ஏதேனும் உள்ளூராட்சி மன்றம் வசதியற்ற எமது உள்ளூராட்சி மன்றங்களை வளர்ச்சியடையச் செய்யக் கூடும்.

எமது ஊடகங்கள் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் செயலாற்ற முன்வர வேண்டும். அப்படிச் செயலாற்றுகிறார்கள். இன்னமும் செய்ய வேண்டும். போதைப் பொருள் விற்பனையாளர்கள் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பற்றியும் எமக்கு எடுத்துரைக்க முன்வரவேண்டும். இது ஊடகத்தில் உள்ளவர்களின் உரிமையுடனான உத்தம பங்கு. அதை ஆற்றுவீர்கள் என்று எதிர்பார்கின்றேன் – என்றார். (உ–5)

## அரசியல்

பேச்சுகளுக்கு அரசு இணங்கியுள்ளது. அந்த வகையில் 278 பேர் [illegible] யும் இருக்கின்றது. அரசியல் கைதிகள் தொடர்பில் கடந்த வாரம் இடம்பெறவிருந்த பேச்சு நீதியமைச்சரின் தவிர்க்க முடியாத வேலைப்பளு காரணமாக இந்த வாரத்திற்குப் பிற்போடப்பட்டது.

இந்நிலையில், எதிர்வரும் நாள்களில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் இடம்பெறவிருக்கும் சந்திப்பில் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை தொடர்பில் ஆழமாகக் கலந்துரையாடப்படும் – என்றார்.

## வற்றாப்பளை

நடவடிக்கைகளினை முல்லைத்திவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற்கொண்டுள்ளனர். அவசர தேவை கருதி விசேட வைத்திய சேவைக்குழுவினர் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து ஒழுங்கு மற்றும் பக்தர்களின் பாதுகாப்புப் பணிகளில் விசேட பொலிஸார் சீருடையுடனும் சிவில் உடையுடனும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வற்றாப்பளை பொங்கலின்போது வருடா வருடம் லட்சக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் ஒன்றுகூடுவது வழமை. இந்த வருடமும் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால் அவர்களை எதிர்கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களின் தாக சாந்திக்காக முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதிகள் எங்கும் வீதி தோறும் தாக சாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (உ–102)

## மிக்-27

கொள்வனவு உடன்பாடு கையெழுத்திடப்படுவதற்கு சில நாள்கள் முன்னதாகவே இந்த வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வங்கிக் கணக்கு திறக்கப்படுவதற்கு சில நாள்கள் முன்னதாகவே குறித்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும், கிடைத்துள்ள ஆவணங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்த நிறுவனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது, இதன் பணிப்பாளர்கள் யார், அதன் தொடர்புகள் என்ன என்பன உள்ளிட்ட விவரங்கள் குறித்து அறிந்து கொள்வதற்காக, நான்கு பேர் கொண்ட குழுவொன்று இலங்கையிலிருந்து உக்ரேன் தலைநகர் கீவ்வுக்கு பயணமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ–5)

## சம்பூரில்

இதனால் சம்பூர் மக்கள் விரைவில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

இதனை அடுத்துப் பலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி தற்காலிகக் கொட்டில்களை அமைத்துக்கொண்டு காணிகளைத திருத்தத் தொடங்கியருந்தனர். இதற்கிடையில் சம்பூர் முதலீட்டு வலயத்தில் வர்த்தக நிலையங்களுக்கு காணிகளைப் பெற்றுக்கொடுக்கும் நிறுவனம் ஒன்று ஜனாதிபதியின் முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. அந்த வழக்கில் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலை நீதிமன்றம் இடை நிறுத்தி வைத்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சம்பூரைச் சேர்ந்த ஒருவர் பட்டினிப் போராட்டம் நடத்தினார். இந்த நிலையில் தனது இடைக்காலத் தடை உத்தரவை உயர் நீதிமன்றம் திரும்பப் பெற்றுக்கொண்டது.

ஆனாலும் சம்பூரில் உள்ள தமது காணிகளுக்குத் திரும்பியிருந்த மக்கள் அங்கு காணிகளைத் துப்புரவு செய்வதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர். சனிக்கிழமை காணிகளை துப்புரவு செய்து கொண்டிருந்தவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

சம்பூர் காணிகள் தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதே இதற்கு காரணம் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணிக்குள் நடமாடும் வெளியாரை வெளியேற்றுமாறு நீதிமன்ற அறிவித்தல் தங்களுக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்தே பொலிஸார் தம்மை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டனர் என்று சம்பூர் மக்கள் கூறுகின்றார்கள். (உ)

## தேர்தல்

ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு தனது முதல் சந்திப்பை விரைவில் நடத்தவுள்ளது என அறியமுடிகிறது. இந்த மாத இறுதிக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது, பிரதமருக்கு எதிராக மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் பட்சத்தில் அந்த வாரத்திலேயே நாடாளுமன்றம் கலைக்கப்படக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது.

## வாக்காளராக

இதுவரை வாக்காளர்களாக இணையாத 18 வயதுக்கு மேற்பட்ட சகலரும் உடனடியாக தத்தம் கிராம சேவகர் அலுவலகம் பிரதேச செயலகங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு வாக்காளர்களாக இணைந்து கொள்ளுமாறு அந்த அறிவித்தலில் வலியுறுத்தப்படுகிறது.

இதனை அடுத்து வாக்காளர்களாக இணையாத பலர் கிராம சேவர்களிடம் இதற்கான விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பித்து வருகின்றனர். எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் அவர்கள் வாக்காளர்களாக இணைக்கப்படுவார்கள் என்று தெரிகிறது. (உ–[illegible])

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இறுதியில் ஓல்ட் கோல்ட்ஸ்



யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். பல்கலைக்கழக விளயாட்டவையும் யாழ். பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து நடத்தும் ஹொக்கித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் நியூ வாரியஸ் அணியை வீழ்த்தி ஓல்ட் கோல்ட்ஸ் அணி இறுதிக்கு முன்னேறியது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த முதலாவது அரையிறுதியாட்டத்தில் நியூ வாரியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் முதல் பாதியின் முதல் பத்து நிமிடங்களுக்குள்ளேயே நியூ வாரியஸ் சார்பாக இரண்டு கோல்கள் பதிவுசெய்யப்பட்டுவிட்டது. இதனால் வாரியஸ்ஸின் ஆதிக்கம் ஓங்கிக் காணப்படும் என்ற பரவலான எதிர்பார்ப்புக்கள் மத்தியில் ஓல்ட் கோல்ட்ஸ் வீரர்களான பிரதீபன், மற்றும் அருண் அடுத்தடுத்து இரு கோல்களை விளாசித்தள்ளி வாரி யஸ்ஸின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்ய வெற்றிக்காற்று இரு அணிகளின் பக்கமாகவும் சமனாக வீசத் தொடங்கியது. இதேநிலைமை நீடிக்க ஆட்டத்தின் முதல்பாதி 2:2 என்ற அடிப்படையில் முடிவுக்கு வந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் இறுதிக்கு முன்னேற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இரு அணியினரும் ஏகப்பட்ட வியூகங்களை ஆட்டத்தில் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். வாரியஸின் வியூகங்களை இல்லாமல் செய்து தமது அணி சார்பாக மூன்றாவது கோலை நிலக்ன் பதிவுசெய்ய ஓல்ட் கோல்ட்ஸ் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. ஆதிக்கத்தை அப்படியே இல்லாமல் செய்தனர் வாரியஸ் வீரர்கள். ஓல்ஸ் கோல்ட்ஸின் முயற்சி மீண்டும் கோலாகி 4:3 என்று முன்னிலைபெற வாரியஸ் வீரர்கள் சற்றுத் தடுமாறினார்கள். எனினும் பழிதீர்க்கத்தவறவில்லை. தற்பொழுது 4:4 என்ற நிலைமை. ஆட்டத்தின் நேரம் முடிந்து விட்டது ஆனால் அணிகளுக்கிடையில் ஏக ஆதிக்கம் வரவில்லை. எனவே இறுதிக்குச் செல்லப்போகும் அணி எது என்று தீர்மானிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. இரட்டிப்பான போராட்டத்தில் வாரியஸ்ஸின் வியூகங்களை தவிடு பொடியாக்கி திரில் வெற்றியுடன் இறுதிக்கு பறந்தது ஓல்ட் கோல்ட்ஸ். (ரி–23)



## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 1

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட் கிழமை மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ரெட் றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதிக் கொள்ளவுள்ளது. (ரி-

# மீண்டும் பிளாட்டர்



சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் தலைவராக செப் பிளாட்டர் 5 ஆவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ரஷ்யாவிலும், 2022ஆம் ஆண்டில் கட்டாருக்கும் உலகக்கிண்ண கால்பந்து தொடரை நடத்த அனுமதி வழங்கியதில் கிட்டத்தட்ட 2ஆயிரத்து 500 கோடிகள்வரை ஊழல் நடந்ததாக தெரிவிக்கப்பட்டு சர்வதேச கால்பந்து சம்மேளன நிர்வாகிகள் 7 பேர் சமீபத்தில் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் சுவிஸ் தலைநகர் சூரிச்சில் பல்வேறு சர்ச்சைகளை தாண்டி சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் தேர்தல் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் கடந்த 17 ஆண்டுகளாக தலைவராக ஆதிக்கம் செலுத்தி வரும் பிளாட்டருக்கு இம்முறை கடும் எதிர்ப்பு காணப்பட்டது. இவரை எதிர்த்து ஜோர்டான் இளவரசர் அலி பின் அல் ஹுசைன் போட்டியிட்டார். மொத்தம் 209 உறுப்பு நாடுகளில், முதல் சுற்றில் 140 வாக்குகளைப் பெறுபவர் வெற்றி பெறலாம். ஆனால், பிளாட்டருக்கு 133 வாக்குகள் தான் கிடைத்தன. ஜோர்டான் இளவரசர் அலி பின் அல் ஹுசைன் 73 வாக்குகளைப் பெற்றார்.

இதையடுத்து இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடக்க இருந்தது. ஆனால் இதற்கு முன் ஹுசைன் விலகுவதாக அறிவித்தார். இதைத் தொடர்ந்து பிளாட்டர் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் தலைவராக 5ஆவது முறையாக தெரிவு செய்யப்பட்டார். பிளாட்டருக்கு எதிராக பல விளையாட்டு நட்சத்திரங்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் குரல் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட தொடர்களில் தெல்லிப்பழை வலுவான ஆதிக்கம்





கரணவாய், ஜூன் 1

யாழ்.மாவட்ட பிரதேசசெயலகங்களுக்கு இடையிலானமாவட்ட மட்ட வலைப்பந்தாட்டத் தொடர் மற்றும் பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் ஆகிய இரு தொடர்களிலும் வென்று நடப்பு வருட சம்பியனாகியது தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் ஆகியவற்றின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் சங்கானை பிரதேச செயலக அணியும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி முதல்பாதியில் 19:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. தெல்லிப்பழை அணியின் ஆட்ட வியூகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது சங்கானைபிரதேசசெயலகஅணிதிணற அதனை தமக்குச் சாதக மாகப் பயன்படுத்திய தெல்லிப்பழை அணி அபாரமாக விளையாடி மேலும் 23 புள்ளிகளைப் பெற்று 42:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனாகியது.

அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும், கரவெட்டி பிரதேச செயலக அணியும் மோதின. ஆட்டத்தின் முழுப்பகுதியையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த தெல்லிப்பழை அணி 25:21, 25:17 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (ரி–108)

## செனி. லூட்ஸ், குறிஞ்சிக்குமரன் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 1

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் உதை பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மாதகல் புனித தோமையார் விளையாட்டுக்கழக அணிக்கும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ரி–23)

## இமையாணனை வீழ்த்தியது சென்.சேவியர்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ரி–23)



# இங்கிலாந்தில் மிரட்டும் டில்சான்

இங்கிலாந்தில் நடைபெறும் கழகங்களுக்கிடையிலான ரி–20 தொடரில் டில்சான் அசத்தல் சகலதுறை ஆட்டத்தால் டெர்பைசியர் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று நடந்த ஆட்டத்தில் டெர்பைசியர் மற்றும் லன்காசியர் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய லன்காசியர் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகள் இழப்பிற்கு 127 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. பந்து வீச்சில் டில்சான் ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து டெர்பைசியர் அணிக்காக தொடக்க வீரர்களாக ஹசிம் அம்லா, டில்சான் களமிறங்கினர். இருவரும் ஜோடி சேர்ந்து மிரட்டினர். அம்லா அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார். டில்சான் 38 ஓட்டங்களில் வெளியேறினார். இதனையடுத்துடெர்பைசியர் அணி 5 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.(ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலம் பெறுகிறது இங்கிலாந்து


இங்கிலாந்து எதிர் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி 5 இலக்குகள் இழப்புக்கு 253 ஓட்டங்கள் குவித்து பலமான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து ஆட்டத்தின் முதலாம்நாள் முடிவில் 8 இலக்குகள் இழப்புக்கு 297 ஓட்டங்கள் பெற்று இருந்தது. இரண்டாம் நாளுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாட கிறைக் 16 ஓட்டங்களுடனும் ஹென்றி 14 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். 320 ஓட்டங்களுக்குள் இங்கிலாந்து சுருண்டுவிடும் என்று எதிர்பார்த்த போதிலும் கிறைக் மிகவும் நிதானித்து சிறந்த பொறுப்பாட்டத்தை வழங்கி அணியை கௌரவ நிலைக்கு அழைத்துச்சென்றார். ஹென்றி 27 ஓட்டங்களுடனும் போல்ட் 15 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்ப நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸிற்காக 350 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 5 இலக்குகளையும் அண்டர்சன், வூட் தலா 2 இலக்குகளையும் ஸ்ரோக்ஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

முன்னிலை பெறவேண்டும் என்ற முனைப்பில்முதல்இன்னிங்ஸிக்காக களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்பவீரர்களே அசத்தல் பலத்தைக் கொடுத்தனர். நியூஸியின் களத்தடுப்பும் சொதப்பலாக அமைய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தியலைத்தும் குக்கும் அணிக்கான அடித்தளத்தை பலமாக அமைக்க ஆரம்பித்தார்கள். பந்துகள் பழக்கப்பட்டதால் இணைப்பாட்டத்தை பிரித்து முதல் இலக்கை சரிக்க படாதபாடுபட்டனர் நியூஸியின் பந்துவீச்சாளர்கள். ஆனபோதிலும் இயலவில்லை.ஆளுக்கொருஅரைச்சதம் இணைப்பாட்டமாக 150 ஓட்டங்களைக் கடந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அணியின் ஓட்டம் 177ஆக இருந்தபொழுது முதல் இலக்காக குக் 75 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மறுமுனையில் சதம்கடந்து இரண்டாவது இலக்காக வெளியேறினார் லைத். சில வீரர்கள் ஒற்றையிலக்கங்களுடன் வெளியேற இரண்டாம்நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து 253-2 என்ற நிலையில் உள்ளது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக போல்ட் 2 இலக்குகளையும் கிறைக், சௌத்தி தலா ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். (ரி)



# சச்சினுக்கு தலைவலி வந்ததாம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின், சில வருடங்களுக்கு முன்பு தான் வேகமாக கார் செலுத்தியது தொடர்பான சுவாரஸ்யமான சம்பவத்தை பற்றி தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் துறையில் பல சாதனைகளை படைத்து உச்சம் தொட்ட சச்சினுக்கு, கார்களில் அதிவேகத்தில் செல்வது என்பதும் பிடித்தமான ஒன்று. ஆனால் அதுவே தனக்கு தீராத தலைவலியை கொடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார். மைதானம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே சச்சின் இவ்வாறு தெரிவித்துள்ளார். சச்சின் மேலும் தெரிவித்ததாவது நான் சில வருடங்களுக்கு முன் இங்கிலாந்தில் இருந்த போது பி.எம்.டபிள்யூ நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே தயாரிக்கப்படும் ஒரு பிரம்மாண்ட காரின் சாவியை என்னிடம்கொடுத்து விட்டு, செலுத்திப்பார்க்குமாறு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நான் என்னுடன் அஞ்சலியையும் கூட்டிச் சென்றேன். ஆனால் அந்த காரை எவ்வளவு வேகமாக செலுத்தினேன் என்று மட்டும் சொல்ல மாட்டேன். அந்த காரை நிறுத்திய பின்னும் தான் நாங்கள் வித்தியாசமாக உணர்ந்தோம். அதிவேக கார் பயணத்தால் அஞ்சலிக்கும் எனக்கும் ஏற்பட்ட தலைவலி ஒருநாள் முழுக்க நீடித்தது என்றார். (ரி)

# கிரிக்கெட்டின் தாயகத்தில் குக் புதிய சாதனை

நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில், இங்கிலாந்து தலைவர் அலஸ்டர் குக் அபாரமாக விளையாடி ஓட்டங்களைக் குவித்து சிறப்பான போர்முக்கு திரும்பியுள்ளது மட்டுமன்றி டெஸ்ட் ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்த இங்கிலாந்து வீரர் என்ற மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்.

இரண்டாவது டெஸ்ட்டின் முதல் இன்னிங்சில் குக் 31 ஓட்டங்களை எடுத்திருந்தபொழுது டெஸ்ட் ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்த (எட்டாயிரத்து தொள்ளாயிரம்) இங்கிலாந்து வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த கிரகாம் கூச் சாதனையை சமன் செய்தார். தொடர்ந்து சிறப்பாக விளையாடி அரைச்சதம் கடந்த அவர் முதலிடத்துக்கு முன்னேறி அசத்தினார். 2006ஆம் ஆண்டு இந்திய மைதானத்தில் இந்திய அணிக்கு எதிராக களமிறங்கிய அறிமுக டெஸ்ட் ஆட்டத்திலேயே சதம் விளாசி அமர்க்களப்படுத்திய குக், இதுவரை 114 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 27 சதங்களையும் 41 அரைச்சதங்களையும் விளாசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)



# வாய்ப்புத் தாருங்கள் சந்தர்போல் மன்றாட்டம்

ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் விளையாட எனக்கு வாய்ப்பு தாருங்கள் என்று மேற்கிந்தியத் தீவுகளின் நட்சத்திர வீரர் சந்தர்போல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி 2 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஆட்டம் டொமினிகாவில் நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான மேற்கிந்திய அணியில் சந்தர்போல் சேர்க்கப்படவில்லை. இந்த நிலையில் தனக்கு ஒரு வாய்ப்பளிக்குமாறு சந்தர்போல் பகிரங்கமாக வேண்டியுள்ளார்.

தனது வாய்ப்பு தொடர்பாக சந்தர்போல் தெரிவித்ததாவது ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் எனக்கு வாய்ப்பு தாருங்கள் என்று கேட்கிறேன். சொந்த மண்ணில் ரசிகர்களின் பாராட்டினை பெற்று விடைபெறவே விரும்புகிறேன். அதே நேரம், ஓய்வு பெறும் முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு என்னைத் தள்ள வேண்டாம் என்றுள்ளார்.

தீவுகளின் தலைமைப் பயிற்சியாளர் சிம்மன்ஸ் தெரிவிக்கையில் பலமான ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டங்களில் திறமையான வீரர்களை தேர்வு செய்வோம். இந்தத் தொடரை எந்த ஒரு வீரரையும் வழியனுப்புவதற்காக பயன்படுத்த முடியாது. என்று தெரிவித்துள்ளதால் சந்தர்போலின் வேண்டுகோள் எடுபடாது போலவே தெரிகிறது. (ரி)



# டோனி போல வரவேண்டும்

டோனி போல சிறந்த இலக்குக் காப்பாளராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சாதிக்க வேண்டும். என்று இந்திய டெஸ்ட் அணியின் புதிய இலக்குக்காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள விதிமன் சகா விருப்பம் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் பத்தாம் திகதி பங்களாதேஷ் செல்லவுள்ள இந்திய அணி ஒரு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. டெஸ்ட் ஆட்டம் முதலாவது ஆட்டமாக ஜூன் பத்தாம் திகதி ஆரம்பமாகின்றது. டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து டோனி ஓய்வு பெற்றதால், டோனியின் இடத்துக்கு சகா தெரிவுசெய்யப்பட்டார்.

டோனியின் இடத்துக்கு தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக தெரிவிக்கையிலேயே சகா இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக சகா மேலும் தெரிவித்ததாவது டெஸ்ட் ஆட்டங்களில்; டோனிக்கு பதிலாக செயல்பட இருப்பது மகிழ்ச்சி. டோனியின் இடத்தை பூர்த்தி செய்வது கடினம். இலக்குக்காப்பாளராக மட்டுமல்லாமல் துடுப்பாட்டத்திலும் சிறப்பாக செயல்பட்டார். டோனியின் தலைமைத்துவத்தை டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா இழப்பது வருத்தமளிக்கிறது. ஆனால் ஹோக்லிக்கும் சிறந்த தலைமைத்துவம் உண்டு. இந்தியாவில் இருக்கும் சில ஆடுகளங்களைப்போல்தான் பங்களாதேஷ் ஆடுகளங்களும். எனவே சிறந்த கூட்டுமுயற்சியை வெளிப்படுத்தி பங்களாதேஷை வீழ்த்துவோம் –என்றார். (ரி)



# சேவாக் பயப்படமாட்டார் கோஹ்லி சாதனைகள் படைப்பார்

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் சேவாக்குக்கு பந்து வீச ஆசைப்படுவதாக முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார். மேலும் சவால்களை தான் விரும்புவதாகவும், பரபரப்பான ஆட்டத்தில் விளையாட தனக்கு அதிகம் பிடிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

சேவாக் தொடர்பாக கபில்தேவ் தெரிவித்ததாவது சேவாக் உத்வேகமிக்க, துடிப்பான ஒரு வீரர். அவருக்கு பந்தை எங்கு வீசினாலும் விளாசுவார். ஆபத்தான பந்து என்று அதை விடமாட்டார். அவருக்கு பந்துவீச நான் ஆசைப்படுகிறேன். பந்துப்பரிமாற்றங்களைக் கடத்தும் வீரர்களுக்கு பந்துவீச எனக்கு ஆசை இல்லை. சவாலை எதிர்கொள்ள தயார்ராக இருக்கும் துடுப்பாட்டக்காரர்களைதான் நான் விரும்புவேன். இந்த வகையில் ஹோக்லியையும் எனக்குப் பிடிக்கும் என்று தெரிவித்துள்ளார். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் நடால், ஜோகோவிக், முர்ரே வலுவான ஆதிக்கம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடால், ஜோகோவிக், முர்ரே ஆகியோர் வலுவான ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

மூன்றாவது சுற்றில் ஆஸ்திரேலியாவின் தனாசி கோக்கினாகிஸுடன் மோதிய முதல்தர வீரரான நோவாக் ஜோகோவிச் 6-4, 6-4, 6-4 என்ற நேர் செற்களில் வென்று காலிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகப்படுத்திக் கொண்டார். மற்றொரு மூன்றாவது சுற்றில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே 6-4, 6-2, 6-3 என்ற நேர் செற்களில் ஆஸ்திரேலியாவின் நிக் கிரிஜியாசை வீழ்த்தினார்.

நடப்பு சம்பியனான ரபேல் நடால் மூன்றாவது சுற்றில் ரஷ்யாவின் கஸ்னெட்சோவை எதிர்கொண்டார். இதில் அபாரமாக விளையாடிய நடால் 6-1, 6-3, 6-2 என்ற நேர் செற்களில் வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார். பிரான்ஸ் வீரர் ஜெரிமி சார்டி, குரோஷியாவின் மரின் சிலிச் ஆகியோரும் 4வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். (ரி)

## வெறுப்படைந்த சரபோவா



பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் தரப்படுத்தலில் 2ஆம் நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான ரஷ்யாவின் மரியா சரபோவா தனது முதல் சுற்று ஆட்டத்தில் எஸ்டோனிய வீராங்கனை கனேபியை எதிர் கொண்டார். வழக்கம் போல சரபோவா 6-2, 6-4 என்ற நேர் செட்களில் ஆட்டத்தைக் கைப்பற்றினார். இதனால் உற்சாகமடைந்த சரபோவா ரசிகர்கள் மைதானத்தில் கூக்குரலிட ஆரம்பித்தார்கள்.

டென்னிஸ் ஆட்டத்தின் முடிவில் வெற்றி பெறும் வீராங்கனை ஆடுகளத்தில் தொலைக் காட்சிக்கு பேட்டியளிப்பது வழக்கம். கனேபிக்கு எதிரான ஆட்டத்தின் முடிவில் ரசிகர்கள் தொடர்ந்து கூக்குரல் இட்டதால் எரிச்சலடைந்த சரபோவா, ஆடுகளத்தில் தொலைக்காட்சிக்கு பேட்டியளிக்க மறுத்து வெளியேறினார். (ரி)

## வீனஸ் அதிர்ச்சி வெளியேற்றம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் வீனஸ் வில்லியம்ஸ் முதல் சுற்றிலேயே வெளியேறி அதிர்ச்சியளித்துள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் தரப்படுத்தலில் 15ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், சக நாட்டு வீராங்கனையான ஸ்லோன் ஸ்டீபன்ஸை எதிர் கொண்டார். சமீப காலமாக திறனை இழந்து தவிக்கும் வீனஸ் வில்லியம்ஸ் நேற்றைய ஆட்டத்திலும் சொதப்பினார். அதிலும் சர்வீஸில் தொடர்ந்து தவறுகள் செய்தார். திரும்பங்களுக்கான அடிகளும் துல்லியமாக அமையவில்லை. இதனால் இந்த ஆட்டத்தில் 7-5, 6-1 என்ற நேர் செற்களில் வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தி இரண்டாம் சுற்றில் அடியெடுத்து வைத்தார் ஸ்லோன் ஸ்டீபன்ஸ்.

தரப்படுத்தலில் 12ஆம் நிலை வீராங்கனையான கரோலினா பிளிஸ்கோவா, சீன வீராங்கனை ஜுங்குடன் மோதினார். முதல் செட்டில் ஜுங் நிலைத்து ஆடினாலும் அவரது சர்வீஸ்களை முறியடித்த பிளிஸ்கோவா ஆட்டத்தில் வெற்றி பெற்றார். (ரி)



## பாரிஸில் காதல் அலையாம்

இந்திய அணியின் முன்னணி வீரரான ரெய்னா தனது குழந்தைப் பருவ தோழியான பிரியங்கா சவுத்ரியை சமீபத்தில் திருமணம் செய்தார்.

அதன் பின்னர் ஐ.பி.எல். தொடர்களில் விளையாட சென்றுவிட்டார். இதனால் அவரால் மனைவியுடன் நேரத்தை செலவிட முடியவில்லை. ஐ.பி.எல். தொடரில் விளையாடிக் கொண்டிருக்கும் போது கூட, என்னால் மனைவியை பிரிந்து இருக்க முடியவில்லை என்று தனது ருவிட்டர் வலைதளத்தில் பதிவிட்டிருந்தார். இந்த நிலையில் ஐ.பி.எல். தொடர்கள் முடிவடைந்து விட்டதால், ரெய்னா தனது மனைவியை அழைத்துக் கொண்டு பாரிஸிக்கு தேனிலவு சென்றுள்ளார். மனைவியுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட செல்பி புகைப்படத்தை ருவிட்டரில் பதிவேற்றி பாரிசில் காதல் அலை எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் புகைப்படம் இணையத்தில் தீயாய்ப் பரவி வருகிறது. (ரி)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகளவிலான வேலை வாய்ப்புக்களை உடைய தகவல் தொழில்நுட்ப

வெளிவாரி பட்டப்படிப்பு

கொழும்பு பல்கலைக்கழகம்

க.பொ.த சா.த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்க முடியும். வேலை தேடுவோர், பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது. விரிவுரைகள் வார, வாரஇறுதி, மாலை ஞாயிறு மட்டும் என் மூன்று பிரிவுகளாக நடைபெறும். புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்குType

MCS BIT<Name> & send to 772395895

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில்

A/L பொருளியல்

வினாவிடை வழிகாட்டிகள்

முழுப்பாடத்திட்டமும் அடங்கியவை

| | | விலை: ரூபாவில் | |
|---|---|---|---|
| | உற்பத்திச் செலவு 90<br>சந்தை அமைப்புகள் 90 | MCQ | வினாவிடை |
| தரம் 12 | BOOK - 1 | 70 | 150 |
| | BOOK - 2 | 120 | 180 |
| | BOOK - 3 | 70 | 250 |
| தரம் 13 | BOOK - 4 | 100 | 200 |
| | BOOK - 5 | 120 | அச்சில் வெளிவரும் |
| | BOOK - 6 | 90 | |
| | வணிகவங்கிகள் | → | 90 |
| | புள்ளிவிவரங்கள் | → | 90 |

வே. கருணாகரன்

ஆசிரியர்: பொருளியற்கல்லூரி

பூபாலசிங்கம் புத்தகசாலை

அன்னை புத்தகசாலை

ENGLISH

ஆசிரியர்

திரு. P.T. புனிதராஜா

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின் பின்னர், இலங்கையின் முதற்தர ஆங்கில இலக்கண ஆசிரியர் திரு. P.T. புனிதராஜா அவர்களின் ஆங்கில வகுப்புகள் மீண்டும் யாழ். நகரில் ஆரம்பமாகின்றன.

ஆங்கில இலக்கண சூத்திரங்களையும், சூத்திர அட்டவணைகளையும், பயன்படுத்தி முப்பது மணித்தியாலங்களில் ஆங்கில இலக்கணம் எவ்வித சந்தேகங்களுக்கும் இடமின்றி கற்பிக்கப்படும்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அரச, தனியார் அலுவலர்களுக்கும், ஏற்ற வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாட திட்டங்களின் மூலம் ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

THE EXCELLENT ENGLISH LEARNING CENTRE

முதலாம் மாடி 133/8A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(SISIL WORLD இற்கு முன்பாக FRANCIS TRADERS மேல் மாடி)

| காலை வகுப்புகள் | ஆரம்பம்: | மாலை வகுப்புகள் |
|---|---|---|
| Batch I 5.45-7.45<br>Batch II 9.30 - 11.30 | 05.06.2015 | Batch III 3.00-5.00<br>Batch IV 5.30 - 07.30 |

07777 33 404, 071 44 50 379



நயினா தீவு

இந்து கலாசார அபிவிருத்தி சபை

விசேட அறிவித்தல்

ஆரம்பம்:- 1973 பதிவு இலக்கம்: HA/4/3A

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாளின் திருவருளால் 1973 இல் ஆரம்பிக்கப்பட்ட நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபை கடந்த நாற்பத்திரண்டு வருடங்களாக நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த உயர் திருவிழா காலத்தில் மஞ்சத் திருவிழா தொடக்கம் தெப்பத்திருவிழா வரையும் (07 தினங்கள்) ஆலய முன்றிலில் வடக்குப் புறமாக அலங்காரப்பந்தல் அமைத்து குடிதண்ணீர், குளிர்பானங்கள், கோப்பி ஆகிய பானங்களையும், தேர்த்திருவிழா அன்று காலை அம்பாள் திருத்தேரில் திரு வீதி சுற்றி வந்ததும் அடியவர்களுக்கு பொதி செய்யப்பட்ட அருட்பிரசாதத்தையும் (சக்கரைப் பொங்கல்) அடியவர்களுக்கு சிறப்பான முறையில் வழங்கி வந்துள்ளது.

கடந்த ஆண்டு முதல் ஆலயக்கொடியேற்றத் திருவிழா தொடக்கம் தெப்பத் திருவிழா வரையும் பதினாறு தினங்கள் தாக சாந்திப் பணியை சிறப்பான முறை யில் நடத்த வேண்டுமெனவும் வழமைபோல் தேர்த்திருவிழா அன்று காலை பொதி செய்யப்பட்ட அருட்பிரசாதத்தையும் (சர்க்கரைப்பொங்கல்) வழங்க வேண்டுமென சபை தீர்மானம் செய்து சகல ஒழுங்குகளையும் மேற்கொண் டுள்ளது. என்பதனை அடியார்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

எமது சபையின் இவ் அருட்பணிகளுக்கு நிதியை வழங்கி வரும் தர்மசீலர்கள் வர்த்தகப்பெருமக்கள் மற்றும் நிதி வசூல் அட்டை மூலம் நிதியை சேகரித்து வழங்கி வரும் நிர்வாக சேவை அதிகாரிகள், வங்கிச்சேவையாளர்கள், திணைக் களச்சேவையாளர்கள், கல்விச்சேவையாளர்கள் ஆகியோர்களுக்கும், சபையின் பணிகளுக்கு தேவையான பொருள்களை (சீனி மூடைகள், எசன்ஸ் போத்தல்கள், கோப்பித்தூள், கோப்பி, தீட்டுப்பச்சை அரிசி மூடைகள், சர்க்கரை மூடைகள்) அன்பளிப்பாக வழங்கிவரும் வர்த்தகர்கள் மற்றும் சபையின் பணிகளுக்கு உடல் உழைப்பை வழங்கி வரும் அருள் தொண்டர்களுக்கும் அன்னையின் அருள் வேண்டி பிரார்த்திப்பதுடன் எமது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாண்டும் தங்களிடம் எமது சபையால் நியமிக்கப்பட்ட அருட்பணி யாளர்கள் வருவார்கள் அவர்களிடம் வழமை போல் உங்களால் இயன்ற பண உதவி பொருள் உதவி முதலியவற்றை கொடுத்து நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபையின் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

நேடியாகப் பணம் கொடுக்க விரும்புபவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வர்த்தக வங்கியில் மேற்படி சபையின் பெயரில் உள்ள (Nainathivu Hindu Cultural Development Society AC NO: 8060077643) வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்பில் இடலாம்.

| தலைவர் | பொருளாளர் | செயலாளர். |
|---|---|---|
| ஆர்.ஆர்.பி.ஸ்ரீந்தரசிங்<br>உரிமையாளர்,<br>பூபாலசிங்கம் புத்தகசாலை<br>யாழ் - கொழும்பு<br>T.P:-011 2422321 | பொ.வி.மகாலிங்கம்<br>முகாமையாளர்,<br>பூபாலசிங்கம் புத்தகசாலை<br>யாழ்ப்பாணம்.<br>T.P:-021 222 6693 | வே.ச.வி.சபாநாதன்<br>ஓய்வுநிலைக்கான,<br>குடியேற்றத்திட்ட அதிகாரி. |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org